161

POLICE CONSTABLES' GUIDE

(REVISED)

(சீர்திருத்தப்பட்ட)

போலீஸ் கான்ஸ்டேபில்களின் கயிட்.

சென்னபட்டணம் :
கவர்ன்மெண்ட் அச்சுக்கூட ஸூபரின்டெண்டென்ட்
அவர்களால் அச்சிடப்பட்டது.

1915.

கான்ஸ்டேபில்களின் கயிட்.

அட்டவணை.

அதிகாரம் I.

அதிகாரம் II.

கிரிமினல் புரோசீஜர் கோட், போலீஸ் ஆர்டர்கள், சாக்ஷிய ஆக்ட் இந்தியன் பீனல் கோட்.

அதிகாரம் III.

விசேஷமானவும் ஓரிடத்துக்குரியவுமான சட்டங்கள்.

பக்கம்

அதிகாரம் IV.

தினசரி செய்யவேண்டிய பொதுவான அலுவல்கள்.

அனுபந்தம்.

விளக்கிக்காட்டல்.

(சீர்திருத்தப்பட்ட)

கான்ஸ்டேபில்களுடைய கயிட்.

அதிகாரம் I.

போலீஸ் சர்விசின் பொது நிபந்தனைகள்.

1. **யோக்கியதாபத்திரம்.**—*போலீஸ் உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும் திருப்திகரமான ஒரு யோக்கியதா பத்திரத்தையும், இதற்கு முந்திய நடக்கையைக் குறிக்கும் ஒரு நன்னடக்கைப் பத்திரத்தையும்,—*

(1) *தான் வசிக்கும் கிராம முனிசீபிடமிருந்தாவது,*

(2) *தகுந்த சர்க்கார் உத்தியோகஸ்தரிடமிருந்தாவது,*

ஆஜர் செய்யவேண்டும்.

2. **தொழில்.**—*ஒவ்வொரு நபரும் தன் காலத்தை சர்க்கார் அலுவலுக்கே செலுத்தவேண்டும். வெளிப்படையாய் அனுமதிபெற்றிருந்தாலொழிய வேறு யாதொரு வியாபாரத்திலாவது அலுவலிலாவது பிரவேசிக்கக்கூடாது.*

3. **சட்டங்களின் விதிகளுக்குக் கீழ்ப்படிதல்.**—*போலீஸ் சர்விஸ் சீர்பாட்டுக்காக அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் விதிகளுக்கும் சட்டங்களுக்கும் ஒவ்வொரு நபரும் உடனே கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.*

4. **லேவாதேவி.**—*ஜில்லா சூபரிண்டெண்டு துரையவர்களால் குறிப்பிடப்பட்டு உத்திரவு செய்யப்படுகிற கடன்களை உடனே செலுத்தவேண்டியது. போலீஸ் உத்தி*

யோகஸ்தன் எம்முகாந்திரத்திலேயாவது மற்ற போலீஸ் உத்தியோகஸ்தனுடன் லேவாதேவி செய்யக்கூடாது. போலீஸ் கான்ஸ்டேபில் கோர்ட்டாரால் இன்சால்வெண்ட் என்று தீர்மானிக்கப்பட்டாலும், தன் சம்பளத்தில் ஓர் பாகம் அடிக்கடி ஜப்தி செய்யப்பட்டாலும், தொடர்ச்சியாய் 2 வருஷத்திற்கதிகமாய் அவன் சம்பளத்தில் ஜப்திசெய்ய்ப்பட்டாலும், அவன் வேலேயினின்று நீக்கப்படுவதற்குரியவனே.

5. **சர்விசிலிருந்து நீங்குதல்.**—ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் பிரத்தியேகமான உத்திரவில்லாமல் வேலேயை விட்டுவிடக்கூடாது. யாதாமொருவனுக்குத் தன் வேலேயை விட்டு நீங்கவேண்டுமென்கிற எண்ணம் இருந்தால் அவன் தன் எண்ணத்தை எழுத்துமூலமாய் தெரிவித்த தினம் முதல் இரண்டு மாதம் வாயிதாவுக்குள்ளாகவும் நீங்கக்கூடாது.

6. **இனும்.**—மேல் அதிகாரிகளுடைய் உத்திரவில்லாமல் அவர் எப்போதாகிலும் எதைப்பற்றியாவது நேராகவாகிலும் அயலாரைக்கொண்டாகிலும் இனும், கட்டணம், முதலிய ஈவுகளேப் பெற்றுக்கொள்ளக்கூடாது.

7. **தண்டனே.**—ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் உத்தியோகத்திற்கு லாயக்கில்லாமையைப்பற்றியாவது அஜாக்கிரதையைப்பற்றியாவது துர்நடத்தையைப் பற்றியாவது வேலேயைவிட்டு நீக்கப்படலாம். சொற்ப தப்பிதங்களுக்காக அவரை ஜில்லா சூபரிண்டெண்டு அசிஸ்டண்ட் சூபரிண்டெண்டு யுக்தப்படி சஸ்பெண்டு செய்யலாம் அல்லது வேறு விதமாக தண்டிக்கலாம்.

8. **சர்க்கார் சாமான்களை ஒப்புவித்தல்.**—போலீஸ் கான்ஸ்டேபில் வேலையைவிட்டு நீங்கும்போது அவனுக்குசர்க்கார் செலவில் கொடுத்திருக்கப்பட்ட ஒவ்வொரு சாமான்களையும் ஒப்புவித்துவிடவேண்டியது. எந்த சாமான் எவ்வளவு காலத்துக்கு உபயோகிக்கப்படவேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளை அந்தக் காலத்துக்குப் பிறகு ஒப்புவிக்கவேண்டியதில்லை. தனக்கு குடியிருக்கும்பொருட்டு கொடுத்திருக்கப்பட்ட லயன் வீடுகளையும் ஒப்புவித்துப்போகவேண்டும்.

9. **ராஜினுமா கொடுத்ததின்பின் மறுபடியும் தாக்கல்.**—ஒரு தடவை வேலையை ராஜினுமா கொடுத்தவன் மறுபடியும் தாக்கல்செய்துகொள்ள இஷ்டப்பட்டால், அவனை தாக்கல் செய்துகொள்ளக்கூடுமானுல் மாத்திரம், டிப்டி இனிஸ்பெக்டர் ஜெனரல் அவர்களுடைய உத்திரவில்லாமல் தாக்கல்செய்துகொள்ளப்படமாட்டான். அப்படிப்பட்டவன் மறுபடியும் ஜில்லா மெடிகல் ஆபீசரால் பரீட்சை செய்யப்பட்டு உத்தியோகத்திற்கு லாயக்கென்று சர்டிபிகேட் அடையவேண்டும்.

10. **முந்திய சர்வீஸ்.**—சர்விசிலிருந்து வேலையை ராஜினுமா கொடுத்த கான்ஸ்டேபில் மறுபடியும் தாக்கலானுல் அவனுடைய முந்திய சர்விஸ்கள் பென்ஷனுக்காவது கிராடுயிட்டிக்காவது சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. ஆனுல் ராஜினுமா கொடுத்த கான்ஸ்டேபில் ஒரு வருஷத்திற்குள் மறுபடி தாக்கலாகும்பட்சத்தில் இனிஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் முந்திய சர்விசை கிராடுயிட்டிக்காவது பென்ஷனுக்காவது சேரும்படி உத்திரவுசெய்ய

லாம். இதுவிஷயமாய் அவர்களுக்குமறுபடிதாக்கலானவுடனே மனுசெய்துகொள்ளவேண்டும். ஆனால் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுதலை விலக்கிக்கொள்ளும்பொருட்டு ராஜினமா கொடுத்தவர்கள் மறுபடியும் தாக்கலானால் அவர்களுக்கு முந்திய சர்விஸ் சேர்த்துக்கொடுக்கப்படமாட்டாது.

போலீஸ் கான்ஸ்டேபிலாக தாக்கலாகும்போது
பெற்றுக்கொள்ளும் சாமான்கள்.

ஒவ்வொரு கான்ஸ்டேபிலுக்கும் தாக்கலாகும்போது அடியிலகண்ட சாமான்களும், கிட்டும், கொடுக்கப்படும் :—

(1) சன்னது.
(2) மெடிகல் ஹிஸ்டரி ஷீட்.
(3) டிபால்டர் ஷீட்.
(4) சர்விஸ் புஸ்தகம்.
(5) நோட் புஸ்தகம்.
(6) கான்ஸ்டேபில் கைட் (Guide).
(7) கிட்.

இவைகளை சரியான ஸ்திதியில் வைத்துக்கொள்ள அவன் ஜவாப்தாரியாவான்.

(i) சன்னது.—போலீஸ் இனிஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் முத்திரை அடங்கிய A பாரத்தில் கொடுக்கப்பட்ட ஒரு சர்டிபிகேட். கான்ஸ்டேபில் எந்த ஜில்லாவில் தாக்கலானானே அந்த ஜில்லா சூபரிண்டெண்டு துரையவர்களால் கையெழுத்துப்போட்டு ஷை கான்ஸ்டேபிலுக்கு கொடுக்கப்படும். இதனால் போலீஸ் உத்தியோகஸ்

தனுக்குள்ள அதிகாரத்தையும் சுதந்தரத்தையும் குறிக்கும்.

வேலையிலிருந்து சஸ்பெண்டு செய்யப்பட்டாலும் டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் வேறெந்தக்காரணத்தினுலாவது வேலையிலிருந்து நீக்கிவிடப்பட்டாலும் அந்த சர்டிபிகேட் பிரயோஜனப்படாது.

மேலும் உடனே அதைசன்னதை மேலான அதிகாரிகளிடத்தில் வாபீசு செய்துவிடவேண்டும்.

(ii) **மேடிகல் ஹிஸ்டரி ஷீட்.**—இது சர்விசிலிருக்கும் ஒவ்வொரு கான்ஸ்டேபிலினுடைய தேகஸ்திதியையும் நல்லொழுக்கத்தையும் பற்றிய ஓர் குறிப்பு.

இது எப்போதும் ஸ்டேஷன்அவுஸ் ஆபீசரிடமிருக்கும். கான்ஸ்டேபில் சீக்காய் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காகப் போகும்போது ஸ்டேஷன் அவுஸ் ஆபீசரால் அவரிடத்தில் கொடுக்கப்படும். அப்போது ஆஸ்பத்திரியில் அவனுடைய வியாதியின் தன்மையைப்பற்றி ஒவ்வொரு சமயத்திலும் மெடிகல் ஆபீசரால் அதில் எழுதப்படும்.

(iii) **டிபால்டர் ஷீட்.**—இது கான்ஸ்டேபில் செய்த தப்பிதங்களையும் அதற்காக அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளையும் எழுதிவைக்கும் ஓர் ரிகார்டு. இது ஸ்டேஷன்அவுஸ ஆபீசரிடத்திலாவது இனிஸ்பெக்டரிடத்திலாவது இருக்கும். இதில் பதிவுகள் அவசியமான போது அவர்களால் செய்யப்படும்.

(iv) **சர்விஸ் புஸ்தகம்.**—இது ஒரு சிறிய புஸ்தகம் (பாரம் நெ. 51. ஒ. எம்.) இதில் கான்ஸ்டேபில் இந்த டிபார்ட்மெண்டில் தாக்கலான தேதி, அவன் பிறந்த தேதி, சொந்த ஊர், முதலிய விவரங்களும் அவன் படிப்

பின் திறமும் சர்விசில் ஸ்டேஷனைவிட்டு ஸ்டேஷன் மாற்றுதல், அவனுக்கு ஏதாவது வெகுமதிகள் கிடைத்தால் அவை முதலியவைகளும் எழுதப்பட்டிருக்கும். ஒவ்வொரு கான்ஸ்டேபிலிடத்திலும் இந்த சர்விஸ் புஸ்தகம் இருக்கும். அதில் மேலதிகாரிகளால் உத்திரவான பதிவுகள் இனிஸ்பெக்டர் அல்லது சப் இனிஸ்பெக்டரால் செய்யப்படும்.

(v) **நோட் புஸ்தகம்.**—போலீஸ் உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரும் வைத்திருக்கவேண்டும். அதில் அவர்கள் செய்த வேலைகளையும் தினசரி பார்த்த இடங்களையும் குற்றங்களையும் கெட்டநடத்தைக்காரரையும்பற்றிக் கிடைத்த சமாசாரங்களையும், பீட்டிலாவது, ஸ்பெஷல் டூட்டியிலாவது இருக்கும்போது செய்த வேலையின் முழுவிவரத்தையும் இன்னும் பொதுநன்மையைக் குறித்து ஏதாவது சமாசாரங்களையும் எழுதவேண்டியது.

குறிப்பு.—ஒவ்வொரு தடவையும் எழுதும்போது மேலே தேதியும் இடமும் குறிக்கவேண்டியது. ஒவ்வொரு நாளும் வேலை முடிந்தவுடன் அடியில் கையெழுத்துசெய்து மறுபடியும் தேதி குறிக்கவேண்டும். நோட் புஸ்தகங்களை ஸ்டேஷன் ரைட்டர் வசத்தில் வைக்கவேண்டும். பிரதிதினமும் ஸ்டேஷனிலிருந்து டியூட்டியினபேரில் செல்லும்போது ஸ்டேஷன் ரைட்டரிடம் வாங்கிக்கொண்டு டியூட்டியிலிருந்து திரும்பிவந்தவுடன் ஸ்டேஷன் ரைட்டரிடம் கொடுக்கவேண்டும். அதிலுள்ள பதிவுகளை ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் தினப்படி செக்செய்து அவரால் கையெழுத்துசெய்யப்படும்.

கிட் பரிசோதனை.—கிட் காண்பிக்கும்படி உத்திரவிடப்படும்போது கீழே வரைந்துள்ள படத்தில்கண்டபடி வரிசையாய் வைக்கவேண்டியது :—



குறிப்பு.—(1) படத்தில் காண்பிக்கப்பட்ட வஸ்துககளில் கான்ஸ்டேபில்மேல் போட்டிருக்கும் உடுப்பு சேர்க்கவில்லை.

(2) சில இடங்களில் ஜர்சி, தண்ணீர் ஒழுகாத கேப் (cape) போர்வை. இவை முதலானவைகளும் கொடுக்கப்பட்டிருந்தால் அவைகளை கிட்படத்தில் காலியிடத்தில் வைக்கவேண்டியது.

பிரமோஷன்.

1. ஒவ்வொரு கான்ஸ்டேபிலுக்கும் போலீசில் 3 வருஷம் சர்விசானபிறகு அந்த சர்விசு அங்கீகரிக்கப்பட்டால், ஒரு ரூபாய் அதிகச்சம்பளம் (இன்கிரிமெண்டு) கொடுக்கப்படும்.

2. அதற்குமேல் 7 வருஷம் அங்கீகரிக்கப்பட்ட சர்விசு செய்தால், மறுபடியும் ஒரு ரூபாய் அதிகச்சம்பளம் கொடுக்கப்படும்.

3. அதற்குமேல் 7 வருஷம் அங்கீகரிக்கப்பட்ட சர்விசு செய்தால், மறுபடியும் ஒரு ரூபாய் அதிகச்சம்பளம் கொடுக்கப்படும்.

ஒருவனுடைய சர்வீஸ் அங்கீகரிக்கப்பட்டதா இல்லையா என்பது சூபரிண்டெண்டு துரையவர்களால் பிரதி தடவையும் அவனுடைய டிபால்டர் ஷீட்டிலுள்ள பதிவுகளைப்பார்த்து தீர்மானிக்கப்படும். சம்பளமில்லாத லீவிலிருந்த காலமும் சஸ்பென்ஷனிலிருந்த காலமும் அங்கீகரிக்கப்பட்ட சர்வீசுக்கு கணக்கிடப்படமாட்டாது.

அதிகச்சம்பளம் கொடுப்பதும் நிறுத்திவைப்பதும்.—சூபரிண்டெண்டு துரையவர்கள் கான்ஸ்டேபிலின் சர்விசை அங்கீகரிக்காத பக்ஷத்தில் ஒரு வருஷத்துக்கு மேல் படாமல் அவனுடைய அதிகச்சம்பளத்தை கொடுக்காமல் நிறுத்திவைக்கலாம். அந்தக் காலம் முடிந்தவுடன் மறுபடியும் அவர் ஆலோசித்துப்பார்த்து அதிகச்சம்பளத்தை கொடுக்கலாம அல்லது இன்னும் ஒரு வருஷத்துக்கு மேல்படாமல் நிறுத்திவிடலாம்.

அதிகச்சம்பளம் அமலுக்குவரும் தேதி.—ஒரு கான்ஸ்டேபிலுக்கு அதிகச்சம்பளம் நியாயமாய் ஏந்த மாதத்தில்

கிடைக்கவேண்டுமோ அந்த மாதம் முடிந்து மறுமாதம் முதல் தேதியிலிருந்துதான் அவனுக்கு அதிகச்சம்பளம் கணக்கிடப்படும்.

லீவிலிருக்கும்போது அதிகச்சம்பளம் கிடைப்பது.—பிரிவிலேஜ் லீவு, ஆஸ்பத்திரி லீவு, தவிர மற்ற எந்த விதமான லீவிலிருக்கும்போதும் அவனுக்கு கிடைக்கவேண்டிய அதிகச்சம்பளத்தை அவன் லீவு முடிந்தபிறகுதான் கொடுக்கப்படும்.

அதிகச்சம்பளத்தை இழந்துவிடுவது.—தண்டனையாக கான்ஸ்டேபில்களை அதிகச்சம்பளத்தை மூன்று மாதத்திற்கு குறையாமலும் 2 வருஷத்திற்கு மேற்படாமலும் இழந்துவிடும்படி உத்திரவு செய்யலாம்.

அதிகச் சம்பளவிஷயமாய் இதர டிபார்ட்மெண்டு சர்வீஸ்.—இதர கவர்ன்மெண்டு டிபார்ட்மெண்டிலிருந்த முந்திய சர்வீஸ் அதிகச்சம்பளத்திற்குச் சேராது, போலீஸ் சர்விசிலிருந்து ராஜினமா கொடுத்து மறுதாக்கலானவனுடைய முந்திய சர்விசும் அதிகச்சம்பளத்துக்குச் சேரமாட்டாது.

இனம்.

நல்ல வேலைப் பதிவு.—நல்ல வேலைப்பதிவுகள் சாமர்த்தியத்துடன் குற்றங்களை கண்டுபிடிப்பதற்காகவும் மெச்சும்படியான திறமையைக் காண்பிக்கும் வேலைகளுக்காகவும் கொடுக்கப்படும்.

2. பணம்.—

(i) குற்றங்களை கண்டுபிடித்தாலும்,

(ii) கண்ணுக்ககப்படாமலிருக்கும் பிரசித்த குற்றவாளிகளையும், தப்பித்துப்போன கைதிகளையும் விசாரித்து கண்டுபிடித்தாலும்,

(iii) நெருப்பு, தண்ணீர் முதலிய ஆபத்துகளிலிருந்து உயிர்களைக் காப்பாற்றினாலும்,

(iv) சால்ட் ஆப்காரி கேசுகளை கண்டுபிடித்தாலும்,

(v) ராணுவத்திலிருந்து ஓடிவந்தவர்களைப் பிடித்தாலும், இன்னும் இதுபோன்ற சிறந்தவேலைகளைச் செய்தாலும், பணம் வெகுமதி கொடுக்கப்படும்.

3. பிரமோஷன்.—போலீசார்செய்த நல்லவேலைக்காக சூபரிண்டெண்டு துரையவர்கள் தன் இஷ்டப்படி அவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கலாம்.

4. சக்கரவர்த்தி போலீஸ் மெடல்.—

(i) சொத்தையாவது உயிரையாவது காப்பாற்றுவதிலும் குற்றங்கள் நடக்கவொட்டாமல் தடுப்பதிலும் குற்றவாளிகளை தண்டுபிடிப்பதிலும் மேன்மையான சௌரியத்தைக் காண்பித்தாலும், சக்கரவர்த்தி போலீஸ் மெடல் கொடுக்கப்படும். இது விஷயமாக செய்யப்பட்ட துணிவான செய்கை அவன் செய்யவேண்டிய வேலையையும் கடமையையும் அனுசரித்திருக்கிறதா என்று நிர்ணயிக்கப்படும்.

(ii) உத்தியோகமுறையில் அதிகாரம நடைபெறச் செய்வதிலும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் பேர் போனவனாயிருந்தாலும்,

(iii) மும்முறமான குற்றங்களையாவது கலகத்தையாவது நெருப்பையாவது அடக்குவதில் உத்தமமான வேலை செய்தாலும்,

(iv) ராஜாங்கத்துக்குரிய சிறந்த கேசுகளை கண்டு பிடித்தாலும்,

(v) ராஜாங்க விஷயத்தில் முக்கியமான வேலைசெய்தாலும்,

(vi) சர்விசில் வெகுநாளிருந்து சிலாகிக்கக்கூடிய தங்களுடைய வேலைதிறமையை காண்பித்தாலும்,

இப்படிப்பட்ட சமயங்களில் சக்கரவர்த்தி போலீஸ் மெடல் கொடுக்கப்படும்.

5. குடிகள்கொடுக்கும் இனம்.—குடிகளால் கொடுக்கப்பட்ட வெகுமதியை ஜில்லா சூபரிண்டெண்டு அல்லது அவருக்கு மேலான உத்தியோகஸ்தர் அவர்களுடைய உத்தரவில்லாமல் வாங்கக்கூடாது.

தண்டனைகள்.

(i) எக்ஸ்ட்ரா டிரில்,
(ii) கார்டு டியூட்டீ அல்லது பெட்டிக் டியூட்டி.
(iii) எச்சரிக்கை,
(iv) கடுமையான எச்சரிக்கை,
(v) அபராதம்,
(vi) பிளாக் மார்க்.
(vii) பிரிவிலேஜ் லீவு இழத்தல்,
(viii) அதிகச்சம்பள மிழத்தல்,
(ix) ரிடக்ஷன்,
(x) சஸ்பென்ஷன்,
(xi) டிஸ்மிஸ்,
(xii) கோர்ட்டாரால் தண்டனை.

அப்பீல்கள்.

I. (a) எட்டணு (0-8-0) வுக்கு அதிகப்படாத அபராதம், பிளாக் மார்க்கு இல்லாமல் லீவு இழத்தல், எக்ஸ்ட்ரா டிரில், எக்ஸ்ட்ரா கார்டு டியூட்டி, பெட்டிக் டியூட்டி முதலிய தண்டனைகளுக்கு அப்பீல் கிடையாது.

(b) பிளாக் மார்க்கு, கடுமையான எச்சரிப்புத் தண்டனைகளுக்கு ஒரே அப்பீல்தான் உண்டு.

(c) மாதம் 25 ரூபாய்க்குக் கீழ்ப்பட்ட சம்பளமுள்ள போலீஸ் உத்தியோகஸ்தர், ரிடக்ஷன், சஸ்பென்ஷன், டிஸ்மிஸ், அல்லாத தண்டனைகளுக்கு டி. ஐ. ஜி. துரையவர்களின் உத்தரவுக்குமீறி அப்பீல் செய்துகொள்ளக் கூடாது.

II. டிஸ்மிஸல், ரிடக்ஷன், அதிகச்சம்பளமிழத்தல், சஸ்பென்ஷன் முதலிய தண்டனைகளுக்காக அப்பீல் ஷை தண்டனை உத்தரவு கிடைத்த 2 மாதங்களுக்குள்ளும், மற்ற தண்டனைகளுக்காக அந்த உத்தரவுகிடைத்த ஒரு மாதத்துக்குள்ளும் அப்பீல செய்துகொள்ளவேண்டும். மேலே சொல்லப்பட்டகாலம்கடந்து, செய்யப்பட்ட அப்பீலகள் உடனே தள்ளிவிடப்படும்.

குறிப்பு.—மினிட் காப்பிக்காக, மனுசெய்த தேதிக்கும் ஷை காப்பி அப்பீலதாரனுக்குச் சேரும் தேதிக்கும் இடையிலுள்ள காலம் அப்பீல் செய்துகொளள ஏற்பட்ட காலத்திற்கு சேரமாட்டாது.

III. மேலான உத்தியோகஸ்தரது தீர்மானத்திற்கு மீறி அனுவசியமாய் அபபீல் செய்வது அவனுடைய கீழ் [illegible] யைக்குறிக்கும்.

IV. அப்பீல்மனுவுடன் மினிட்காப்பியும், டிபால்டர் ஷீட்டின் காப்பியும் அனுப்பவேண்டும். இரண்டாவது அப்பீலாயிருந்தால் மேலே கூறப்பட்ட இரண்டு காப்பியுடன் முதல்அப்பீலின் உத்தரவு காப்பியும் சேர்த்து தாக்கல் செய்யவேண்டும். அப்பீல்தார்கள் சர்விசிலிருப்பவர்களாயிருந்தால் மேலான அதிகாரிகள் மூலமாய் அனுப்பவேண்டும்.

பிளாக் மார்க்குகளால் உண்டாகும் பாதகங்கள்.—ஒருவனுக்கு மேல்வகுப்பிலிருந்து கீழ்வகுப்புக்கு மாற்றுதலாவது அல்லது அதிகச்சம்பளம் இழக்கவாவது கூடுமென்றால் அவனுக்கு மூன்று பிளாக் மார்க்குகள் கூடினால் கீழ்வகுப்புக்கு மாற்றப்படும். அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு அதிகச்சம்பளத்தை இழக்கப்படும்.

டிப்டி இனிஸ்பெக்டர் ஜெனரல் அவர்களது பிரத்தியேகமான உத்திரவிருந்தாலொழிய ஆறு பிளாக் மார்க்கு பெற்றவன் சர்விசிலிருந்து நீக்கப்படுவான்.

ஒருவனுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிளாக்மார்க்குகளிருந்தால் அவன் பிரமோஷனுக்குத் தடையாய் இருக்கும். ஆனால் கான்ஸ்டேபிளினுடைய லீவுக்காவது அதிகச்சம்பளத்துக்காவது தடையாக ஏற்படாது.

பிளாக் மார்க்குகள் நீங்கும் விதம்.—(1) தடங்கலில்லாமல் 6 மாதம் நன்னடத்தையுடன் சர்விசு செய்தால் ஒரு பிளாக் மார்க்கு நீங்கும்.

(2) அதே விதமாக பிரதி தடங்கலில்லாத 6 மாத நன்னடத்தை சர்விசுக்குப்பிறகும் ஒவ்வொரு பிளாக் மார்க்கு நீங்கும்.

(3) தடங்கலில்லாமல் ஒரு வருஷம் நன்னடத்தையுடன் சர்விசு செய்தால் கூடுதலாயுள்ள எல்லா பிளாக் மார்க்குகளும் நீங்கிவிடும்.

(4) பிளாக் மார்க் விதிகளின்படி அல்லாமல் வேறு விதமாய் கீழ்வகுப்புக்கு மாற்றப்பட்டாலும் ஜாஸ்தி சம்பளம் இழக்கநேர்ந்தாலும் கூடுதலாயுள்ள எல்லா பிளாக் மார்க்குகளும் நீங்கிவிடும்.

லீவு இல்லாமல் ஆப்சேண்டாகுதல்.—லீவு இல்லாமல் 21 நாள், அல்லது அதற்கு மேற்பட்டு ஆப்செண்டானால் சர்விசிலிருந்து ஓடிப்போனவனாக பெயர் அடித்துவிடப்படும்.

சஸ்பேன்ஷன்.—சஸ்பேன்ஷன் விதிக்கப்பட்டால் அதனால் உண்டாகும் பாதகங்கள்—

(1) சஸ்பென்ஷனிலிருந்த காலத்துக்கு சம்பளம் இழத்தல்;

(2) கூடுதலாயிருந்த பிரிவிலேஜ் லீவும் இழத்தல்.

(3) சஸ்பென்ஷனிலிருந்த காலத்தை சர்விசினின்றும் இழத்தல்.

குற்றம் விசாரிக்கும்பொருட்டு சஸ்பேண்டு செய்யப்பட்ட கான்ஸ்டேபிலுடைய நடவடிக்கை.—(1) சஸ்பெண்டான கான்ஸ்டேபில் ஷை உத்தரவு கிடைத்தவுடன் தன் ஸ்டேஷனுபீசரிடம் கிட்டை ஒப்புவிக்கவேண்டியது.

(2) ஊரைவிட்டுப் போகவேண்டியிருந்தால் தன்னுடைய மேல்விலாசத்தை ஸ்டேஷனில் எழுதிவைத்தே போகவேண்டும்.

(3) விசாரிக்கும்பொருட்டு நேரில் வரும்படி உத்தரவு செய்தால் ஷை உத்தரவு கிடைத்த 21 நாளைக்குள்

வந்து ஆஜராகவேண்டும் ; இல்லாதபட்சத்தில் வேலையி லிருந்து ஓடிப்போய்விட்டவனுக அவனுடைய பெயர் அடிக்கப்படும்.

அவன் நடத்தையைக்குறித்த எவ்வித விசாரணைக் கும் ஆஜராகும்படி கொடுக்கப்பட்ட எல்லா உத்தரவுக் கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது. அப்படி ஆஜரா கத் தவறினல் அந்த விசாரணையானது அவனில்லாமலே நடத்தப்படும்.

(4) போலீஸ் உத்தியோகஸ்தன் சஸ்பெண்டானல் அவன் அப்போது போலீஸ் உத்தியோகஸ்தனுகமாட் டான்.

லீவு.

போலீஸ் ஆபிசருக்கு அடியில்கண்ட லீவுகள் கொடுக் கப்படும். ஆனால் அவைகள் அச்சமயத்திலிருக்கிற அவசி யத்துக்குத் தக்கபடி கொடுக்கப்படுமே யொழிய அவை களை கட்டாயமாய் கொடுக்கத்தான்வேண்டுமென்று கே ட்பதற்கு அவர்களுக்கு யாதொரு பாத்தியமுமில்லை :—

(1) பிரிவிலேஜ் லீவு.—இடைவிடாமல் சேவித்த ஒவ் வொரு 11 மாதங்களுக்கு 1 மாதம் முழுச் சம்பளத்து டன் லீவு கொடுக்கப்படும். ஆனால் இப்படிப்பட்ட லீவு அதற்கு முந்திய 6 மாதத்திற்குள் வாங்கியிருக்கக்கூடாது. இந்த லீவு 3 மாதத்திறகுமேல் சேரமாட்டாது.

(2) ஆஸ்பத்திரி லீவு.—இந்த லீவு மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் சம்பளத்துக்கு அதிகப்படாத போலீஸ் உத்தி யோகஸ்தருக்கு கொடுக்கப்படும். அவர்கள் ஆஸ்பத்திரி யிலேயே சீக்காயிருக்கும்போதாவது தாங்கள் சேவிக்கிற

ஜில்லா எட்குவார்ட்டர் அல்லது ஸ்டேஷனில் அவுட் பேஷண்டாய் வைத்தியம் செய்து கொண்டிருக்கையிலாவது அந்த வியாதி அவனுடைய துர்நடத்தையினாலே உண்டாகவில்லையென்று ஸர்டிபை பண்ணும் பட்சத்தில் அவர்களுக்கு கிடைக்கக்கூடிய மற்ற லீவைத்தவிர மூன்று வருஷ சேவகத்தில் முதல்மூன்று மாதத்திற்கு முழுச்சம்பளத்துடனும் பின் மூன்று மாதத்திற்கு பாதிச் சம்பளத்துடனும் மொத்தமாய் ஆறுமாதம் லீவ் கொடுக்கப்படும்.

(3) மெடிகல் சர்ட்டிபிகேட்டின் பேரில் லீவு.—டாக்டருடைய சர்டிபிகேட்டின் பேரில் 3 வருஷம் வரையில் சீக் லீவு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒரே தடவையில் 2 வருஷத்துக்கு மேல் கொடுக்கப்படமாட்டாது. இந்த லீவு எடுக்கிற ஒவ்வொரு தடவையிலும் முதல் 15 மாதங்களுக்கு பாதிச்சம்பளம் கொடுக்கப்படும். ஆனால் பாதிச் சம்பளமான்து மொத்தமாய் முப்பது மாதத்துக்குமேல் கொடுக்கப்படமாட்டாது. லீவின் பாக்கி காலதிற்கு கால்சம்பளம் தான் கொடுக்கபடும்.

(4) சொந்த விஷயத்தைப்பற்றிய லீவு.—இந்த லீவு ஒவ்வொரு 6 வருஷ சர்விசுக்குப் பிறகு 6 மாதம் $\frac{1}{2}$ சம்பளத்துடன் கொடுக்கப்படும் ஆனால் இதை முந்தி பர்லோ லீவு வாங்கியிராத உத்தியோகஸ்தனுக்கு மாத்திரந் தான் கொடுக்கப்படும்.

(5) பர்லோ லீவு.—10 வருஷ சேவகத்துக்கு பிற்பாடு பாதிச் சம்பளத்தில் ஒருவருஷ பர்லோவும் அதற்குமேல் 8 வருஷம் சேவித்த பிறகு மறுபடி 1 வருஷ பர்லோவும் அல்லது மொத்தமாய் 18 வருஷம் சேவித்தபிறகு 2 வரு

ஷம் பர்லோவும் கொடுக்கப்படும். ஆனால் சொந்த விஷயத்தைப்பற்றி லீவு எடுத்துக்கொண்ட ஒரு உத்தியோகஸ்தருக்கு பர்லோவுக்கு சர்விஸ் கடைசியாய் அப்போக்கொத்த லீவிலிருந்து திரும்பிவந்த தேதிமுதல்தான் கணக்கிடப்படும்.

(6) சம்பளமில்லாத லீவு.—வேறெவ்வித லீவும் ரூல்படி கொடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் அவசர நிமித்தியமாய் இந்த லீவு கொடுக்கலாம். ஆனால் இரண்டு மாதத்துக்கு அதிகப்படாமல் இந்த லீவு கொடுத்தால் மேல் சொல்லிய நிர்ப்பந்தத்தை கவனிக்கவேண்டியதில்லை. இந்த லீவு இவ்வளவு தடவை தான் கொடுக்கலாமென்று கணக்கில்லை.

(7) ஒன்றுகூடிய லீவு.—பிரிவிலேஜ் லீவோடு கூடச் சேர்த்து பர்லோ லீவு, சீக் லீவு, சொந்த விஷயத்தைப் பற்றிய லீவு அல்லது சம்பளமில்லாத லீவு எடுக்கலாம். ஆனால் இந்த இரண்டும் சேர்ந்த லீவானது ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் கீழே கண்ட நிபந்தனைக்குட்பட்டும் இருக்கவேண்டும்.

குறிப்பு.—(1) சீக் லீவு, சொந்த விஷயமான லீவு, பர்லோ லீவு, சம்பளமில்லாத லீவு, உத்தரவில்லாமல் ஆப்செண்டாயிருப்பது இவைகளெல்லாம் சர்வீசுக்கு பின்னமாக ஏற்படுவதுடன் கூட ஏற்கனவே கூடுதலாயிருக்கும் பிரிவிலேஜ் லீவையும் இழக்கவும் செய்யும். ஆஸ்பத்திரி லீவானது சர்வீசுக்கு தடங்கலாகமாட்டாது.

(2) லீவுடனாவது, லீவில்லாமலாவது ஒரே தொடர்ச்சியாய் 5 வருஷம் ஆப்செண்டாயிருந்தால் அவன் சர்க்கார் உத்தியோகத்தை விட்டவனாகவே எண்ணப்படுவான்.

பென்ஷனும் கிராடுயிட்டியும்.

பென்ஷனுக்காவது கிராடுயிட்டிக்காவது வேண்டிய சர்விஸ்.	காரணம்.	பென்ஷனுக்காவது கிராடுயிட்டிக்காவது லாயக்.
1. 10 வருஷத்துக்கு குறைந்த சர்விஸ்.	மெடிகல்சர்டிபிகேட்டின் பேரில்.	முடிந்த ஒவ்வொரு வருஷ சர்விசுக்கும் ஒரு மாதச் சம்பளம்.
2. 10 வருஷம் முதல் 24 வருஷம் வரையில்.	ஷை.	முடிந்த ஒவ்வொரு வருஷ சர்விசிலும் சராசரி சம்பளத்தில் 60 ல் 1 பாகம்.
3. 25 வருஷம் சர்விசான பிறகு.	ஷை.	சராசரி சம்பளத்தில் 60ல் 30 பங்கு அதாவது சரி பாதி.
4. 30 வருஷம் ஆன பிறகு.	தன்னிஷ்டமாய் விலகுதல்.	சராசரி சம்பளத்தில் சரி பாதி.

குறிப்பு.—(1) இதர டிபார்ட்மெண்டில் தாழ்ந்த சர்விசிலிருந்து போலீஸ் சர்விசுக்கு வந்திருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு அவ்விரண்டு சர்விசும் சேர்ந்து 30 வருஷம் முடிந்து அவர்களுக்கு தாழ்ந்த சர்விசிலும் மேலான சர்விசிலும் தனித்தனியாய் கிடைக்கக்கூடிய பென்ஷனாவது கிராடுயிட்டியாவது அவ்வளவு லாபகரமாகாத பக்ஷத்தில் மெடிகல் சர்ட்டிபிகேட்டின்பேரில் மாதம் 4 ரூபாய்க் கதிகப்படாமல் பென்ஷன் கொடுக்கப்படும்.

(2) 18-வது வயதிலிருந்து போலீஸ் சர்விஸ் பென்ஷனுக்கு கணக்கிடப்படுகிறது. ஷை உத்தியோகஸ்தர்களுக்கு 15 வருஷம் சர்விசில் 1 வருஷம் அலவன்சுடன் பெற்ற லீவும் 30 வருஷம் சர்விசில் அலவன்சுடன் பெற்ற 2 வருஷ லீவும் சர்விசுல் சேர்த்துக்கொள்ளப்படும்.

(3). போலீஸ் உத்தியோகஸ்தர்கள் 55 வயதானவுடன் இனிஸ்பெக்டர் ஜெனரலவர்கள் சர்விசிலிருக்கும்படி அனுமதி கொடுத்தாலொழிய அப்போது கிடைக்கக்கூடிய பென்ஷனுடன் சர்விசிலிருந்து விலகவேண்டியது.

(4) கான்ஸடேபில் சர்விசிலிருந்த காலத்தில் அவன் நடத்தையும் யோக்கியதையும் திருப்திகரமாயிராத பட்சத்தில் கவர்ன்மெண்டார் அவனுக்குக் கிடைக்கக்கூடிய பென்ஷன் அல்லது கிராடுயிட்டியை குறைத்து விடலாம். அவன் பென்ஷனுக்கு போகும்போது மெடிகலாபீசர் அவனுடைய கெட்ட நடத்தையினால் அவன் டியூட்டி செய்யமுடியாது என்று சர்டிபிகேட் செய்யும் பட்சத்தில் அவனுக்கு சர்விசை விட்டுப் போகும்போது கொடுக்கக்கூடிய அலவன்சை கொடுக்காமல் நிறுத்திவிடலாம் அல்லது குறைத்துவிடலாம். அவனுக்கு இருக்கப்பட்ட வியாதியானது சத்திர சிகிச்சை (operation) செய்து கொண்டால் சொஸ்தமாகக்கூடும் என்று டாக்டர் சொல்லியும் அவன் செய்து கொள்ளமாட்டேன் என்று மறுத்தால, அப்போது அவனுக்கு பென்ஷனாவது கிராடுயிட்டியாவது கிடைக்காது.

போலீஸ் ஆக்டின்படி போலீஸ் உத்தியோகஸ்தரின் அலுவல்கள்.

1. **சதாகாலம் அலுவலிலிருத்தல்.**—ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் எப்போதும் அலுவலிலிருப்பதாக எண்ணப்படுவான். அவன் சமயம் நேரும்போதெல்லாம் அலுவல் செய்யத்தயாராயிருக்கவேண்டும்.

2. **அதிகாரம்.**—ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் ஜெனரல் போலீஸ் டிஸ்டிரிக்டின் எல்லா பாகங்களிலும் தன் அதிகாரத்தைச் செலுத்தலாம்.

3. **குற்றம் நேராமல் தடுத்தல்.**—சகலவிதமான குற்றங்களையும் ஜனங்களுக்கு இடைஞ்சல்களையும் செய்யவொட்டாமல் தடுத்தல்.

4. **சமாசாரம்.**—அமரிக்கைக்கு பங்கம நேரிடுவதற்கு காரணமான சமாசாரங்களைத் தெரிந்துகொண்டு அறிக்கைசெய்தல்.

5. **குற்றங்களை கண்டுபிடித்தல்.**—குற்றவாளிகளை கண்டுபிடித்து சட்டப்படி நியாயம் செலுத்தல்.

6. **சந்தேகித்துப் பிடித்தல்.**—துன்மார்க்கர்களையும் சந்தேகிக்கப்பட்டவர்களையும் சட்டப்படி தகுந்த காரணத்துடன் பிடிக்கக்கூடியவர்களையும் பிடித்தல்.

கிராம போலீஸ்.

I. **கிராம போலீஸ் உத்தியோகஸ்தர்கள்.**—கிராம மாஜிஸ்திரேட்டும் அவர் கீழ் இருக்கப்பட்ட கிராம காவற்காரன் அல்லது கிராமத்தலையாரியுமே.

ஜில்லா மாஜிஸ்திரேட்டாருடையவும், ரிவினியூ டிபார்ட்மெண்டிலுள்ள அவர் கீழ் உத்தியோகஸ்தருடையவும் அதிகாரத்துக்கு அவர்கள் உட்பட்டவர்களே.

II. **அவர்கள்**—

(i) பிடிவாரண்டு, சோதனை வாரண்டு, ஜப்தி வாரண்டு இவைகளை நிறைவேற்றுவதிலும்,
(ii) குற்றவாளிகளைப் பிடிப்பதிலும்,
(iii) குற்றங்களை விசாரித்து கண்டுபிடிப்பதிலும்,
(iv) அநேகமாய் போலீசார் அலுவல்களை நடைபெறச் செய்வதிலும்,

போலீசாருக்கு உதவிசெய்யக்கடமைப்பட்டவர்கள்.

கிராம மாஜிஸ்ரேட்டின் அதிகாரங்கள்.—(I) கிராம மாஜிஸ்ட்ரேட்டுகள் 1816 வருஷம் 11-வது சட்டப்படி தங்கள்

கிராம சரகத்தில் நடக்கும் கீழ்கண்ட அல்ப கேசுகளை விசாரித்து தீர்ப்புசெய்ய கடமைப்பட்டவர்கள் :

மேற்கூறிய அல்பமான கேசுகளாவன:—

(i) கெட்ட வார்த்தைகளை சொல்லித் திட்டுவது,

(ii) ஒருவரையொருவர் தாக்குதல், சாதாரணமாக சண்டை போடுதல்,

(iii) கெட்ட நடத்தைக்காரர்களால் செய்யப்படாத 1 ரூபாய்க்கு அதிகப்படாத சாதாரணமான அல்ப திருட்டுகள்,

இக்கேசுகளில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டவர்களை—

(i) 12 மணிகாலத்துக் கதிகப்படாமல் கிராமச் சாவடியில் காவல் படுத்தலாம், அல்லது

(ii) அவன் ஈனஜாதியாயிருந்தால் 6 மணிக்கதிகப் படாமல் தொழுக்கட்டையில் போட்டுவைக்கலாம்.

(II) குற்றங்களை விசாரிப்பதிலும் குற்றவாளிகளை பிடிப்பதிலும் அவர்களுடைய அதிகாரங்கள்.—தங்கள் கிராம எல்லைக்குள் துர்மரணம், சந்தேகாஸ்பதமான மரணம், திடீரென்று நேர்ந்த மரணம் முதலிய கேசுகளினுடைய உண்மையை விசாரிக்கவும், போலீசார் சரியான காலத்தில் வராவிட்டால் பிரேதவிசாரணை செய்யவும் கொலைக் கேசில் சந்தேகிக்கக் கூடிய நபர்களை பிடிக்கவும் வேண்டியது.

(III) சோதனை விஷயமாய் அதிகாரங்கள்.—தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளாவிடில் திருட்டுச்சொத்துக்கள்

அப்புறப்படுப்போகுமென்று நியாயமாய் நம்புகிறதற்கு போதுமான முகாந்திரம் இருந்தால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் திருட்டுச்சொத்துகளுக்காக அவைகளை ஒளித்திருக்கும் இடங்களைச் சோதனைசெய்து குற்றவாளியாவது சொத்தாவது அகப்பட்டால் அவைகளை ஸ்டேஷனுக்கனுப்பவேண்டியது.

கிராம மாஜிஸ்டிரேட்டின் கடமைகள்.

1. **போலீசாருக்கு குற்றங்களைப்பற்றி ரிபோர்ட்செய்தல்.**—தன்னுடைய சரகத்தில் நடந்த பிடிக்கக்கூடிய குற்றங்களைப்பற்றி போலீசாருக்கும் சப்மாஜிஸ்டிரேட்டாருக்கும் ரிப்போர்ட்டு செய்யவேண்டியது.

2. **அன்னியர் ரிஜிஸ்டர்.**—தன் சரகத்தில்வந்த அன்னியர்களைப்பற்றி அதற்காக ஏற்பட்ட ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து அவர்களுடைய போக்குவரவுகளை ஸ்டேஷன் ஆபீசருக்குத் தெரியப்படுத்தவேண்டியது.

3. **கேடிகளையும் சந்தேகநபர்களையும்பற்றிய ரிஜிஸ்டர்.**—தன் சரகத்திலுள்ள பேர்போன கேடிகளையும் சந்தேகப்பட்டவர்களையும் எப்போதும் நிலையாயிருந்து குற்றஞ் செய்கிற கூட்டத்தாரையும், இந்த ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து அவர்கள் கிராமத்தில் ஆஜரில்லாததையும் மறுபடியும் கிராமத்திற்கு திரும்பிவந்ததையும் ஸ்டேஷன் அவுஸ் ஆபீசருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டியது.

4. **கான்ஸ்டேபில்களுடைய பீட் புஸ்தகங்களில் கையெழுத்து செய்தல்.**—தன் கிராமத்துக்கு கான்ஸ்டேபில் வந்தால் அவன் வந்த தேதியும் மணியும் பீட்புஸ்தகத்தில் எழுதி அதில் கையெழுத்து செய்யவேண்டியது.

அதிகாரம் II.

கிரிமினல் புரோசீஜர் கோட்.

குற்றம்.—யாதாமொன்றைச் செய்தலினுலாவது செய்யாமல் ஒழித்தலினுலாவது அந்தந்த காலத்தில் வழங்கி வருகிற சட்டங்களின்படி (இ. பி. கோ., ஸ்பெஷல் அல்லது லோக்கல் லா) தண்டிக்கப்படத்தக்கதாயிருக்கிற செய்கைக்கு குற்றம் என்று சொல்லப்படும். அது இருவகைத்து.

பிடிக்கக்கூடிய குற்றம்.—போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு எந்தக் குற்றம் செய்தவனை வாரண்டில்லாமல் பிடிக்கவாவது அல்லது மாஜிஸ்திரேட்டின் உத்திரவில்லாமல் விசாரிக்கவாவது அதிகாரமுண்டோ அப்பேர்ப்பட்ட குற்றத்திற்கு பிடிக்கக்கூடிய குற்றம் என்று சொல்லப்படும்.

பிடிக்கக்கூடாத குற்றம்.—போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு எந்தக் குற்றம் செய்தவனை வாரண்டில்லாமல் பிடிக்கவாவது அல்லது மாஜிஸ்திரேட்டின் உத்திரவில்லாமல் விசாரிக்கவாவது அதிகாரமில்லையோ அப்பேர்ப்பட்ட குற்றத்திற்கு பிடிக்கக்கூடாத குறறம் என்று சொல்லப்படும்.

சம்மன்.

இது மாஜிஸ்திரேட்டின் முன்பாகவாவது, கோர்ட்டின் முன்பாகவாவது குறிப்பிட்ட தேதி, மணியில் ஆஜராகும்படி யாதாமொரு நபருக்கு கொடுக்கப்பட்ட இரண்டு பிரதிகளுள்ள எழுத்துமூலமான உத்திரவு.

சம்மன் ஜாரி—(1) நேரில் செய்தல்.—எவனுக்குச் சம்மன் பிறக்கப்பட்டிருக்கிறதோ அவனிடத்தில் ஒரு பிரதியை நேரில்கொடுத்து அவன் பெற்றுககொண்டதாக மற்றொரு பிரதியின் பின்பக்கத்தில் அவனுடைய கையெழுத்து வாங்கவேண்டியது.

(2) சம்மன் யாருக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அவனை தீரவிசாரித்தும் அகப்படாத பக்ஷத்தில் அவனோடுகூட வாசம்செய்யும் அவனுடைய குடும்பத்தி லுள்ள வயதுவந்த ஓர் ஆண்பிள்ளையிடமாவது, ராஜதானிபட்டணங்களில் அவனுடைய வேலைக்காரனிடமாவது சம்மனின் நகலைக் கொடுத்து அசலில் அவன் கையெழுத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

குறிப்பு—மேற்சொன்ன இரண்டு வழிகளிலும் அந்த சம்மன்தாரனுக்காவது அவனில்லாத பட்சத்தில் அவனுடைய குடும்பத்தில் வயுதவந்த ஆண்பிள்ளைக்காவது எழுதப்படிக்கத் தெரியாமலிருந்தால் தப் பாது அவனுடைய கைநாட்டை அசலின் பின்பக்கத்தில்வாங்கி கூடுமானல் பெருந்தன்மையான இரண்டு சாக்ஷிகளின் கையெழுத்துவாங்கி ஜாரிசெய்த போலீஸ் உத்தியோகஸ்தனும் கையெழுத்து செய்யவேண்டும்.

ஒட்டி ஜாரி.—சம்மன் வாங்கக்கூடிய நபர் ஒருவரும் இல்லாவிட்டால் சம்மன்தாரன் வாசம்செய்கிறவீட்டில் நன்றாய்த்தெரியும்படியான இடத்தில் ஒரு பிரதியை ஒட்டவேண்டியது.

போலீஸ் சம்மன்.—போலீசாரும் கேஸின் உண்மையை விசாரணைசெய்யும்போது தன் ஸ்டேஷன் சரகத்திலாவது அடுத்த ஸ்டேஷன் சரகத்திலாவது வாசம்செய்யும் சாக்ஷிகளை ஷை கேசில் அவர்களுக்குத் தெரிந்த சமாசா

ரத்தைச் சொல்ல தங்கள் முன்பாக ஆஜராகும்படி எழுத்துமூலமான உத்திரவு அனுப்பலாம். இதுவும் இரண்டு பிரதிகள் அடங்கியதே.

இவைகளையும் கான்ஸ்டேபில்கள் கோர்ட்டார் சம்மனை ஜாரிசெய்வதுபோல ஜாரிசெய்யலாம்.

அரஸ்டு.

எவனைப்பிடிக்கவேண்டுமோ அவன் தானாய் வராவிட்டாலும், வருகிறதாய்ச் சொல்லாவிட்டாலும் அவனைப் பிடித்து காவல்படுத்தவேண்டியது.

ஒரு நபரை வாரண்டுடனாவது வாரண்டில்லாமலாவது பிடிக்கலாம்.

அரஸ்டைப்பற்றிய பொதுவிதிகள்.

ஒரு நபரைப் பிடிக்கும்போது அவன் தப்பித்துக்கொள்ளாதபடிக்காவது எதிர்க்காமலிருப்பதற்காவது எவ்வளவு நிர்ப்பந்தம் அவசியமோ அவ்வளவுதான் செய்யலாம். அந்தமாதிரி நிர்ப்பந்தம் உபயோகிக்கப்படுவதில் கிழ்ச்சொல்லிய விதிகளை யனுசரிக்கவேண்டும்:—

(1) **துன்பம்.**—பிடிபட்ட நபர் எதிர்க்காமல் நமது வசப்படுவதற்கும் அவசியமானால் அவன்பலத்தைக் குறைக்கவும் எவ்வளவு நிர்ப்பந்தம் அல்லது துன்பம் செய்யலாமோ அவ்வளவுதான் செய்யலாம். ஆனால் அடியில் சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களைத்தவிர மற்றபடி மரணம் உண்டுபண்ணக்கூடாது.

(2) **மரணம்.**—(i) எதிர்க்கப்பட்ட மனிதன் மரணம் அல்லது ஆயுசுபரியந்தம் தீவாந்தரம் விதிக்கக்கூடிய

கொலை, கூட்டக்கொள்ளைமுதலிய கேசில் சம்பந்தப்பட்டிருந்தால் அவனைப்பிடிக்க வேறுவிதமொன்றுமில்லை என்று தோன்றும் பக்ஷத்தில் அதி அவசியமானால் மாத்திரம் அவன் விஷயத்தில் மரணம் உண்டுபண்ணலாம்.

(ii) மேலும் அரஸ்டு செய்யப்படுகிறவன் போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு மரணம் அல்லது கொடுந்துன்பம் உண்டுபண்ணுவான் என்று தோன்றும்பக்ஷத்தில் ஷை உத்தியோகஸதர்கள் தன் சொந்தப்பாதுகாப்புக்காக மரணம் உண்டுபண்ணலாம்.

(3) வீட்டுக்குள் நுழைவது.—பிடிபடவேண்டியவன் ஏதாவது வீட்டிற்குள் நுழைந்தாலும் அல்லது வீட்டிலேயே இருந்தாலும் அல்லது அவ்விதமாக நம்பக்கூடியதாயிருந்தாலும் அந்தவீட்டில் குடியிருக்கப்பட்டவனையாவது அல்லது அந்த வீடு யார்வசத்திலிருக்கிறதோ அவனையாவது சோதனைசெய்வதற்காக தங்களை உள்ளேவிடும்படியாயும் வேண்டிய ஒத்தாசைகளை செய்யும்படியாயும் கேட்கலாம்.

(4) வீட்டை உடைத்து நுழைதல்.—வீட்டிற்குள் நுழையாதபடி தடுத்துவிட்டால் போலீஸ் உத்தியோகஸ்தன் வெளிக்கதவையாவது உட்கதவையாவது ஜன்னலையாவது உடைத்து உள்ளேநுழைந்து குற்றவாளியைத் தேடலாம்.

(5) அந்தப்புரம்.—அந்தப்புரத்துக்குள் நுழைவதற்குமுன் அங்கேயிருக்கப்பட்ட ஸ்திரீகளில் பிடிக்கவேண்டியவர்கள் தவிர மற்றவர்களை அப்புறம்போக எச்சரிக்கைசெய்து அதற்காக தகுந்த ஒத்தாசைகள் செய்ய வேண்டும்.

குறிப்பு.—வாரண்டில்லாமல் அரஸ்டு செய்யக்கூடிய கேசுகளிலும், சோதனை வாரண்டு நிறைவேற்றுவதிலும், வாரண்டு பிறக்கக்கூடிய கேசுகளில் வாரண்டு பிறப்பதற்குள் பிடிபடவேண்டிய நபர் தப்பித்து ஓடிப்போய்விடுவானென்று தோன்றும் பக்ஷத்திலும் மேலே சொன்னவிதிகளை யனுசரிககலாம்.

அரஸ்டு செய்யப்பட்ட நபரிடமிருந்து அபாயகரமான ஆயுதங்களையும் சந்தேகப்பட்ட சொத்துக்களையும் கைபற்றுவதற்காக சோதனைசெய்வது.—பிடிபட்ட நபரை உடனே சோதனை செய்து அவனிடமிருக்கும் அபாயகரமான ஆயுதங்களைக் கைப்பற்றவேணடியது ; அவனிடத்தில் ஏதாவது சந்தேகாஸ்பதமான சொத்துக்களிருந்தால் அதையும் கைப்பற்றிக்கொண்டு பத்திரமாய் வைக்கவேண்டும்.

ஸ்திரீகள் சோதனை.—மானத்திற்கு எவ்வித பங்கமும் வராமல் ஸ்திரீயை வேறொரு ஸ்திரீயைக்கொண்டே சோதனை செய்விக்கவேண்டும்.

பிடிவாரண்டு.

அர்த்தம்.—பிடிவாரண்டு என்பது ஒரு நபரை அரஸ்டு செய்து கோர்ட்டுமுன்பாக ஆஜர்ப்படுத்தும்படி மாஜிஸ்திரேட்டினுடைய க்கையெழுத்தும் கோர்ட்டு சீல் முத்திரையும்போட்டு ஸ்டேஷனுபீசருக்கு கொடுக்கப்பட்ட எழுத்துமூலமான உத்திரவு. ' அவனை ஜாமீன்பேரில் விட்டுவிடலாம் என்று அந்த வாரண்டில் எழுதியிருந்தால் அப்போது அவனை ஜாமீன்பேரில் விட்டுவிடவேண்டியது.

2. **இண்டார்ஸ்மேண்டு.**—ஸ்டேஷனுபீசர், வேறெந்த போலீஸ் உத்தியோகஸ்தனுக்கும் அந்த வாரண்டை நிறைவேற்றும்படி இண்டார்ஸ் செய்யலாம்.

3. நிறைவேற்றுமிடம்.—பிடிவாரண்டை பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த இடங்களிலும் நிறைவேற்றலாம்.

பிடிவாரண்டை நிறைவேற்றுவதற்காக குறிக்கப்படும் கான்ஸ்டேபில் அலுவல்.—(1) முதலில் அந்த வாரண்டானது தன்பெயருக்கு இண்டார்சு செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டியது.

(2) அப்படி இண்டார்ஸ்மெண்டு இல்லாவிட்டால் யார்பேரில் அந்த வாரண்டு அனுப்பப்பட்டிருக்கிறதோ அவரை (அநேகமாய் ஸ்டேஷன் ஆபீசராய்தான் இருக்கும்) அதில் இண்டார்சு செய்யச் சொல்லவேண்டியது.

குறிப்பு.—இண்டார்சு செய்யப்பட்ட கானிஸ்டேபிலுக்கு வேறு விலக்கமுடியாத எந்த சந்தர்ப்பத்திலாவது அதை நிறைவேற்ற முடியாத பக்ஷத்தில் அவன் வேறொரு கானிஸ்டேபிலுக்கு இண்டார்சு செய்யலாம்.

(3) ஜாமீன்பேரில் விடக்கூடிய வாரண்டா அல்லது அப்படி விடக்கூடாத வாரண்டா என்று பார்க்கவேண்டியது. ஜாமீன் வாரண்டாயிருந்தால் ஸ்டேஷனிலிருந்து போகும்போதே ஜாமீன் பத்திரம் (52-ம் நெ. பாரம்) ஒன்று எடுத்துப்போகவேண்டும்.

வாரண்டு நிறைவேற்றுதல்.—(1) வாரண்டை நிறைவேற்றப்போகிற போலீஸ் உத்தியோகஸ்தன் வாரண்டுநபருடைய உறவினர்களும் சிநேகிதர்களும் வசிக்கும் இடங்களிலும் அவன் சாதாரணமாய் போகக்கூடிய இடங்களிலும் சுறுசுறுப்பாயும் ஜாக்கிரதையாயும் விசாரித்து ஷெ நபரை கண்டுபிடிக்கவேண்டியது. அப்படி அவனைக் கண்டவுடனே அரஸ்டு செய்வதற்கு முந்தி அந்த வாரண்டிலுள்ள சமாசாரத்தை அவனுக்குத் தெரியப்படுத்தவே

ண்டியது. ஷை உத்தரவைக் காட்டச்சொன்னால் காட்டவேண்டியது. ஆனால் அவன் கையில் அதைக் கொடுக்கக்கூடாது.

(2) ஜாமீன்பேரில் விடக்கூடாத வாரண்டாயிருந்தால் அந்த நபரைப்பிடித்தவுடனே தாமதமன்னியில் ஷை வாரணடை பிறப்பித்த மாஜிஸ்டிரேட்டிடம் அவனேயும் அவனே பிடித்தவுடன் சோதனையிலகப்பட்ட ஏதாவது அபாயகரமான ஆயுதங்களிருந்தால் அவைகளையும் ஆஜர் செய்யவேண்டியது.

(3) கைதி முதலியவைகளை மாஜிஸ்டிரேட்டார் ஒப்புக்கொண்டதாக போலீஸ் உத்தியோகஸ்தன் தன்னுடைய பாஸ்போர்ட்டில் (116-நெ. பாரம்) மாஜிஸ்டிரேட்டாரால் எழுதிவாங்கவேண்டியது.

(4) ஜாமீன்பேரில் விடக்கூடிய வாரண்டாயிருந்து வாரண்டுநபரிடம் சமாசாரம் தெரிவித்தவுடனே அவன் ஜாமீன் கொடுப்பதாகச் சொன்னால் ஜாமீன்பத்திர பாரத்தைப் பூர்த்திசெய்து அவனுடைய கையெழுத்தும் பின்பக்கத்தில் ஜாமீன்தார்கள் கையெழுத்தும் வாங்கவேண்டியது. அவர்கள் கையெழுத்துத்தான் என்பதற்கு நிறைவேற்றிவரும் போலீஸ் உத்தியோகஸ்தனும் வேறு இரண்டு பெருந்தன்மையுள்ள சாக்ஷிகளும் கூடுமானால் கிராம மாஜிஸ்டிரேட் அல்லது கணக்கன் அத்தாக்ஷியாக கையெழுத்து செய்யவேண்டியது. எதிரிக்கு ஜாமீனாக வந்தவர்கள் போதுமான யோக்கியதை அல்லது சொத்துள்ளவர்களா என்பதை கிராம அதிகாரிகளிடமிருந்தும் ஊர் குடிகளிடமிருந்தும் தெரிந்துகொள்ளவேண்டியது.

(5) வாரண்டுநபரை உடனே விட்டுவிட்டு, வாங்கின ஜாமீன் பத்திரத்தை ஸ்டேஷன் ஆபீசர் மூலமாய் மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பவேண்டும்.

(6) வாரண்டுநபர் வாரண்டில் கண்டபடி ஜாமீன் கொடுக்கமுடியாவிட்டால் ஜாமீன்பேரில் விடக்கூடாத வாரண்டுநபரைப்போலவே அவனை பிடித்து மாஜிஸ்டிரேட் முன்பாக ஆஜர் செய்யவேண்டும்.

(7) வாரண்டை திருப்பி மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்புவதற்கு முன் நிறைவேற்றின உத்தியோகஸ்தன் அதன் பின்பக்கத்தில் தேதி, மணி, இடம், எவ்விதமாய் அரஸ்டு செய்யப்பட்டது என்கிற விவரங்களையும் அல்லது தகுந்த ஜாமீன் வாங்கி விடுதலைசெய்த விஷயங்களையுங் குறித்து எழுதி கையெழுத்து செய்யவேண்டியது.

வாரண்டைப் பிறப்பித்த மாஜிஸ்டிரேட்டின் சரகத்துக்கப்பால் அதை நிறைவேற்றல்.—(1) வாரண்டு கொண்டுபோகிற போலீஸ் உத்தியோகஸ்தன் வாரண்டை நிறைவேற்றுவதற்குமுன் எச்சரகத்தில் இதை நிறைவேற்றவேண்டியிருக்கிறதோ அவ்விடத்து மாஜிஸ்டிரேட்டிடமாவது அல்லது ஸ்டேஷன்ஆபீசர் அந்தஸ்துக்கு கீழ்ப்படாத போலீஸ் உத்தியோகஸ்தனிடமாவது இண்டார்சு பெற்றுக்கொண்டு அவசியமானால் அவ்வூர் போலீசாரின் ஒத்தாசையின்பேரில் வாரண்டை நிறைவேற்றலாம்.

(2) முதலில் இவ்வெண்டார்ஸ்மெண்ட் வாங்குவதற்கு ஏற்படும் தாமதத்தினாலே வாரண்டு நிறைவேற்றுவதற்கு தடங்கலாகும் என்று தோன்றும்பக்ஷத்தில் போலீஸ் உத்தியோகஸ்தன் அப்படிப்பட்ட இண்டார்ஸ்மெண்டில்லாமலே நிறைவேற்றலாம்.

(3) வாரண்டு பிறப்பித்த கோர்ட்டார் நபரை அரஸ்டு செய்த இடத்திலிருந்து 20 மைல்களுக்குள்ளிருந்தாலும் அல்லது பிடிபட்ட இடத்திற்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டாரை காட்டிலும் சமீபத்திலிருந்தாலும் ஷை நபரை காலதாமதமன்னியில் அவரிடத்திற்குக் கொண்டு போகவேண்டியது. அப்படியில்லாத பக்ஷத்தில் யாருடைய சரகத்தில் நபர் அரஸ்டு செய்யப்பட்டாரோ அந்த மாஜிஸ்டிரேட் முன்பாக மேல்நடவடிக்கைக்காக அந்த நபரை ஆஜர்ப்படுத்தவேண்டும்.

போலீசாரால் வாரண்டில்லாமல் அரஸ்டு செய்யும் சந்தர்ப்பங்கள்—

(1) கி.பு.கோ. 54, 151 செ. படி எந்த போலீஸ் உத்தியோகஸ்தனும்,

(2) கி.பு.கோ. 55 செ. படி ஸ்டேஷனுபீசர் அந்தஸ்துக்குக் கீழ்ப்படாத உத்தியோகஸ்தரும், அல்லது, ஷை யாருடைய எழுத்துமூலமான உத்தரவு பெற்ற கீழ்ப்பட்ட வேறு போலீஸ் உத்தியோகஸ்தனும்,

(3) பிடிக்கக்கூடாத கேசில்கூட கி.பு.கோ. 57 செ. படி குற்றவாளியின் நிஜமான பெயரும் இருப்பிடமும் தெரியாத விசேஷித்த சந்தர்ப்பங்களில், எந்த போலீஸ் உத்தியோகஸ்தனும் வாரண்டு இல்லாமல் அரஸ்டு செய்யலாம்.

(கி.பு.கோ. 54, 151 செ. படி) வாரண்டில்லாமல் எந்த போலீஸ் உத்தியோகஸ்தனும் அரஸ்டு செய்யும் சந்தர்ப்பம்.

பிடிக்கக்கூடிய குற்றம்.—(1) பிடிக்கக்கூடிய குற்றத்தில் எவனாவது சம்பந்தப்பட்டிருந்தாலும் அல்லது சந்தேகிக்கப்பட்டிருந்தாலும்,

(2) பிடிக்கக்கூடிய குற்றத்தைச் செய்ய எண்ணங் கொண்டிருந்து அதை வேறெவ்விதமாகவும் தடுக்க முடியாமல் போனாலும்,

குறிப்பு.—சாதாரணமாய் இவ்விதமான எண்ணமிருப்பதை முன்னடியே ஸ்டேஷனுபீசருக்காவது அதற்கு மேற்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தருக்காவது தெரியப்படுத்தவேண்டியது.

(3) கன்னக்களவு ஆயுதம் வைத்திருத்தல்.—நியாயமான காரணமின்றி எவனுவது கன்னக்களவு ஆயுதம் வைத்திருந்தாலும்,

(4) சந்தேகப்பட்ட சோத்துக்கள் வைத்திருத்தல்.—எவனுவது திருட்டுச்சொத்து என்று நம்பக்கூடிய சொத்துக்களை வைத்திருந்தாலும்,

(5) விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளி.—வாரண்டுக்ககப்படாமல் தலைமறைவாய் ஒளித்துக்கொண்ட அல்லது ஓடிப்போன குற்றவாளியையும்,

குறிப்பு.—விளம்பரம் செய்யட்பட்ட குற்றவாளிகளின் லிஸ்ட் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் தொங்கவிடப்பட்டிருக்கும். அதற்கு "எ" லிஸ்ட் என்று சொல்லப்படும்.

(6) தடுக்கிறவன்.—எவனுவது போலீஸ் உத்தியோகஸ்தன் அலுவல் நடத்திக்கொண்டிருக்கையில் தடுக்கிறவனையும்,

(7) தப்பித்து ஓடினவன்.—நியாயமான காவலிலிருந்து தப்பித்துக்கொண்டு போகிறவனையும் அல்லது தப்பித்துக்கொண்டுபோக எத்தனப்படுகிறவனையும்,

குறிப்பு.—போலீஸ் உத்தியோகஸ்தன் அப்படிப்பட்டவனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் இந்தியாவில் எங்கேயும் போகலாம்.

(8) வேலையைவிட்டு நழுவி வந்தவன்.—மகாராஜா சக்கரவர்த்தி அவர்களுடைய ராணுவத்திலிருந்தாவது கப்பற்சேனையிலிருந்தாவது இந்தியன் மெரீன் சர்விசிலிருந்தாவது நழுவி வந்தவனையும்,

(9) எக்ஸ்டிராடிஷன் குற்றவாளி.—எவனாவது பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வெளியில் குற்றங்களைச் செய்திருந்தாலும அல்லது செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டிருந்தாலும் அப்பேர்ப்பட்டவனை எக்ஸ்டிராடிஷன் அல்லது பியூஜிடிவ் குற்றவாளி ஆக்ட்படி பிடிக்கக்கூடியதாயிருந்தாலும்,

(10) விடுதலை செய்யப்பட்ட கைதி.—கி.பு.கோ. 565 செ. 3-வது பிரிவுபடி இருப்பிடம் தெரிவிக்க ஏற்படுத்தப்பட்ட விதிக்கு விரோதமாய் நடக்கிற விடுதலை கைதியையும்,

குறிப்பு.—565 செ. படி இருப்பிடம் தெரிவிக்கவேண்டிய விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகளினுடைய லிஸ்டு ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் இருக்கும்.

(11) பிடிக்கக்கூடாத குற்றத்தைச் செய்த நபர்கள்.—போலீஸ் உத்தியோகஸ்தன் முன்பாக பிடிக்கக்கூடாத குற்றத்தைச் செய்தாலும், அல்லது அப்படிப்பட்ட குற்றத்தைச் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டாலும் போலீசார் கேட்டதின்பேரில் தன்னுடைய நிஜமான பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேன் என்றாலும் பொய்யான பெயரையும் இருப்பிடத்தையும் சொன்னாலும் அப்பேர்ப்பட்டவனையும்,

வாரண்டில்லாமல் அரஸ்டுசெய்யலாம்.

பிடிக்கக்கூடாத கேசில் நடவடிக்கை.—பிடிக்கக்கூடாத கேசில் ஒரு நபரை அரஸ்டு செய்வதற்கு முன் அவனு

டைய பெயரையும் இருப்பிடத்தையும் போலீஸ் உத்தியோகஸ்தன் கேட்கவேண்டியது. போலீசார் திருப்திகரமாகும்படி அவன் சரியான பெயரையும் இருப்பிடத்தையும் சொன்னால் அவைகளையும் பிராது செய்தவன் பெயரையும் இருப்பிடத்தையும் தாக்கல் செய்துகொண்டு அது வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடாத கேசாகையாலும் போலீசார் யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக்கூடாதாகையாலும் மாஜிஸ்டிரேட்டிடம் தாவாசெய்துகொள்ளுமபடி பிரியாதுகாரனுக்குச் சொல்லிவிடவேண்டியது. எதிரியை அரஸ்டு செய்யக்கூடாது. ,இந்த சமாசாரத்தை ஜெனரல்டைரியில் எழுதுவதற்காக ஸ்டேஷனுபீசரிடம் ரிப்போர்ட் செய்யவேண்டியது.

நாடோடிகளையும் வழக்கமாய்த் திருடுகிறவர்களையும் அரஸ்டு செய்தல்.,—கான்ஸ்டேபில்களின் அதிகாரம்.—கீழே சொல்லப்படுகிறவர்களைப்பிடிக்க கான்ஸ்டேபிலுக்கு அதிகாரமில்லை. ஆனால் அவர்களை கவனித்து ஸ்டேஷனுபீசருக்கு ரிபோர்ட் செய்யவேண்டியது.

அவசியமானால் ஸ்டேஷனுபீசர் அவர்களைப்பிடிக்கும்படி உத்தரவு செய்யலாம்:—

(1) ஒளிந்துகொண்டிருக்கப்பட்டவர்கள்.—ஸ்டேஷன் சரகத்தில் பிடிக்கக்கூடிய குற்றத்தை செய்யும்பொருட்டு பதுங்கியிருப்பவன் ;

(2) வெளிப்படையான தகுந்த ஜீவனமில்லாதவர்கள்.—வெளிப்படையான தகுந்த ஜீவனமில்லாதவன் அல்லது தன்னைக்குறித்து திருப்திகரமான சமாசாரம் சொல்லமாட்டாதவன் ;

(3) **வழக்கமாய்த் திருடுகிறவன்.**—வழக்கமாய் கொள்ளையடிக்கிறவன், கன்னமிடுகிறவன், திருடுகிறவன் அல்லது திருட்டுச்சொத்து வாங்குகிறவன் அல்லது வழக்கமாய் மிரட்டிச் சொத்தைப்பிடுங்குகிறவன்,

ஒருவனை அரஸ்டுசெய்ய எழுத்துமூலமான உத்திரவு.—ஸ்டேஷனுபீசர் நேரிலில்லாத சமயத்தில் ஓர் நபரை பிடிக்கும்படி ஒரு கான்ஸ்டேபிளுக்கு உத்தரவுசெய்தால் எவனைப் பிடிக்கவேண்டுமோ அவன்பெயரையும் என்ன குற்றத்திற்காக அல்லது விஷயத்துக்காக பிடிக்கவேண்டுமென்பதையும் கண்டு எழுதி ஓர் எழுத்துமூலமான உத்தரவு கொடுக்கவேண்டியது. அந்த உத்தரவை பிடிவாரண்டு மாதிரியாக நிறைவேற்றவேண்டியது பிடித்த மனிதனை மேல்நடவடிக்கைக்காக ஸ்டேஷனுபீசரிடம் கொண்டு போகவேண்டியது.

வாரண்டுடனாவது வாரண்டில்லாமலாவது அரஸ்டு செய்தபின் நடவடிக்கை.

அரஸ்டுசெய்யப்பட்டவர்களை நடத்தும் விதம்.—(1) (கி. பு. கோ. 50 பிரிவுப்படி) பிடிபட்ட நபரை தப்பித்துக்கொள்ளாதபடி எவ்வளவு நிர்ப்பந்தம் செய்யலாமோ அதற்கு மேலாகவாவது, தவிர (P. O. 323 படி) அவனை அனுவசியமான கொடுமையாகவாவது அவமரியாதையாகவாவது நடத்தக்கூடாது.

(2) **வண்டி உபயோகப்படுத்துதல்.**—எப்போதும் வண்டி உபயோகிக்கக்கூடிய நல்ல ஸ்திதியிலிருக்கப்பட்டவர்களாயிருந்தால் அவர்களுடைய சொந்த செலவின்

பேரில் பந்தோபஸ்துக்குக் குறைவுவராமல் வண்டியில் கொண்டுபோகலாம்.

(3) **ஆஜராகவேண்டிய இடம் வந்தவுடன் நடவடிக்கை.**—பிடிபட்டவனை எந்த இடத்தில் ஆஜர்ப்படுத்தவேண்டுமோ அந்த இடம் வந்தவுடனே அவனை ஜாமீன்பேரில் விடாமல் லாக்கப்செய்வதாயிருந்தால் அவனைச் சோதனைசெய்து அவன் உடுத்தியிருக்கும் துணியைத்தவிர மற்ற சொத்துக்களைக் கைப்பற்றவேண்டியது.

ஹிந்துபெண்பிள்ளைகளுடைய தாலிகளை கழற்றக்கூடாது.

கைதிகள் கட்டிக்கொண்டிருக்கும் துணிகளைத்தவிர கைப்பற்றிக்கொண்ட மற்ற சாமான்களை ஒவ்வொரு ஸ்டேஷனிலுள்ள (௱0 நெ. பாரம்) சோதனை ரிஜிஸ்டரில் எழுதி அதில் ஸ்டேஷனாபீசர், ஸ்டேஷன் ரைட்டர், கைதி, மூன்றுபேரும் கையெழுத்துப் போடவேண்டும்.

போலீசார்வசத்தில் கைதியை வைத்திருத்தல்.—(i) வாரண்டில்லாமல் பிடிபட்ட நபரை போலீசார்பிடித்த நேரத்திலிருந்து 24 மணிக்கதிகமாய் தங்கள்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர்களை ஸ்டேஷனாபீசர் மாஜிஸ்திரேட்டாருக்கு அனுப்புவதற்காக காலதாமதமன்னியில், ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகவேண்டியது.

(ii) கைதிகளை ரிமாண்டுக்காக மாஜிஸ்டிரேட்டிடம் ஞாயிற்றுகிழமையாயிருந்தாலும் ஆஜர்ப் படுத்தவேண்டியது.

குறிப்பு.—போலீசார்வசத்தில் வைத்திருக்க ஏற்பட்ட 24 மணி நேரத்தில் அவர்களை பிடித்த இடத்திலிருந்து போலீஸ் ஸ்டே-

ஷனுக்கும் அங்கேயிருந்து மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கும்போகப் பிடிக்கும் காலம் சேராது.

அரஸ்டு செய்யப்பட்டவனை விடுதலை செய்தல்.—போலீசாரால் பிடிபட்டவனை—(i) ஆஜர் ஜாமீன் வாங்காமலாகிலும், (ii) முச்சலிக்கா வாங்காமலாகிலும், (iii) மாஜிஸ்திரேட்டினுடைய பிரத்தியேகமான உத்திரவு இல்லாமலாகிலும், விடுதலை செய்யக்கூடாது.

பொதுஜன ஒத்தாசை.

தனக்கு சகாயம் செய்யும்படி நியாயமாய்க் கேட்கிற மாஜிஸ்டிரேட்டிற்காகிலும் போலீஸ் உத்தியோகஸ்தனுக்காகிலும் ஜனங்கள் கீழே சொல்லப்பட்ட சங்கதிகளில் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(1) **தப்பித்தல்.**—போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு யாரை அரஸ்டுசெய்ய அதிகாரமுண்டோ அவனைப்பிடித்தல் அல்லது அவன் தப்பித்து ஓடாமல் தடுத்தல்,

(2) கலகம் வரவொட்டாமல் தடுக்கையிலாவது அதை அடக்குகையிலாவது,

(3) ரெயில்வே, கால்வாய், தந்தி (டெலிகிராப்) அல்லது இதர சர்க்கார் சொத்துக்கு தீங்குசெய்ய எத்தனிப்பதை தடுத்தல்.

குறிப்பு.—உதவிசெய்ய மறுத்தலுக்கு ஏற்பட்ட தண்டனை.—நியாயமாய் ஒத்தாசைகேட்டும் செய்யாவிட்டால் அவனுக்கு மாஜிஸ்டிரேட்டின் முன்பாக குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டதின்பேரில் 6 மாதம்வரைக்கும் வெறுங்காவலாவது 500 ரூ. வரையில் அபராதமாவது அல்லது இரண்டும் சேர்த்தாவது தண்டனை விதிக்கலாம்.

போலீஸ் உத்தியோகஸ்தனல்லாதவன் காவல் படுத்துதல்.—(கி. பு. கோ. 59 செ.) போலீஸ் உத்தியோகஸ்தனல்லாதவன்—

(1) வாரண்டில்லாமல் பிடிக்ககூடியதும் ஜாமீன் பேரில் விடக்கூடாததுமான குற்றத்தைத் தன் எதிரில் செய்யப்பார்த்தால் அக்குற்றவாளியையும்,

(2) விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளியையும், வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

அரஸ்டு செய்தபிறகு நடவடிக்கை.—(1) அரஸ்டு செய்யப்பட்டவனை போலீஸ் உத்தியோகஸ்தனிடமாவது ஒப்புவிக்கவேண்டியது அல்லது சமீபத்திலிருக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்காவது கொண்டுபோகவேண்டியது.

(2) அப்படிப்பட்ட குற்றவாளி போலீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டால் அவன்—

(i) கி. பு. கோ. 54, செக்ஷன்படி பிடிக்கக்கூடிய குற்றங்களில் எதையாவது செய்திருக்கிறான் என்று நம்புவதற்கு முகாந்தரம் இருந்தால் அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் அவனைக் காவலில் எடுத்துக்கொள்ள வேண்டியது.

(ii) அல்லது அவன் பிடிக்கக்கூடாதகுற்றத்தைச் செய்திருப்பதாகத்தோன்றி அவனைக்கேட்கும்போது நிஜமான பெயரையும் இருப்பிடத்தையும் சொல்லமாட்டேன் என்றாலும் அல்லது பொய்யான பெயரையும் இருப்பிடத்தையும் சொன்னாலும் அவனைக் காவல்படுத்தவேண்டியது.

அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் அப்படி காவல் படுத்தினவனை உடனே ஸ்டேஷனுக்கு கொண்டுபோய்

மேல்நடவடிக்கைக்காக ஸ்டேஷனுபீசரிடம் ஒப்புவிக்க வேண்டியது.

(3) குற்றவாளியைப்பிடித்து ஒப்புவித்த அந்த போலீஸ் உத்தியோகஸ்தனல்லாதவன் ஸ்டேஷனுக்கு வரமாட்டேன் என்றால் அவனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் எந்த சந்தர்ப்பத்தில் பிடித்தான் என்பதையும் தெளிவாக தன் நோட்புஸ்தகத்தில் எழுதிக்கொண்டு ஸ்டேஷனுபீசரிடம் அறிவிக்கவேண்டியது.

ரெயில்வே, தபால், தந்தி உத்தியோகஸ்தர்களை
அரஸ்டு செய்தல்.

வாரண்டுடனாவது வாரண்டில்லாமலாவது அரஸ்டு செய்யவேண்டிய நபர் ரெயில், தபால், அல்லது தந்தி ஆபீசுகளில் வேலைக்காரனாயிருந்து அவனுடைய வேலையானது அவனைக் காவல்படுத்துவதினால் ஜனங்களுக்கு அபாயத்தையாவது இடைஞ்சலையாவது உண்டாக்குமானால் அவன் எங்கும் தப்பித்துக்கொள்ளாதபடி ஏற்பாடுகள்செய்து அவனுடைய மேலானஅதிகாரிக்கு அவனை டூட்டியிலிருந்து விடுவிக்கும்படி தெரியப்படுத்தவேண்டும். ஷையார் அவ்வேலைக்கு பதிலியை யேற்படுத்தி அவனை விடுவித்தவுடன் அவனை அரஸ்டுசெய்து அச்சமாசாரத்தை அவனுடைய மேலானஅதிகாரிக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

குற்றம்செய்யவொட்டாமல் போலீசார் தடுப்பது.

1. ஒவ்வொரு போலீஸ் உத்தியோகஸ்தனும் வாரண்டில்லாமல் பிடிக்கக்கூடிய குற்றங்களை நடக்கவொட்டா

மல் தடுக்கும்பொருட்டும், யாதொரு பொதுவான சொத்துக்குக்கெடுதிசெய்ய எத்தனம் செய்யப்படுவதை பார்த்தால் அதை தடுப்பதற்கும், யாதொரு பொதுவான நில அடையாளத்தையாவது கப்பல் செல்லுவதற்காக ஏற்பட்டுள்ள மிதப்பு அல்லது வேறு அடையாளத்தையாவது எடுத்துப்போடவொட்டாமலும் அவைகளுக்கு கெடுதி செய்யவொட்டாமலும் தடுப்பதற்கும், தானே பிரவேசிக்கலாம்.

2. முன்னமே கெடுதி செய்யப்பட்டிருந்தால் குற்றவாளியை மாஜிஸ்டிரேட்டாருக்கு ரிபோர்ட்செய்து சம்மன் பிறப்பிக்கும்படியாக அவனுடைய பெயரையும் இருப்பிடத்தையும் தெரிந்துகொள்ளவேண்டியது.

3. கெடுதி செய்யப்பட்டவனை எச்சரித்தும் நிறுத்தாமல் போனால் அவனைப்பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகவேண்டியது.

விளம்பரம்.

வாரண்டுக்ககப்படாமல் மறைந்துபோயாவது ஒளிந்துகொண்டாவதிருக்கிறவனை கோர்ட்டார்முன்பாககுறித்ததேதி, இடத்தில் உத்தரவுபிறந்த 30 நாளைக்குள் ஆஜராகும்படி ஷை கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட ஓர் எழுத்துமூலமான உத்திரவு.

விளம்பரம் பயிரங்கப்படுத்தும் விதம்.—(i) விளம்பரம் செய்யப்பட்ட நபர் எந்த கிராமம் அல்லது டவுனில் குடியிருக்கிறானோ அங்கே பயிரங்கமான இடத்தில் நன்றாய்த் தெரியும்படி வாசித்தல்,

(ii) (a) அவன் குடியிருக்கும் வீட்டில் அல்லது குடிநிலத்தில் நன்றாய்த் தெரியும்படியான இடத்திலாவது அல்லது அந்த டவுன் அல்லது கிராமத்தின் பயிரங்கமான இடத்திலாவது ஒட்டல்.

(b) நகலை கோர்ட் வாசலில் பிரதானமான இடத்தில் ஒட்டல்.

விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளி.—மேற்சொல்லியபடி விளம்பரம் செய்யப்பட்டவனுக்கு விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளி யென்று பெயர்.

விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளியின் சொத்து.—விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளியின் சொத்துக்களை எந்த சமயத்திலும் கோர்ட்டார் ஜப்தி செய்யும்படி உத்திரவு செய்யலாம். போலீசாரும் அந்தப்படி ஜப்திசெய்ய உத்திரவாகும்படி கேட்டுக்கொள்ளலாம்.

ஜப்தி உத்திரவு.

1. விளம்பரம் செய்யப்பட்ட குற்றவாளியினுடைய அசையும்பொருள்களை கைப்பற்றிக்கொள்ள கோர்ட்டார்ல் கொடுக்கப்பட்ட எழுத்துமூலமான உத்திரவு.

2. அந்த உத்திரவை நிறைவேற்றுகிற போலீஸ் உத்தியோகஸ்தன் அந்த உத்திரவில்கண்ட நபரின் அசையும்பொருள்களை (அதாவது எருது, மாடு, குதிரை, கலப்பை, துணிகள், பாத்திரங்கள், வீட்டு இகர சாமான்கள், நகைகள்) கைப்பற்றிக்கொண்டு கைப்பற்றின சொத்தை ஜாப்தாவுடன் ஷை உத்திரவு பிறப்பித்த கோர்ட்டாரிடம் உடனே கொண்டுபோகவேண்டியது.

ஜப்தி வாரண்டு.

குற்றவாளிகளைத் தண்டனை செய்யும்போது விதித்த அபராதத்தை அவர்கள் அவ்வுத்திரவுக்குப்பிறகு குறித்த காலத்தில் செலுத்தாவிடில் அவனுக்குச்சொந்தமான அசையும்பொருள்களை முழுவதுமாவது அதில் ஒருபாகத்தையாவது ஜப்திசெய்து விற்று ஷை அபராதத்தைச் செலுத்தும்படி போலீஸ் உத்தியோகஸ்தனுக்காவது வேறு இதர மனுஷாளுக்காவது கொடுக்கப்பட்ட எழுத்து மூலமான உத்திரவு.

அந்த வாரண்டை நிறைவேற்றினவுடனே அதை எந்த தேதியில் எவ்விதமாக நிறைவேற்றினன் என்பதை எழுதி கோர்ட்டாருக்கு திருபபியனுப்பவேண்டியது.

குறிப்பு—பாகம் பிரிபடாமல் ஒன்றாயிருக்கிற ஹிந்து குடும்பத்தில் சேர்ந்த ஓர் நபரின்பேரில் பிறந்த ஜப்திவாரண்டுக்காக அக்குடும்பச்சொத்தை கைப்பற்றவாவது விற்கவாவது கூடாது. போலீசார் அந்த வாரண்டுநபருக்கு சுயார்ச்சித சொத்துக்கள் இருக்கிறதாவென்று, தெரிந்து அதையே ஜப்தி செய்யவேண்டியது.

வீடு சோதனை.

கான்ஸ்டேபிலின் அதிகாரம்.—(i) மாஜிஸ்டிரேட்டினுடைய சோதனைவாரண்டு இல்லாமலும், தன் நேரிலேயே சோதனைசெய்யும்படி கொடுத்த உத்தரவு அல்லாமலும் தானே விசாரித்துக்கொண்டிருக்கிற கேஸ் தவிர மற்ற சமயங்களில் வீடு, கட்டடம் அல்லது வேறு இடங்களை சோதனை செய்ய கான்ஸ்டேபிலுக்கு அதிகாரமில்லை.

(ii) ஸ்டேஷனுபீசராவது கேசை விசாரிக்கும் போலீஸ் உத்தியோகஸ்தராவது கூடுமானமட்டில் சோதனையைத் தாங்களே செய்யவேண்டும்.

4

(iii) மேற்கூறிய ஆபீசர் தானேநேரில் சோதனை செய்யமுடியாதபட்சத்திலும் அந்த சமயத்தில் அச்சோதனையைச் செய்யத்தகுந்த வேறு உத்தியோகஸ்தரும் இல்லாத சமயத்திலும் தனக்குக் கீழ்ப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தனை ஷை சோதனையை நடத்தும்படி சொல்லி எந்த இடத்தைச் சோதனை செய்யவேண்டுமோ அந்த இடத்தையும் எந்த வஸ்து, தஸ்தவேஜுக்காக ஷை சோதனை செய்யப்படுகிறதோ அதையும் குறித்து ஓர் எழுத்துமூலமான உத்திரவு கொடுக்கவேண்டியது. அதற்குப் பிறகுதான் அக்கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தன் அந்த இடத்தில் அந்த சொத்துக்காக சோதனை செய்யலாம்.

(iv) அச்சோதனை செய்யப்பட்ட இடத்தில் வாய்மொழியாய் கொடுக்கப்பட்ட உத்திரவு சட்டப்படி அங்கீகரிக்கப்படமாட்டாது.

சோதனை வாரண்டு.—மாஜிஸ்டிரேட்டினால் தன்னுடையசரகத்திலுள்ள வீடு, கட்டடம் அல்லது இடத்தைச் சோதனை செய்யும்படியாய் கொடுக்கப்பட்ட எழுத்துமூலமான உத்தரவு.

சோதனை செய்யவேண்டிய காலம்.—சாதாரணமாக சூரிய உதயத்திற்குப்பிறகும் சூரிய அஸ்தமனத்திற்குமுன்னும் மத்தியில் பகல்காலத்திலேயே சோதனை செய்யவேண்டும்.

முக்கியமாய் இராக்காலத்தில் சோதனை செய்யவேண்டியதாயிருநதால் வீட்டுக்காரர்களை வெளியில் போகச் சொல்லி வீட்டை சீல் போட்டு பந்தோபஸ்துசெய்து பகல்காலம்வந்தவுடன்தான் சோதனை செய்யவேண்டும்.

மிகவும் ஆவசியகமான சமயத்தில் பகல் இரவு வித்தியாசமின்றி எக்காலத்திலும் சோதனை செய்யலாம்.

வீடு சோதனை செய்வதைப்பற்றிய பொது விதிகள்.

1. எந்த வீட்டை அல்லது காபந்துள்ள இடத்தைச் சோதனை செய்யவேண்டுமோ அதை தன்வசத்திலுடையவர்கள் சோதனைசெய்யப்போகும் உத்தியோகஸ்தர்களின் வேண்டுகோளின்பேரில் வீட்டிற்குள் பிரவேசிப்பதற்கும் சோதனை செய்வதற்கும் தகுந்த அனுகூலங்களை செய்ய வேண்டும்.

2. மேற்கூறியபடி வீட்டிற்குள் பிரவேசிக்க அனுமதி கொடுக்காவிட்டால் கட்டடத்தை உடைத்து உள்ளே நுழையலாம். நுழைந்த பிறகு வெளியேவர வழியில்லாவிட்டால் வெளியே வரும்பொருட்டும் கட்டடத்தை உடைத்து வரலாம். சோதனை செய்வதை எவ்விதத்தாலாகிலும் தடுக்கிற மனிதரைக் காவல்படுத்தலாம் (இ. பி. கோ. 54 செ. படி).

சோதனை செய்யும் விதம்.

1. சோதனை செய்வதற்குமுந்தி சோதனை செய்யப்போகிற போலீஸ் உத்தியோகஸ்தன் கூடுமானால் கிராமமாஜிஸ்டிரேட்டாரையும், அந்த இடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெருந்தன்மையான குடித்தனக்காரர்களையும் சோதனை போடுகையில் வந்திருந்து பார்க்கும்படி அழைக்கவேண்டும்.

2. சாக்ஷிகள், எந்த வீடுசோதனை செய்யப்படுகிறதோ அந்த வீட்டுக்காரனுடைய சினேகிதனாகவாவது விரோதி

யாகவாவது இருக்காமல், அதற்கு சம்பந்தமில்லாதவரா யிருக்கவேண்டும்.

3. உள்ளே நுழைவதற்குமுன்னே அந்த வீட்டின் வெளிப்புறத்தை நன்றாய்க் கவனித்து வெளியில் உள்ள சாமான்கள் உள்ளே வருவதற்கு தக்க அனுகூலங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கவேண்டியது.

4. சோதனை செய்வதற்குமுன்னே சோதனை செய்யப்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தன் அந்த சாக்ஷிகளுக்கும் வீட்டுக்காரன் அல்லது அவனுடைய பதிலிக்கும் தன் தேகத்தை சோதனை காண்பிக்கவேண்டியது.

குறிப்பு.—இப்படிச் செய்வதின் காரணம் வீட்டுக்காரன் போலீசார் தன் வீட்டுக்குள் திருட்டுச் சொத்தை கொண்டுபோய் வைத்தார்களென்று பின்னிட்டு சொல்லாமலிருப்பதற்காகத்தான்.

5. சோதனைக்கு வந்திருக்கும் சாக்ஷிகள் போலீஸ் உத்தியோகஸ்தனுடன் உள்ளேசென்று சோதனை செய்வதை கவனிக்கவேண்டியது.

6. வீட்டுக்காரனாவது அலலது அவனுடைய பதிலியாவது சோதனை செய்யும்போது கூட இருக்கலாம்.

7. அந்த கேசு பிரியாதுகாரன் அவ்விடத்திலிருந்தால் சோதனை செய்யும்போது அவனை கூடசேர்க்கக்கூடாது.

8. (i) சோதனையிலகப்பட்ட எல்லா சொத்துக்களையும் அவைகள் ஏந்த இடத்தில் அகப்பட்டன என்பதையும் குறித்து போலீஸ் உத்தியோகஸ்தனாவது அல்லது சாக்ஷிகளில் ஒருவனாவது (பாரம் நெ. 53'ல்) இரட்டையாக சோதனைஜாப்தா தயார்செய்து அவைகளில் சாக்ஷி

களும் சோதனை செய்யும் போலீஸ் உத்தியோகஸ்தனும் கையெழுத்து செய்யவேண்டும் (அச்சுபாரம் இல்லாதபட்சத்தில் சாதாரணமான கடுதாசியை உபயோகிக்கலாம்).

(ii) சோதனைஜாப்தாவில் வீட்டுக்காரனுடையவாவது அவனுக்காக இருக்கப்பட்டவனுடையவாவது கையெழுத்து வாங்கக்கூடாது.

9. எவனுடைய சொத்து அல்லது வீடு சோதனை செய்யப்படுகிறதோ அவனாவது அவனுடைய பதிலியாவது சோதனைஜாப்தாவின் நகல் ஒன்று கேட்டால் அவனுக்குக் கொடுக்கவேண்டியது.

10. எவ்வீடு அல்லது இடம் சோதனை செய்யப்படுகிறதோ அங்கேயிருக்கப்பட்டவர்கள் எதன் நிமித்தம் சோதனை செய்யப்படுகிறதோ அந்த சொத்துக்களை ஒளித்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று நியாயமான சந்தேகமுண்டானால் அப்போது அவர்களையும் சோதனை போடலாம். அப்போது சொத்துக்கள் அகப்பட்டு கைப்பற்றப்பட்டால் மேற்கூறிய பாரத்தில் (நெ. 53) சோதனை ஜாப்தா தயார் செய்யவேண்டியது சோதனை செய்யப்பட்ட மனிதன் நகல் கேட்டால் கொடுக்க வேண்டியது.

11. சோதனை ஜாப்தாவையும் அகப்பட்ட சொத்துக்களையும் அவ்விடத்துக்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பிக்க ஸ்டேஷனுபீசரிடத்தில் உடனே கொண்டுவரவேண்டியது.

சோதனை வாரண்டு பிறப்பித்த மாஜிஸ்டிரேட்டின் எல்லைக்கப்பால் அகப்பட்ட சொத்துக்களை இன்னது செய்வது.

அகப்பட்ட சொத்துக்களை சொத்துஜாப்தாவுடன் வாரண்டு பிறப்பித்த மாஜிஸ்டிரேட்டு சமீபத்திலில்லாத

பக்ஷத்தில் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டினிடத்திற்கு உடனேகொண்டுபோகவேண்டியது.

சந்தேகப்பட்டதும் வார்சு இல்லாததுமான சொத்துக்கள்.

(1) போலீஸ் உத்தியோகஸ்தன் திருடப்பட்டது என்று சந்தேகிக்கக்கூடிய சொத்துக்களையும்,

(2) அல்லது எதன் விஷயமாய் ஏதாவது குற்றம் நடந்திருப்பதாக நியாயமாய் அனுமானிக்கக்கூடியதோ அச்சொத்துக்களையும்,

(3) வார்சு இல்லாத சொத்துக்களையும் கைப்பற்றி அவ்விடத்திற்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டிடம் அனுப்புவதற்காக உடனே ஸ்டேஷனுபீசரிடம் கொண்டுபோகவேண்டியது.

மரணத்தையும் பிரேதத்தையும்பற்றி போலீஸ் கான்ஸ்டேபிலின் அலுவல்.

1. **சாதாரண மரணம்.**—சாதாரணமான மரணம் நடக்கையில் போலீஸ் கான்ஸ்டேபில் பிரவேசிக்கக்கூடாது.

2. **ரஸ்தாவில் கிடக்கப்பட்ட பிரேதம்.**—பப்ளிக் ரஸ்தாவில் அல்லது பொதுவான இடத்தில் வார்சுஅற்ற பிரேதம் கிடந்து, விசாரித்தபின்பேரில் மரணத்தைப்பற்றி யாதொரு சந்தேகமுமில்லாமலிருந்தால் அவ்விடத்து கிராமமாஜிஸ்டிரேட்டிற்கு தெரிவிக்கவேண்டியது. அவர் அந்தப்பிணத்தை புதைப்பதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்.

3. **ரயில்வே லயன்பேரில் கிடக்கும் பிரேதம்.**—அசாதாரணமாயாவது சந்தேகிக்கக்கூடியதாயாவது ரயில்பாதை

பின்மேலாவது சமீபத்திலாவது பிரேதம் கிடந்தால் போலீஸ் கான்ஸ்டேபில் உடனே ஸ்டேஷனுபீசருக்கும் கிராம மாஜிஸ்டிரேட்டுக்கும் ரிபோர்ட் செய்து அவர்கள் வருகிறவரையில் அந்தப் பிரேதத்தை தான்பார்த்துக் கொள்ளவேண்டியது.

4. **விசாரணைக்கு முன்பாக சிநேகிதர் அல்லது சொந்தக்காரர் பிணத்தண்டை வருவது.**—(i) கேஸ் விசாரணைசெய்கிற உத்தியோகஸ்தர் வரும்வரையில் அந்தக் கான்ஸ்டேபில் இறந்தவனுடைய சிநேகிதராவது சொந்தக்காரராவது பிரேதத்தண்டை வரவாவது அதை அசைக்கவாவது அதன் மேலாவது சமீபத்திலாவதிருக்கப்பட்ட வேஷ்டி, ஆயுதம், இரத்தக்குறிகள், வாந்திஎடுத்த வஸ்துக்கள், காலடிகள் இவைகளைக் கலைக்கும்படியாவது விடக் கூடாது.

(ii) **பிரேதத்தின் சமீபத்திலிருக்கப்பட்ட வஸ்துக்களை பாதுகாத்தல்**—பிரேதத்துக்குச் சமீபத்திலிருக்கிற காலடிகள், இரத்தக்கறைகள், இரத்தம், வாந்தியெடுத்த வஸ்து, சாப்பிட்ட ஆகாரம், குடித்த தண்ணீர், புகையிலே, மருந்துகள், இரத்தக்கறையுள்ள துணிகள், படுக்கை அல்லது மரக்கட்டைகள் முதலிய இதர வஸ்துக்களையும் அப்படியேவைப்பதில் வெகு ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

5. **பிரேத விசாரணை.**—(i) ஸ்டேஷனுபீசர் அல்லது மேலான போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது கிராம மாஜிஸ்டிரேட்டு அவ்விடத்திற்கு வந்தவுடனே அதற்கு சமீபத்திலிருக்கப்பட்ட பெருந்தன்மையான இரண்டு மூன்று குடித்தனக்காரர்களை அழைத்து அவர்களோடு

கூட பிரேதவிசாரணைசெய்து அவர்களால் 112 செ. பாரத்தில் ஒரு ரிப்போர்ட் தயார் செய்யப்படும்.

(ii) பிரேத பரிசோதனை.—பிரேதவிசாரணை ஆனவுடனே மரணத்தின் காரணத்தைப்பற்றி ஏதாவது சந்தேகமிருந்தால் பிரேத பரிசோதனைக்காக பக்கத்திலிருக்கப்பட்ட ஆஸ்பத்திரிக்காவது டிஸ்பென்சரிக்காவது அனுப்பப்படவேண்டும்,

பிரேத விசாரணை.

(1) ஒருவன் தற்கொலைசெய்துகொண்டதாகவாகிலும்,

(2) அல்லது வேறொருவனாலாவது யாதொரு பிராணியினாலாவது யந்திரத்தாலாவது அல்லது யாதொரு இடையூறினாலாவது மரணமடைந்ததாகவாகிலும், அல்லது

(3) வேறொருவன் குற்றஞ் செய்திருக்கிறான் என்று நியாயமாய் அனுமானிப்பதற்கு இடமிருக்கிற சங்கதிகளில் இறந்துபோனதாகவாகிலும்,

அச்சமயத்தில் பிரேதத்தைப்பற்றி செய்யப்பட்ட விசாரணைக்கு பிரேதவிசாரணையென்று பெயர்.

இந்த விசாரணையை அந்தப்பிரேதம் கிடக்கும் இடத்திலேயே அவ்விடத்துக்குச் சமீபத்திலிருக்கிற 2, 3 பெருந்தன்மையான குடித்தனக்காரர்கள் முன்னிலையில் செய்யவேண்டியது.

பிரேதவிசாரணைசெய்ய அதிகாரம் உள்ளவர்கள்.

பிரேத விசாரணையை—

(1) மாஜிஸ்டிரேட்,

(2) போலீஸ் ஸ்டேஷனவுஸ் ஆபீசர் அல்லது அதற்குமேற்பட்ட உத்தியோகஸ்தர்,

(3) மேற்கூறியவர்கள் சரியானநோத்தில் வராத பக்ஷத்தில் அதிகாரம்பெற்ற கிராமமாஜிஸ்டிரேட் அல்லது கணக்கன்,

குறிப்பு.—கிராமமாஜிஸ்டிரேட்டுக்கும் பிணத்தை பிரேதபரிசோதனைக்கு (ஆஸ்பத்திரிக்கு) அனுப்ப அதிகாரமுண்டு.

(4) ஸ்டேஷனுபீசராவது கிராம மாஜிஸ்டிரேட்டாவது அவ்விடத்திற்கு வரமுடியாதபக்ஷத்தில் அவுட்போஸ்ட்டிலிருக்கப்பட்ட எட்கான்ஸ்டேபில்,

செய்யலாம்.

பிரேதவிசாரணை ரிப்போர்ட்.—சந்தேகிக்கக்கூடிய விதமாய் ஒருவனுக்கு மரணமுண்டானால் அந்தப்பிரேதத்தைப்பற்றி விசாரணைசெய்து 112 நெ. பாரத்தில் எழுதப்படும ஓர் ரிப்போர்ட். அதை பிரேதம் இருக்கப்பட்ட இடத்திலேயே தயார் செய்யவேண்டியது.

அதில் பஞ்சாயத்தார்களும் ஸ்டேஷனுபீசர் அல்லது விசாரணைக்கு வந்திருக்கப்பட்ட வேறு உத்தியோகஸ்தரும் கையெழுத்து செய்யவேண்டியது.

பிரேத பரிசோதனைக்குப் பிரேதத்தைக்கொண்டுபோகும் கான்ஸ்டேபிலின் அலுவல்.

1. முதலில் துணியைவிரித்து மேலே கரிப்பொடியைப்போட்டு அதற்குமேல் ஒரு துணியைவிரித்து சவ

த்தைக்கிடத்தி அதற்குமேல் ஒருதுணியையும் அதன்மே ல் கரிப்பொடியையும் பரப்பி முழுவதையும் துணியினு லாவது பாயினுலாவது மூடி கூடியமட்டும் பத்திரமாய் வைக்கும்படி பார்க்கவேண்டியது.

குறிப்பு.—(i) கிராமமாஜிஸ்டிரேட்டு வேண்டிய மேற்கண்ட சாமான்களையும், கொண்டுபோவதற்கு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது.

(ii) செலவானதொகைக்கு அவ்வூர் மாஜிஸ்டிரேட் டிடத்தில் பில் (கணக்கு) கொடுத்தால் அவர் கொடுத்துவிடு வார்.

2. பிரேதபரிசோதனைக்குப் புறப்படுமுன் கான்ஸ் டேபில் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி ஸ்டேஷனுபீசரிட மிருந்தாவது வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டிடமிருந்தாவது சமீபத்திலுள்ள மெடிகல் ஆபீசருக்கு பிரேத பரிசோத னைசெய்து சர்டிபிகேட் கொடுக்கும்படிக்கு 112-ஏ மெ மோ பாரத்தில் ஒரு எழுத்துமூலமான அர்ஜி கொண்டு போகவேண்டியது.

3. அந்தச் சவத்தை மெடிகலாபீசரிடத்துக்கு எவ்வ ளவு சீக்கிரமாய் கொண்டுபோகலாமோ அவ்வளவு சீக் கிரமாய் கொண்டுபோகவேண்டும்.

4. ஆஸ்பத்திரிக்கு அல்லது டிஸ்பென்சரிக்கு வந்து சேர்ந்தவுடனே அதற்காக ஏற்பட்ட பிரேதபரிசோத னைக் கட்டடத்தில் பிணத்தை இறக்கிவிட்டு அந்த அர் ஜியை உடனே மெடிகல் ஆபீசரிடம் கொடுக்கவேண் டியது.

5. **காவல்காத்தல்.**—ஆஸ்பத்திரியில் மெடிகல்ஆபீசர் பரிசோதனை செய்யும்வரையில் காவல் காக்கவேண்டி

யது. வேண்டுமானால் அவ்விடத்து ஸ்டேஷனுபீசரிடமிருந்து வேண்டிய ஒத்தாசைகளைப்பெற்றுக்கொள்ளலாம். கோர்ட்டில் அந்தப்பிரேதம்தான் மெடிகலாபீசரால் பரிசோதனைசெய்யப்பட்டதென்று ரூபிப்பதற்காக அவன் பரிசோதனைசெய்யும் இடத்திலிருக்க வேண்டியது.

6. பிரேதத்தை பிறகு இன்னதுசெய்வது.—பிரேதபரிசோதனை ஆனவுடன் போலீசார் அந்தப் பிரேதத்தைப் புதைக்க ஏற்பாடுசெய்யவேண்டியது. அந்தப் பிரேதமானவனுடைய சிநேகிதர்களாவது பந்துக்களாவது கேட்டால் அவர்களிடத்தில் கொடுத்துவிடலாம்.

7. ஸ்டேஷனுக்குத் திரும்புதல்.—மெடிகலாபீசர் பிரேத பரிசோதனை சர்டிபிகேட் கொடுத்தால் அதையும் தன் பாஸ்போர்ட்டில் (116 நெ. பாரம்) அவர் கையெழுத்தும் பெற்றுக்கொண்டு ஸ்டேஷனுக்குத் திரும்பிவரவேண்டியது.

சில கொடிய மரணக்கேசுகளில் கவனிக்கவேண்டிய சமாசாரங்கள்.

1. (i) தூக்குப்போட்டாவது அல்லது திக்குமுக்காடும்படி செய்தாவது ஏற்பட்ட மரணங்களில் தேகம் ஜில்லிட்டுப் போகாதிருக்கும்பக்ஷத்தில் கயிற்றை அறுத்து அவனை இறக்கி கழுத்திலிருந்து கயிற்றைநீக்கி அவனுக்கு மூச்சுண்டாக்கப் பிரயத்தனப்படவேண்டும். அறுத்த கயிற்றையும் பத்திரப்படுத்திவைக்கவேண்டும்.

(ii) தேகம் குளிர்ந்துபோய்விட்டதானால், கேசை விசாரிக்கும் ஆபீசர் வரும்வரையில், பிணம் இருந்த நிலைமையிலேயே வைத்திருக்கவேண்டும்.

2. (i) எவனாவது கிணற்றிலாவது குளத்திலாவது விழுந்துகிடந்தால் அவனை உடனே வெளிப்படுத்தவேண்டும். உயிர் இருக்கும்பக்ஷத்தில் மூச்சுண்டாக்குவதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்யவேண்டும். உயிர் போயிருக்கும்பக்ஷத்தில் அப்பிரேதத்தையும் இறந்துகிடந்த கிணறு அல்லது குளத்துக்குப்பக்கத்தில் 'மல்லாடின 'குறிகளிருந்தால் அவைகளையும் யாரும் தொடாதபடி கான்ஸ்டேபில் பத்திரமாய் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

(ii) பிணத்தின்வாய்ப்பக்கத்திலாவது கிணறு, குளம், இவைகளின் கரையிலாவது ஏதாவது இரத்தக்குறிகள் இருந்தால் அவைகளையும், தேகத்திலும், முக்கியமாய் கழுத்திலும் தலையிலுமுள்ள காயக்குறிகளையும் விசேஷமாய்க் கவனித்துப்பார்க்கவேண்டும்.

3. ரோட்டில் கிடக்கும் பிரேதம்.—(i) ரோட்டில் பிரேதம்கிடந்தால் அதன்மேலுள்ள காயங்கள், அவை இருக்கப்பட்ட மாதிரி, தோற்றம், முதலிய அம்சங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

(ii) ஆயுதம் ஏதாவது கிடந்தால் அதை பத்திரமாய் எடுத்து அதின்பேரில் இரத்தக்கரையிருந்தால் அந்த இடத்தை காகிதத்தில் சுற்றி சீல்போட்டு வைக்கவேண்டியது. முக்கியமாய் அதன்பேரில் ஏதாவது மயிர் ஒட்டியிருந்தால் அதை ஜாக்கிரதையாய்பார்த்து அப்படியே பத்திரப்படுத்தவேண்டியது.

4. வெளிகளில் எறியப்பட்ட சிசுக்கள்.—சிசுக்கள் பிறந்தவுடன் வெளியில் விட்டெறியப்பட்டிருந்தால் தொப்புள்

கொடி,முக்கியமாய்கட்டப்பட்டிருந்தால் அதைப்பத்திரப் படுத்திவைக்கவேண்டும். மேலும் அந்த சிசுவின் மேலே யுள்ள காயவகைபராக்களேயும் கவனிக்கவேண்டியது.

5. **கொலேசெய்து புதைத்தல்.**—ஒருவனைக் கொலேசெய்து புதைத்ததாகவாவது அல்லது தகனம் செய்துவிட்டதாகவாவது ஏற்பட்டால் அதை காவல்காத்துக்கொண்டு ஸ்டேஷனுபிசருக்குச் சமாசாரம்சொல்லி அனுப்பவேண்டும்.

மரண வாக்குமூலம்.

அர்த்தம்.—மரணவாக்குமூலம் என்பது ஓர் குற்றமுள்ளசெய்கையால் ஒருமனிதனுக்கு மரணம் நேரிடுவதாயிருந்தால் மரணசமயத்தில் தனக்கு அது எப்படி நேரிட்டதென்றும் அல்லது அதற்குச் சம்மந்தமுள்ள மற்ற விஷயங்களேப்பற்றியும் எழுதிவைக்கும் வாக்குமூலம். அதைசாக்ஷியமாக ருசுப்பிக்கலாம்.

மரணவாக்குமூலத்தை கான்ஸ்டேபில் ரிக்கார்டுசெய்தல்.—மேலான உத்தியோகஸ்தர் சமீபத்திலில்லாதபோனுலும் அப்படிப்பட்டவர்களே சரியான சமயத்தில் வரவழைக்க சந்தர்ப்பம் இல்லாதபோனுலும் ஓர் கான்ஸ்டேபில் மரணவாக்குமூலத்தை ரிக்கார்டு செய்யவேண்டும்.

ஒன்று அல்லது இரண்டு பெருந்தன்மையான சாக்ஷிகள் முன்னிலேயில் சாகப்போகிறவன் எப்படிச்சொல்லுகிருனே அப்படியே ரிக்கார்டுசெய்து, அவனுடையவும் சாக்ஷிகளுடையவும்கையெழுத்து அல்லதுகிறலேப்பெற்று கான்ஸ்டேபிலும் அத்தாக்ஷியாக கையெழுத்துச் செய்ய வேண்டும். அப்படித் தயாரிக்கப்பட்ட ஸ்டேட்மெண்

டை உடனே ஸ்டேஷனுபீசருக்கு அனுப்பவேண்டும் அல்லது தானே நேரில் கொண்டுபோகவேண்டும்.

போலீஸ் ஸ்டேஷனில் பிரியாதுசெய்யப்பட்டால் அங்கிருக்கும் கான்ஸ்டேபிலின் அலுவல்.

1. ஸ்டேஷனில் மேலானஉத்தியோகஸ்தர் இல்லாதபோது பிடிக்கக்கூடிய குற்றத்தைப்பற்றி சமாசாரம் ஸ்டேஷனில் சொல்லப்பட்டால் டியூட்டியிலிருக்கிற கான்ஸ்டேபில் உடனே ஸ்டேஷனுபீசருக்காவது வேறு மேலான உத்தியோகஸ்தருக்காவது சமாசாரம் அனுப்பவேண்டும். அந்தச் சமாசாரம் வாய்மொழியாய் சொல்லப்பட்டால் அவன் சொல்லுவதுபோலவே ஸ்டேஷன் முதலறிக்கை ரிப்போர்ட்டிலஎழுதி அவனுக்குப்படித்துக் காட்டி அவனுடைய கையெழுத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. அந்தச்சமாசாரம்சொல்லுகிறவன் படியாதவனாயிருந்தால் அவன் இடதுகை கட்டவிரல் அடையாளத்தை முதலறிக்கை ரிப்போர்ட்டில் எடுத்து ரிக்கார்டுசெய்கிற கான்ஸ்டேபிலும் அத்தாக்ஷியாக கையெழுத்துச் செய்யவேண்டும்.

3. பிராது எழுத்துமூலமாய்க் கொடுக்கப்பட்டால் கான்ஸ்டேபில் அதைப்பெற்றுக்கொண்டு ஸ்டேஷனுபீசர்வந்ததும் நடவடிக்கை நடப்பிக்க அவரிடம் கொடுக்கவேண்டியது.

4. முதலறிக்கை புஸ்தகத்தில் பதிவுகள் கார்பன் கடுதாசிவைத்து காபியிங் பென்சலால் எழுதவேண்டும்.

இவைகள் ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் சப்ளை செய்யப்படும்.

5. கீழே கூறிய மாதிரியாக அனுப்பும்பொருட்டு மூன்று அல்லது நாலுகாப்பிகள் தயார் செய்யவேண்டும் :—

(i) ஒருகாப்பியை அந்த இடத்தில் அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டுக்கு காலதாமதமன்னியில் அனுப்பவேண்டும்.

(ii) ஸ்டேஷனவுஸ் ஜெனரல்டைரியுடன்கூட ஜில்லா சூப்பிரண்டெண்டுக்காவது அல்லது சப் டிவிஷனுயிருந்தால் சப்டிவிஷன் போலீஸ் ஆபீசருக்காவது சர்க்கில் இனிஸ்பெகடர் துவாராவாய் மற்றொன்றை அனுப்பவேண்டும்.

(iii) ஒன்றை ஸ்டேஷனில் வைத்துக்கொள்ளவேண்டும்.

குறிப்பு.—அந்தக்கேசை விசாரிக்கும் அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட் அவ்விடத்து மாஜிஸ்டிரேட்டாயிராத பட்சத்தில் நான்காவது காப்பி ஒன்று தயார்செய்து அவ்விடத்து மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பவேண்டியது.

6. பிடிக்கக்கூடாத கேசில் பிரியாது.—பிடிக்கக்கூடாத குற்றத்தைப்பற்றி ஸ்டேஷனில் பிரியாது செய்யப்பட்டால் அங்கேயிருக்கப்பட்ட ஜெனரல் டைரியில் இச்சமாசாரத்தை எழுதிக்கொண்டு போலீஸார் இதில் பிரவேசிக்கக்கூடாதாகையால் நேரில் மாஜிஸ்டிரேட் முன்பாக பிரியாது செய்துகொள்ளும்படி பிரியாதுக் காரனுக்குச் சொல்லவேண்டும்.

இந்திய சாக்ஷிய ஆக்ட்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்.

அர்த்தம்.—குற்றத்தை தான் செய்ததாகவாவது அல்லது அது சம்பந்தமான வேறு விஷயங்களையாவது சொல்லி குற்றவாளி குற்றத்தைத் தானாய் ஒப்புக்கொள்ளுதல்.

குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல் விஷயமாய் ஏற்பட்டுள்ள பொது விதிகள்.

1. குற்றத்தின் சம்பந்தமாய் சமாசாரங்களை வெளிப்படுத்துவதற்காக எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தனும் காவலிலிருப்பவனை பயப்படுத்தியாவது வாக்குக்கொடுத்தாவது அல்லது கொடுமை செய்தாவது தூண்டுதல் செய்யக்கூடாது. அல்லது மேற்படியான் தான் இஷ்டப்பட்டு எதாவது ஒப்புக்கொண்டால் அதையும் கான்ஸ்டேபில் தடைசெய்யக்கூடாது.

2. **குற்றத்தை ஒப்புக்கொள்ளுதலும் அதன் உபயோகமும்.**—ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் பிடிபட்டவன் தானாய் இஷ்டப்பட்டு சொன்ன சமாசாரத்தைக் கேட்கலாம். அதை தன் ஞாபகத்திற்காகவும் தான் மேல்நடந்துகொள்ளும்பொருட்டும் தன்னுடைய நோட்டு புஸ்தகத்தில் எழுதிக்கொள்ளலாம். அந்த ஒப்புக்கொள்ளுதலினால் கிடைத்த துப்பைக்கொண்டு அதுவிஷயமாய் பிரத்தியேகமான சாட்சியம் சம்பாதிக்கப் பிரயத்தனப்படவேண்டும்.

3. **குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கோண்டால் நடவடிக்கை.**—(i) போலீஸார் காவலிலிருக்கிற கைதி தன் இஷ்டமாய் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அதை அந்தக் கான்ஸ்டே

பில் உடனே ஸ்டேஷனுபீசருக்கு தெரியப்படுத்தவேண்டியது.

(ii) அந்தக் கேசை விசாரிக்க அதிகாரமுடைய மாஜிஸ்டிரேட் முன்பாகவாவது அல்லது 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் முன்பாகவாவது கைதி ஒப்புக்கொண்ட விஷயங்களை ரிக்கார்டு செய்யும்பொருட்டு ஆஜர் செய்ய வேண்டும்.

(iii) போலீஸ் உத்தியோகஸ்தர்கள் கைதிகள் ஒப்புக்கொண்டதை வில்லேஜ் மாஜிஸ்டிரேட்டைக்கொண்டு ரிக்கார்டு செய்யக்கூடாது.

கைதி போலீசாரிடத்தில் ஒப்புக்கொண்டதின் உபயோகம்.—(1) போலீஸ் உத்தியோகஸ்தனிடத்தில் குற்றவாளி ஒப்புக்கொண்ட சங்கதியானது அவனுக்கு விரோதமாய் சாட்சியமாக உபயோகிக்கக்கூடாது. போலீஸ் உத்தியோகஸ்தனுடைய காவலிலிருக்கும்போது கைதி ஒப்புக்கொண்டாலும் அதை அவனுக்கு விரோதமாய் சாக்ஷியமாக உபயோகிக்கக்கூடாது.

(2) சொத்தை அல்லது சமாசாரங்களைக் கண்டுபிடிக்கப்பட்டால் அப்போது சாக்ஷியமாக ஒத்துக்கொள்ளத்தக்கது. ஆனால் குற்றவாளியாவது போலீஸ் காவலிலிருக்கிற நபராவது ஒப்புக்கொண்ட சமாசாரத்தினால் எதாயினும் (a) திருட்டுச் சொத்துக்கள் (b) கொலையுண்ட பிரேதம் (c) குற்றம் செய்யப்பட்ட ஆயுதங்கள் (d) இரத்தக்கரையுள்ள துணிகள் அல்லது குற்றசம்பந்தமான இதர முக்கியமான சாக்ஷியங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் கண்டுபிடிக்கப்பட்ட சங்கதிக்கு பரிஷ்காரமாய் அந்த சமாசாரம் அல்லது ஒப்புக்கொள்ளுதலில் எவ்வளவு சம்

பந்தப்படுகிறதோ அவைகளை மாத்திரம்தான் சாக்ஷியத்தில் உபயோகிக்கலாம்.

கேசை ஒப்புக்கொண்டதின்பேரில் சொத்தைக் கைப்பற்றுகிற விஷயமாய் நடவடிக்கை.—(1) போலீசாருடைய காவலிலிருக்கிற குற்றவாளி அந்தக் குற்றவிஷயமான சொத்து இன்ன இடத்தில் இருக்கிறதென்று சொல்லும்போது அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன் இரண்டு அல்லது மூன்று பெரியதனக்காரர்களைச்சேர்த்து அவர்கள் முன்னிலையில் சொத்து இருக்கப்பட்ட இடத்தைக் காண்பிக்கச் சொல்லும்படி எதிரியைக் கேட்கவேண்டியது. எதிரியை அந்த இடத்துக்கு அழைத்துக்கொண்டுபோனவுடனே அந்தச்சொத்தை எதிரியைக்கொண்டே எடுக்கும்படி சொல்லவேண்டியது அல்லது போலீசார் கைப்பற்றிக்கொள்ளுவதற்காக சொத்து இருக்கப்பட்ட குறிப்பான இடத்தைக் காண்பிக்கச்சொல்லவேண்டியது.

(2) சொத்துக்கள் எவ்விதமாய் அகப்பட்டது என்பதையும் அகப்பட்ட சொத்துக்களையும்பற்றி ஓர் மாஜர் அதே இடத்திலேயே தயார்செய்து அதில் அந்த சாக்ஷிகளும் போலீஸ் உத்தியோகஸ்தனும கையெழுத்து செய்யவேண்டியது.

கைதி ஒப்புக்கொள்ளும்படி இம்சை செய்தால் தண்டனை.

குறிப்பு.—யாதொரு குற்றம் கண்டுபிடிப்பதற்காகவாகிலும் யாதொரு சொத்தை மறுபடி கொடுத்துவிடவாகிலும் யாரையாவது துன்பப்படுத்தி அவனையாகிலும் அவனைச்சேர்ந்த வேறொருவனையாகிலும் எதையாவது உண்டென்று ஒப்புக்கொள்ளும்படி செய்யும்பொருட்டாவது

அல்லது அதைக்குறித்து யாதொரு சங்கதியைத் தெரிவிக்கும்படி செய்யும்பொருட்டாவது, யாதொரு சொத்தைக் கொடுத்துவிடவாகிலும் கொடுத்துவிடும்படி செய்யவாகிலும் அவனையாகிலும் அவனைச்சேர்ந்த வேறொருவனையாகிலும் தூண்டுதல் செய்யும்பொருட்டாவது எவனாவது, (a) துன்பம் மாத்திரம் உண்டுபண்ணியிருந்தால் 7 வருஷத்துக்கு அதிகப்படாமல் இருவகைக் காவலிலெதிலாகிலும் அபராதமும், (b) கொடுந்துன்பம்மாத்திரம் உண்டுபண்ணியிருந்தால், 10 வருஷத்திற்கதிகப்படாமல் இருவகைக் காவலில் எதிலாகிலும் அபராதமும் விதிக்கப்படும்.

(2) மேற்கூறிய விஷயங்களுக்காக எவனையாவது அக்கிரமமாய் காவலிலடைத்தால் அதற்காக 3 வருஷத்திற்கதிகப்படாமல் இருவகைக்காவலிலெதிலாகிலும் அபராதமும் போடப்படும்.

சாக்ஷியம்.

கோர்ட்டார்முன் விசாரணையிலிருக்கிற கேசின் சம்பந்தமாய் சாக்ஷிகள் பிரமாணிக்கமாய்ச் சொல்லுகிற வார்க்குமூலங்களுக்கு வாய்மொழி சாக்ஷியம் என்று பெயர்.

அது இருவகைத்து,

(1) நேரான சாக்ஷியம்.—சாக்ஷி தன்கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் மாத்திரம் சொல்லுகிறது.

(2) சங்கதிகளைக்குறித்த சாக்ஷியம்.—குற்றவாளியை குற்றத்தில் சம்பந்தப்படுத்தும் சங்கதிகள்.

நேரான சாக்ஷியமும் அதன் தன்மையும்.

மேற்கூறிய இருவித சாக்ஷியங்களில் நேரான சாக்ஷியம்தான் உத்தமமானது. போலீஸ் உத்தியோகஸ்தன் கூடுமானால் எப்போதும் நேரான சாக்ஷியம் சம்பாதிக்கப் பிரயத்தனப்படவேண்டும்.

கோர்ட் முன்பாக சாக்ஷியம் சொல்லவேண்டிய விதமும் அப்பொழுது நடந்துகொள்ளவேண்டிய விதமும்.

1. சாக்ஷியாகக்கூப்பிட்ட ஒரு கான்ஸ்டேபில் கோர்ட்டுக்குள் பிரவேசித்தவுடன் ஜட்ஜ், மாஜிஸ்டிரேட் யாராயிருந்தாலும் அவர்களுக்கு சலூட்செய்து சாட்சிகள் இருக்கவேண்டிய பெட்டியில்போய் நிற்கவேண்டும்.

2. பிரமாணிக்கம்.—கோர்ட்டார் சொல்லுகிறபடி பிரமாணிக்கம் செய்யவேண்டியது.

3. சாக்ஷியம் கொடுக்கவேண்டிய மாதிரி.—சாக்ஷி சொல்லுகையில் தைரியத்துடன் தெளிவாய் உள்ளதை உள்ளபடி சொல்லவேணடும்.

4. கேட்கும் கேள்விகளுக்கு ஜவாப்.—கேட்கப்படும் கேள்விகளுக்குத் தகுந்த ஜவாபு சொல்லவேண்டுமேதவிர தன்னிஷ்டப்படி எதையும் சொல்ல முன்வரவாவது வாய்க்குவந்ததைச் சொலலவாவது சமாசாரங்களைக் கூட்டிக் குறைத்தாவது சொல்லக்கூடாது.

5. ஜட்ஜைநோக்கி உத்திரவு.—கேள்விகளை யார் கேட்டபோதிலும் விசாரணைசெய்கிற ஜட்ஜையாவது மாஜிஸ்டிரேட்டையாவது நோக்கித்தான் சொல்லவேண்டும்.

6. சங்கதிகள்—தனக்குத் தெரிந்த சங்கதிகளைப்பற்றித்தான் சொல்லவேண்டும்.

குறிப்பு.—பிரமாணிக்கத்தின்பேரில் தப்பு வாக்குமூலம் கொடுத்தால் தண்டனை.—ஒரு கான்ஸ்டேபில் பிரமாணிக்கத்தின் பேரில் தப்பு வாக்குமூலம் கொடுத்தால் அவனுக்கு இ. பி. கோ. 181 செ. படி 3 மாதம் வெறுங்காவல் அல்லது கடுங்காவலுடன் அபராதமும் விதிக்கப்படும்.

7. தனக்கு நேரில்தெரியாததினாலாவது அல்லது ஞாபகமில்லாததினாலாவது கேட்ட கேள்விக்கு ஜவாபு சொல்லக்கூடாவிட்டால் "நான் அறியமாட்டேன்" "எனக்கு ஞாபகமில்லை" என்றுதான் சொல்லவேண்டும்.

8. ஒரு கான்ஸ்டேபில் தன் நோட்டுப் புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கும் சமாசாரங்களை கோர்ட்டிலேயே பார்த்து ஞாபகம் உண்டுபண்ணிக்கொள்ளலாம். ஆனால் இப்படிச் செய்யும்பட்சத்தில் எதிரி பக்கத்தாரும் இவன் நோட்டுப் புஸ்தகத்தைப் பார்க்க லாயக்குள்ளவர்களாகிறார்கள். ஆகையினாலே கோர்ட்டுக்குள் பிரவேசிக்கு முன்னமே தன் நோட்டுப் புஸ்தகத்தைப்பார்த்து தனக்கு ஞாபகமுண்டாக்கிக்கொள்வது எப்போதும் உசிதம்.

9. **நோட்டுப் புஸ்தகமும் டிபன்ஸ் தரப்பு வக்கீலும்.**—கான்ஸ்டேபில் டிபன்ஸ் வக்கீல் பார்க்கச்சொன்னதின் பேரில் தன்னுடைய நோட்டுப் புஸ்தகத்தை கோர்ட்டுக்குள் பார்க்கக்கூடாது. மேலும் அந்த வக்கீல் கேட்கப்பட்ட கிராஸ்—எக்ஸாமினேஷனில் கேட்கும் எவ்வித கேள்விகளின்பேரிலும் கோபித்துக்கொள்ளக்கூடாது.

10. **சமாசாரம் கிடைத்த விதம்.**—எதாவது ஒரு சமாசாரத்தையறிய துப்பு எப்படிக் கிடைத்தது என்று கோர்ட்டில் கேட்டால் அவன் அதைச் சொல்லவேண்டியதவசியமில்லை.

11. கேசைப்பற்றி வாக்குவாதம்செய்தல்.—கேசின் தகுதி அல்லது தகுதியின்மையைக்குறித்து வெளியாரோடாவது விசேஷமாய் எதிரிவக்கீலோடாவது தர்க்கிக்ககூடாது. மேலும் கோர்ட்டில் சொல்லப்படும் எவ்வித சாக்ஷியத்தையும் அதை உடைக்க என்ன வாக்குமூலம் எதிரி பக்கத்தார் சொல்லவேண்டுமென்பதையும் அறிந்துகொள்ள அக்கம்பக்கம் திரிந்துகொண்டிருப்பவர்களைவிட்டுத் தான் விலகவேண்டும்.

இந்தியன் பினல்கோட்.

பின்னால் சொல்லப்படும் செய்கைகள் இந்தியன் பினல்கோடின் பொதுவிலக்குகளில் அடங்கினவைகளாதலால் குற்றமாகாது.

(1) சர்க்கார் உத்தியோகஸ்தனாவது அல்லது வேறு மனிதனாவது நல்ல எண்ணத்தோடு யாதொரு காரியத்தைச்செய்ய சட்டத்தினால் உடன்பட்டிருப்பட்டிருப்பதாகவாவது அல்லது சட்டப்படி நியாயமானதென்றாவது நம்பிச் செய்கிற காரியங்கள்.

(2) தகுந்த ஜாக்கிரதையோடும் எச்சரிக்கையோடும் கெடுதிசெய்யவேண்டுமென்கிற எண்ணமில்லாமலும் சட்டப்படி ஏற்பட்டுள்ள காரியத்தைச் செய்யும்போது உண்டாகும் அகஸ்மாத்தான விபத்துகள்.

(3) ஒருவேளை கெடுதியுண்டாக்கத்தக்கதாயிருந்தபோதிலும் அந்தத்தீங்கை உண்டாக்கவேண்டுமென்கிற எண்ணமில்லாமலும் வேறொரு தீங்கைத் தடுக்கும்பொருட்டும் செய்யும் காரியங்கள்.

(4) ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையினுடைய செய்கைகள்.

(5) புத்திமாராட்டத்தினல் தான்செய்கிற காரியம் தப்பிதமென்ருகிலும் அல்லது சட்டத்துக்கு விரோதமென்ருகிலும் தெரியாமல் செய்யும் பைத்தியக்காரனின் செய்கைகள்.

குறிப்பு.—ஒரு பைத்தியக்காரன் பிடிக்கக்கூடிய குற்றம் ஏதாவது ஒன்றைச்செய்தால் கான்ஸ்டேபில் அவனைச்சரியான புத்தியுள்ளவன்போலவே பாவித்து அவனைப்பிடித்து ஸ்டேஷனுபீசரிடத்திற்குக் கொண்டுபோகவேண்டும்.

(6) தன்னை யறியாமல் வேருெருவனுடைய பலவந்தமான செய்கையினுல் குடிவெறிமயக்கமுள்ளவன் தான்செய்வது இன்னது என்று தெரியாமல் செய்யும் குற்றங்கள்.

குறிப்பு.—ஒருவன் குற்றத்தைச் செய்யவேண்டுமென்றே குடித்து மேற்படி குற்றத்தைச் செய்தால் அவன் குடித்திருப்பது ஓர் மன்னுப்பாகாது.

(7) மரணம் அல்லது கொடுந்துன்பம் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணமில்லாமலும் அப்படிப்பட்ட துன்பம் உண்டாகுமென்று தெரியாமலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவர்களுடைய சம்மதத்தின்பேரில் உண்டான செய்கைகள்.

(8) சாமான்ய புத்தியுள்ளவர்கள் முறையிட்டுக் கொள்ளத்தகாத அவ்வளவு அற்பமான தீங்கை விளைவிக்கும்படியான காரியங்கள்.

(9) தன்னுடைய சரீரம் சொத்து அல்லது பிறருடைய சரீரம் முதலியவைகளைக் காத்துக்கொள்ளும்பொருட்டு தன் பாத்தியதையை செலுத்தும்வகையில் செய்யும் காரியங்கள.

குறிப்பு.—சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நல்ல எண்ணத்தோடு தங்கள் அலுவல்களை நடத்தும்பொருட்டு செய்யும் செய்கைகளை எதிர்ப்பதற்கு சொந்தப்பாதுகாப்பு என்பது கிடையாது.

3-வது அத்தியாயம்.

விசேஷமானவும் ஓரிடத்துக்குரியவுமான சட்டங்கள்.

1889-ம்ஹுலத்து 3-வது ஆக்டாகிய டவுன் நியூசன்ஸ் ஆக்ட்.

1. இது எல்லா முனிசிபல் டவுன்களிலும் யூனியன்களிலும் அமுலில் இருக்கிறது.

2. மற்ற இடங்களிலும் உற்சவம் முதலிய விசேஷித்த சந்தர்ப்பங்களில் அமுலுக்குக்கொண்டுவரலாம்.

3. போலீஸ் உத்தியோகஸ்தன் பார்க்கும்படி எவனாவது இந்த ஆக்டின்படி தண்டிக்கப்படத்தக்கதாயிருக்கிற குற்றத்தைச்செய்தால் அந்தப்போலீஸ் உத்தியோகஸ்தன் அவனை வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

குறிப்பு.—கி. பு. கோ. 57-வது செ. படி நடவடிக்கை நடத்தக்கூடியதாயிருந்தால் ஷை ஆக்டின்படி குற்றம் செய்தவர்களை பிடிக்காவிட்டால் நியாயம் தவறிப்போகுமென்று தோன்றினுலொழிய அவர்களைப் பிடிக்கவேண்டிய தவசியமில்லை.

இந்த ஆக்டின்படி குற்றங்கள்.—(i) யாதொரு ராப்தாவாணதெருவு, பாட்டை, ராதாரியான இடம், ஜனங்கள் வழக்கமாய்க் கூடுகிற இடம், இவைகளில்—

(a) எவனாவது முரட்டுத்தனமாகவாவது, அஜாக்கிரதையாகவாவது ஒரு பிராணியை ஓட்டிக்கொண்டு போனாலும் அதன்பேரில் சவாரிசெய்துக்கொண்டுபோனாலும் அல்லது ஒரு வண்டியை ஓட்டிக்கொண்டுபோனாலும், தள்ளிக்கொண்டுபோனாலும், அல்லது இழுத்துக்கொண்டுபோனாலும், அவனும்,

(b) அஜாக்கிரதையாகவாவது தாறுமாறுகவாவது ஆடுமாடுகளை ஓட்டுவதினுலே ஜனங்களுக்கு இடஞ்சல் அல்லது தடங்கல் உண்டுபண்ணினுல் அவனும்,

(c) பாட்டைகருச் சமீபமான அல்லது இடதுபக்கம் தவிர மற்ற இடங்களிலே வண்டியை தகுந்த காரணமிலலாமலும் ஒரு நபருக்கு அபாயம் அல்லது தடங்கல் உண்டுபண்ணுமபடியாகவும் எவனுவது ஓட்டிக்கொண்டு போனுனும் இழுத்துக்கொண்டுபோனுலும் தள்ளிக்கொண்டுபோனுலும் அவனும்,

(d) ஒருவண்டிக்காரன் அல்லது ஆடுமாடுமுதலிய பிராணிகளை ஓட்டிக்கொண்டுபோகிறவன் அவைகளின் சமீபத்திலில்லாமலும் அவைகளை அடக்கமுடியாத தூரத்தில் போயிருந்தால் அவனும்,

(e) வண்டிகள் நிறுத்துவதற்கு ஏற்பட்டிருக்கும் இடங்கள் தவிர மற்ற இடங்களில் சுமை ஏற்றுவதற்காவது இறக்குவதற்காவது வேண்டிய காலத்திற்கதிகமாய், ஒரு வண்டியை விட்டிருந்தாலும் அல்லது நிறுத்தியிருந்தாலும், குதிரை அல்லது வேறு பிராணியை தடங்கல் உண்டாகும்படி கட்டிவைத்திருந்தாலும் அல்லது ஜனங்கள் நடமாடும் வழியில் வேறெந்தவிதத்திலுைம் வேண்டுமென்று தடங்கல் உண்டாக்கினுலும், தடங்கல் உண்டாகும்படி செய்வித்தாலும் அவனும்,

(f) தடங்கல் உண்டாகும்படி சரக்குகளை வைத்துக்கொணடு விற்றுல் அவனும்,

(g) எவனுவது ஒருகுதிரையை பிடித்துக்கொண்டிராமல் அஜாக்கிரதையினுலே விட்டுவிட்டாலும் யாதொரு துஷ்டநாயை வாயுறையில்லாமல் திரியவிட்டாலும்,

மனிதன் ஆடுமாடு முதலான பிராணிகளின் பேரில் போய்விழும்படியாவது தொந்தரவு செய்யும்படியாவது பயப்படுத்தும்படியாவது நாயை அல்லது வேறு பிராணியை ஏவினாலும் அவனும்;

(h) எவனாவது அருவருப்புண்டாகும்படி பிச்சையெடுத்தாலும் தியாகம் கேட்டாலும் பிறருக்குப்பச்சாதாபம் உண்டாகவேண்டுமென்றாவது பலவந்தமாய்ப் பிச்சை வாங்கவேண்டுமென்றாவது எண்ணங்கொண்டு யாதொரு ரணம், காயம், வியாதி, அங்கப்பழுது இவைகளை வெளியாகக்காட்டினாலும் அவனும்,

(i) எவனாவது நியாயமான காரணமின்றி ஏதாவது தூசு, அழுக்கு, குப்பை, கட்டடச்சாமான்கள், கற்கள் முதலியவைகளைக் கொட்டினாலும் போட்டுவைத்தாலும் அவனும்,

(j) எவனாவது கடுதாசி, பாச்சிகை, காசு, பணம், முதலிய சூதக்கருவிகளினால் சூதமாடிக்கொண்டிருக்கையிலாவது பகிரங்கமாய்க் கோழிச்சண்டை விடுகையிலாவது அந்த ஆட்டம் அல்லது அந்தச் சண்டையில கூடயிருந்து நடத்துகையிலாவது கண்டுபிடிக்கப்பட்டால் அவனும்,

(k) எவனாவது வேண்டுமென்று அசங்கியமுண்டாகும்படி நிர்வாணமாயிருந்தாலும் மலஜலபாதைக்குப்போய் அசங்கியமுண்டாக்கினாலும் எழு வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தங்களுடைய சம்ரட்சணையில் அல்லது வசத்தில் வைத்துக்கொண்டிருக்கப்பட்டவர்கள் மேற்கூறியபடி அசங்கியம் பண்ணவொட்டாமல் தடுக்காமற்போனாலும் அவனும்;

(i) எவனாவது குடித்து வெறிகொண்டு மெய்ம்மறந்திருக்கையிலாயினும் கலகம் உண்டாகும்படியாகவாவது தாறுமாறாகவாவது அக்கிரமமாகவாவது நடந்துக்கொண்டிருக்கையிலாயினும் கண்டுபிடிக்கப்பட்டால் அவனும்,

(ii) எவனாவது யாதாமொரு கிணறு, குளம் முதலிய அபாயமான இடத்தையாவது, கட்டடத்தையாவது அடைப்படைக்கவாயினும் பாதுகாக்கவாயினும் அசட்டைபண்ணினாலும் அவனும், யாதாமொருதொழிற்சாலை, வீடு, எருக்குப்பை இவை போன்றனவற்றினின்றும் தூக்கந்தநீர் தெருவில் ஓடும்படி செய்தாலும் அவனும்,

(iii) எவனாவது கொடுமையாக ஓட்டவாவது சவாரி செய்யவாவது உபயோகிக்கவாவது தகுதியற்ற நிலைமையிலிருக்கும் யாதொரு பிராணியை கொடுமையாக அடித்தாலும் வருத்தப்படுத்தினாலும் வேதனை செய்தாலும் ஓட்டினாலும் அதன் மேல் சவாரி செய்தாலும் மற்றப்படி உபயோகித்தாலும் அந்தப்படியெல்லாம் செய்வித்தாலும் அவனும்,

(iv) எவனாவது சாதாரணமாய்ச்சூதாடுகிற யாதொரு வீட்டை ஏற்படுத்தினாலும், உபயோகித்தாலும், உபயோகிக்க அனுமதிதந்தாலும், அதைச்சேர்ந்த காரியங்களை நடத்தினாலும், நடத்துவதற்கு உதவிசெய்தாலும், அல்லது அப்படி சூதாடும்பொருட்டு பணம் முன்னதாகக் கொடுத்தாலும், உதவி செய்தாலும் அவனும்,

(v) எவனாவது சாதாரணமாய்ச் சூதாடுகிற வீட்டில் சூதாடிக்கொண்டிருக்கையில் அகப்பட்டாலும் அல்லது

சூதாடுகிறதற்காக அவ்விடத்தில் வந்திருக்கையில் அகப்பட்டாலும் அவனும்,

இந்த ஆக்டின்படி குற்றம் செய்கிறவனுவான்.

குறிப்பு.—(1) சாதாரணமாய் சூதாடுகிற வீட்டில் சூதமாடிக் கொண்டிருக்கையில் எப்போதாவது எவனுவது அவ்விடத்திற்கு வந்திருக்கக்கண்டால் அவன் அவ்விடத்தில் சூதமாட வந்தவனுகவே எண்ணப்படுவான்.

(2) சேணியர் நூல்பாகுகளைத் தெருவின் பக்கங்களில் பரப்பியிருந்தால் போலீசார் அவர்கள் ஜோலிக்கு அனுவசியமாய் போகக்கூடாது. ஆனுல் ஜனங்களுக்கு விசேஷித்தவிதமாக இடஞ்சல்களை உண்டுபண்ணினுலும் முனிசிபாலிடி உத்தியோகஸ்தராவது அல்லது இதர ஜனங்களாவது தாவாசெய்துக்கொண்டாலும் அச்சமயங்களில் போலீஸ் உத்தியோகஸ்தன் பிரவேசிக்கலாம்,

விசேஷக் குறிப்பு.—இந்த ஆகடின்கீழ்க்கண்ட குற்றங்கள் ஜாமீன்பேரில் விடத்தக்கவைகள்.

நியூசன்ஸ் ஆக்ட் அமுலிலில்லாத இடங்களில் நடவடிக்கை.—நியூசன்ஸ் ஆக்ட் அமுலிலில்லாத இடங்களில் மேலேசொல்லப்பட்ட குற்றங்கள் இ. பி. கோ. 290 செ. படி தண்டிக்கப்படத்தக்கவைகள். எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தன்முன்னிலேயில் மேலேசொல்லப்பட்ட குற்றங்கள் நடக்கப்பட்டதோ, அந்தப்போலீஸ் உத்தியோகஸ்தன் கி. பு. கோ. 57 செ. படி அந்த நபரின் பெயரையும் இருப்பிடத்தையும் தெரிந்துகொண்டு தன்னுடைய ஸ்டேஷன் அவுஸ் ஆபீசருக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியது.

1886ஞூ த்திய 1-வது ஆப்காரி ஆக்ட்.

அதிகாரம்.—

(i) ஒரு காலனுக்குமேற்பட்டகள்ளேயும் ஒரு காலனில் ஆறிலொரு பாகத்திற்குமேற்பட்ட நாட்டுச்

சாராயத்தையும் அல்லது 5 தோலாவுக்குமேற்பட்ட கஞ்சாவையும் கொண்டுபோகிறவர்களை போலீசார் லைசன்ஸ் காட்டும்படி கேட்கலாம்.

(ii) ஜனங்கள் நடமாடும் ராதாரியான இடத்திலாவது வீடல்லாத வெளியான இடத்திலாவது எவனாவது லைசென்சில்லாமல் சாராயம் வைத்திருந்தால் சாராயம் நிரப்பியிருக்கிற பாத்திரம், அதன மூடி, சிபபங்கள், அதைக்கொணடுபோகிற வண்டி, பிராணிகள் முதலியவைகளுடன் அந்தச் சாராயத்தையும் அதைக்கொண்டு போகிறவர்களையும் அரஸ்டு செய்து ஆப்காரி இன்ஸ்பெக்டர் பிடிபட்ட இடத்திலிருந்து 10 மயிலுக்குள்ளிருந்தால் அவரிடத்திலும் இல்லாதபட்சத்தில் சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனில் பிடிபட்ட விவரங்களடங்கிய ரிப்போர்ட்டுடன் உடனே ஒப்புவிக்கவேண்டியது.

(iii) இந்த ஆக்டின்படி குற்றம்செய்து அல்லது குற்றம் செய்தவர்களாக அனுமானிக்கப்பட்டு அவர்கள் போலீசார் கேட்டதின்பேரில் ஊரையும் பெயரையும் சொல்லாமற்போனாலும் அல்லது பொய்யான ஊரையும் பெயரையும் சொன்னாலும் அப்படிப்பட்டவனைப் பிடிக்க வேண்டியது.

(iv) கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் இருக்கப்பட்ட இடத்துக்குச் சமீபத்தில் யாதாயினும் கலகம் நேரிட்டாலும் அல்லது நேரிடக்கூடியதாயிருந்தாலும் அல்லது கெட்டநடத்தையுள்ளவர்கள் கூடினாலும் உடனே அங்கிருக்கப்பட்ட கடைகளை கொஞ்சகாலம் மூடிவைத்திருக்க உத்திரவுசெய்யவும் அதிகாரமுள்ளவர்கள்.

அலுவல்.—(1) திருட்டுத்தனமாய் சாராயம் செய்யப்படுகிறதா அல்லது விற்கப்படுகிறதா என்று ஜாக்கிரதையாய் விசாரித்து அந்தச் சமாசாரத்தை போலீஸ் கான்ஸ்டேபில் ஸ்டேஷனுபீசருக்கு ரிபோர்ட்டுச் செய்யவேண்டும்.

(2) போலீஸ் உத்தியோகஸ்தர் ஆப்காரி டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தருக்கு கூடுமான உதவிசெய்ய வேண்டியது. இந்த ஆக்டின்படி தங்கள் நோட்டீசுக்கு வரும் குற்றங்களை ஆப்காரி உத்தியோகஸ்தருக்கு தெரியப்படுத்தவேண்டியது.

874-ம் வருஷத்திய 9-வது (ஐரோப்பிய) நாடோடி ஆக்ட்.

ஒரு கான்ஸ்டேபிலுடைய வேலை. ஐரோப்பிய வம்சத்தைச்சேர்ந்த ஒருவன் உத்தியோகமாவது அல்லது வெளியான ஜீவனமாவது இல்லாமல் பிச்சையெடுத்து அல்லது திரிந்துகொண்டிருந்தால் போலீஸ் கான்ஸ்டேபில் அவனைக் கவனித்துத் தன் மேலானஉத்தியோகஸ்தருக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியது. அவர்கள் உத்திரவுப் பிரகாரம் நடக்கவேண்டியது.

1871-ம் வருஷத்திய 1-வது கால்நடைகளைக் குறித்த ஆக்ட்
(1891-ம் வருஷத்து 1-வது ஆக்டினால் திருத்தப்பட்டது).

போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்களும் அதிகாரங்களும் :—

(1) சிதறித்திரிகிற ஆடுமாடுகள் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளாவிடில் திருட்டுப்போய்விடுமென்று நினைத்தால் அவைகளைப் பிடித்து 24 மணிநேரத்துக்குள் பவுண்டுக்கு அனுப்பவேண்டும்.

(2) ரஸ்தா, தோட்டம், வாய்க்கால்களை ஆடுமாடு கள் நாசம் செய்துக்கொண்டிருக்கப் பார்த்தால் அவை களைப் பிடித்து பவுண்டுக்கு அனுப்பவேண்டும்.

(3) நிலத்துக்குரியவன் அல்லது குடியானவன தன் நிலத்தை நாசம் செய்யும் ஆடுமாடுகளைப் பிடிக்கும்போது எவனாவது தடுத்தாலும் அப்படி நாசம் செய்த ஆடுமாடு களைப் பிடித்து அவர்கள் பவுண்டுக்கு கொண்டுபோகும் போது அவைகளை மீர்த்துக்கொண்டுபோக எவனாவது பிரயத்தனப்பட்டாலும் அப்போது போலீசார் உதவி செய்யவேண்டும்.

குறிப்பு—இந்த ஆக்டின்பிரகாரம் ஆடுமாடுகளை எலம் போடுகையில் போலீஸ் உத்தியோகஸ்தனாவது பவுண்டு அதிகாரி யாவது தானேயாவது அல்லது வேறு யாரைக்கொண்டாகிலும் ஷை ஆடுமாடுகளை வாங்கக்கூடாது.

1898-ம் ஸ்ரீ த்திய 6-வது தபாலாபீசு ஆக்ட்.

தபாலாபீசைச் சேர்ந்த உத்தியோகஸ்தன் எவனா வது தபாலில் போடப்பட்ட யாதொரு வஸ்து அல்லது அதில் அடக்கம் செய்திருப்பதை திருடினாலும் அயோக் கியமாய் சொந்த உபயோகப்படுத்தினாலும் அல்லது எதன் நிமித்தமாகவாவது மறைத்தாலும் அழித்தாலும் எறிந்துவிட்டாலும் அவனை ஒரு போலீஸ் உத்தியோகஸ் தன் வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

1885-ம் ஸ்ரீ த்திய 13-வது டெலிகிராப் ஆக்ட்.

எவனாவது—

(a) ஒரு சமாசாரத்தை அனுப்புவதையாவது ஒப் புவிப்பதையாவது தடுக்கவாகிலும நிறுத்தவாகிலும்,

(b) ஒரு சமாசாரத்தை மார்க்கத்தில் நிறுத்தவாகிலும் அதிலுள்ளதை தான் தெரிந்துகொள்ளவாகிலும்,

(c) கெடுதி செய்யவாகிலும்,

எண்ணங்கொண்டு, யாதொரு டெலிகிராப் அல்லது அதின்வேலையைச் சேர்ந்ததாகவாவது அதில் உபயோகிக்கப்பட்டதாகவாவது இருக்கிற ஒரு பாட்டேரி, யந்திரம், சமாசாரத்தந்திக்கம்பம் அல்லதுவேறே எந்த வஸ்துவையாகிலும் சேதப்படுத்தினாலும் அப்புறப்படுத்தினாலும் தொட்டாலும் அதன் ஜோலிக்குபோனாலும் போலீஸ் உத்தியோகஸ்தன் வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

குறிப்பு.—கான்ஸ்டேபில் பீட்போகும்போது தந்திமரங்களிருந்தால் அவைகள் சரியான ஸ்திதியிலிருக்கின்றனவாவென்று பார்த்துவந்து ஸ்டேஷனுபீசரிடம் ரிபோர்ட் செய்ய வேண்டும்.

1878-ம்வருஷத்திய 11-வது ஆயுத ஆக்ட்.

ஆயுதங்களாவன.—துப்பாக்கிகள், சனியன்கள், கத்திகள், பிச்சுவாக்கள், வில்லுகள், அம்புகள், பீரங்கிகள் ஆயுதங்களின் பாகங்கள், ஆயுதங்கள் செய்வதற்காக உபயோகிக்கும் யந்திரங்கள் முதலியவைகளே.

பொது விதிகள்.—(1) யாராவது ஆயுதம் குண்டு முதலியதுகளை வைத்திருக்கவேண்டுமேயானால் அந்த ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடமிருந்து லைசன்ஸ் பெற்றிருக்கவேண்டும்.

(2) லைசன்ஸ் வேண்டியதில்லையென்று தவிர்க்கப்பட்டவர்கள் தவிர மற்றவர்கள் லைசன்ஸ் இல்லாமல் ஆயுதங்கள் தரித்துப்போகக்கூடாது.

(3) ஒரு ஜில்லாவில் ஆயுதம்வைத்திருக்க லைசன்ஸ் பெற்றிருந்தால் அவன் வேறொரு ஜில்லாவுக்குப்போனால்

அந்த ஜில்லாமாஜிஸ்டிரேட்டின் கையெழுத்து அந்த லைசன்சில் பெற்றிருந்தாலொழிய அந்த லைசன்ஸ் உபயோகப்படாது.

(4) லைசன்ஸ் இருந்தாலும் இல்லாமல்போனாலும் ஒருவன் ரயில் வண்டியிலாவது சந்தைகளுக்காவது மத விஷயமான ஊர்கோலங்களுக்காவது அல்லது வேறெந்தப் பொதுக்கூட்டத்துக்காவது அந்த இடத்திற்கு ஆயுதம் தரித்துப்போகலாமென்று பிரத்தியேகமாய் உத்திரவு பெற்றிருந்தால் ஒழிய தரித்துப்போகக்கூடாது.

ஆயுத ஆக்ட் பிரகாரம் லைசன்ஸ் வேண்டியதில்லையென்று தவிர்க்கப்பட்டவர்கள்.

ஜெயில் டிபார்ட்மெண்டு.—(1) ஜெயில் சூப்பிரண்டெண்டு, ஜெயிலர்கள் ;

(2) டீட்டியிலிருக்கும்போது டிப்டிஜெயிலரும், வார்டரும்.

போலீஸ் டிபார்ட்மெண்டு.—(1) போலீஸ் சப் இனிஸ்பெக்டர், அவருக்கு மேற்பட்டவர்கள்,

(2) டீட்டியிலிருக்கும்போது எட்கான்ஸ்டேபில், கான்ஸ்டேபில்.

(3) மலைரோட்டுகளையாவது, மலைகணவாய்களையாவது பாதுகாக்கும் பொருட்டு ஒத்தாசை செய்யும்போது காட்தலையாரிகள்.

போஸ்டல் டிபார்ட்மெண்டு.—போஸ்டல் இனிஸ்பெக்டர்கள், சூப்பிரண்டெண்டுகள், மெயில் ஓவர்சியர்கள்.

பாரஸ்டு டிபார்ட்மெண்டு.—பாரஸ்டர்கள், அதற்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்கள்.

சால்ட் ஆப்காரி டிபார்ட்மெண்ட்.—சால்ட் அசிஸ்டண்ட் இனிஸ்பெக்டரும் அதற்கு மேற்பட்ட அந்தஸ்துள்ளவர்களும் சால்ட் சர்க்கில் இனிஸ்பெக்டருடைய எழுத்து மூலமான உத்தரவின்பேரில் சப் இனிஸ்பெக்டர், பெட்டி ஆபீசர், பியூன்கள் எஸ்கார்ட்போனாலும், குற்றம் நடக்கவொட்டாமல் தடுக்கும் விஷயமாய்ப்போனாலும்

மஹாராஜாசக்கரவர்த்தியவர்களுடைய குடிகளாகிய ஐரோப்பிய வம்சத்தார்கள், சட்டைக்காரர்கள்,

எல்லா மாஜிஸ்டிரேட்டுகள், டிப்டி கலெக்டர்கள், டிஸ்டிரிக்ட் முனிசீபுகள்.

1895-ம்வருஷம் எப்ரல்மீ 4உக்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட லோக்கல்பண்டுபோர்டு மெம்பர்களாகச் சேர்ந்தவர்கள் பழையபடியும் மெம்பர்களாகச் சேர்க்கப்பட்டால் அவர்கள்.

இந்திய ஆர்மியைச்சேர்ந்த எல்லா மிலிட்டேரி உத்தியோகஸ்தர்கள், கப்பற்சேனை உத்தியோகஸ்தர்கள், அவைகளிலிருந்து பென்ஷன் வாங்கிக்கொண்டவர்கள்.

எல்லா மகாராஜாக்கள், ராஜாக்கள், நவாப்புகள்.

சென்னை ராஜதானியிலுள்ள புராதன ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள்.

அலுவல்.—(1) தன்னுடைய ஸ்டேஷன் சரகத்தில் எவனாவது லைசன்ஸ் இல்லாமல் ஆயுதம்வைத்திருக்கிறானா

வென்று விசாரித்து தன்னுடைய ஸ்டேஷனுபீசருக்கு ரிபோர்ட் செய்தல்.

(2) லைசன்சுள்ளவன் லைசன்சில்லாதவனிடமிருந்து ஆயுதம் வாங்கினால் அதைப்பற்றி ரிபோர்ட் செய்தல்.

(3) லைசன்சுள்ளவன் லைசன்சில்லாதவனுக்கு ஆயுதம் குண்டு முதலியவைகளைக் கொடுத்தல் அல்லது விற்றிருத்தலை ரிபோாட் செய்தல்.

(4) எவனாவது லைசன்சில்லாமல் ஆயுதம் கொண்டு போகிறானென்று சமுசயமுண்டானால் அவனிடத்தில் லைசன்சுகேட்டல்.

(5) தன்னுடைய ஸ்டேஷன்சரகத்தில் ஆயுதம் வைத்துக்கொள்வதற்கு லைசன்சுவேண்டியதில்லையென்று விலக்கப்பட்டவர்கள் இன்னாரென்று தெரிந்துகொள்ளல்.

(6) ஸ்டேஷன் சரகத்துக்குள் ஆயுதம் வைத்திருக்க லைசன்சு பெற்றிருக்கும் நபர்களின் பெயரும் இருப்பிடமும் தெரிந்துகொள்ளல்,

அதிகாரம்.—(1) எவனாவது லைசன்சுடனாவது லைசன்சில்லாமலாவது ஆயுதவகையாறாக்களை அக்கிரமமான காரியங்களுக்கு (அதாவது ஒரு குற்றம்செய்ய) கொண்டுபோகிறானென்று தோன்றும்பக்ஷத்தில் அவனை வாரண்டில்லாமல் பிடிக்கலாம்.

(2) லைசன்சில் கண்டபடியில்லாமலும், லைசன்சில்லாமலும் ஆயுதம் குண்டு மருந்து முதலிய வகையராக்

களைசெய்தாலும், விற்றாலும், ஏற்றுமதி இறக்குமதி செய்தாலும் பிடிக்கவேண்டியது.

(3) அப்படிப்பட்டவனிடத்திலிருந்து ஆயுதம் மருந்து குண்டு முதலிய சாமான்களைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டியது.

(4) பிடித்த ஆயுதம் மருந்து குண்டு முதலிய சாமான்களை காலதாமதமன்னியில் மாஜிஸ்டிரேட்டுக்கனுப்பவேண்டியது.

(5) லைசன்சில்லாமலாவது லைசன்சில் கண்டபடியில்லாமலாவது யாராவது ஆயுதம் தரித்துப்போனால் அவர்கள் ஆயுதத்தைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டியது.

குறிப்பு.—இந்த சமயத்தில் ஒருவனை போலீசார் சாதாரணமாய் காவல் படுத்த வேண்டியதில்லை. ஆயுதங்களையும் செல்லாத லைசன்சுகளையும்கைப்பற்றி அவனுடைய சரியான பெயரும் இருப்பிடமும் தெரிந்துகொண்டு மேற்படி சாமான்களை ஸ்டேஷனுக்குகொண்டுவரவேண்டியது. கி. பு. கோ. 57-வது செக்ஷன் படி நடவடிக்கை நடத்தவேண்டியது.

1908-ம் வருஷத்து 17-வது இந்து தேசத்து ஆள்கள் குடியேறுவதைக் குறித்த ஆக்ட்.

(1) சிலோனுக்கும் பினாங்கு சிங்கப்பூர் மலாக்கா ஆகிய ஸ்ட்ரெயிட் செட்டில்மெண்டுக்கும் சுயேச்சையாய்க் குடியேறிப்போகலாம்.

(2) இந்தியாவிற்கு வெளியில் வேறெந்த இடத்துக்கும் இந்த ஆக்டின்படிஉள்ள லைசன்சு இல்லாமல் குடியேறிப்போகக்கூடாது.

(3) ஜில்லா கலெக்டரிடமிருந்தாவது சென்னபட்டணத்திலுள்ள குடியேறும்ஆட்கள் சம்ரக்ஷணைக்கர்த்தரிடமிருந்தாவது (Protector of Emigrants) லைசன்சு பெற்றவர்கள் மாத்திரம்தான் குடியேறக் கூலிகளைச் சேர்க்கலாம்.

(4) லைசன்ஸ் பெற்ற மேஸ்திரியானவன் சென்னப்பட்டணத்துக்கு வெளியில் ஆட்களைச் சேர்க்க வேண்டுமானால் அந்த லைசன்சில் அவ்விடத்து ஜில்லா மாஜிஸ்திரேட்டின் கையெழுத்து செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(5) ஆட்களைச் சேர்க்கும் மேஸ்திரியானவன் இந்த ஆக்டின்படி எந்த ஜில்லாவில் ஆட்களைச் சேர்க்கிறானோ அந்த ஜில்லாவில்—

(i) டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட், அல்லது

(ii) சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட், அவர்களில்லாவிட்டால்

(iii) ஜில்லா கஜானா டிப்டி கலெக்டர், இவர்கள்

ஒரு கூலியை குடியேறும் ஆளாக தாக்கல் செய்த பிறகுதான் ஆட்களை சேர்க்குமிடத்திற்கு (எமிகிரேஷன் டெப்போ) அழைத்துப்போகலாம்.

அதிகாரங்கள்.—இந்த ஆக்டின்படி லைசன்சு பெற்ற மேஸ்திரியைத்தவிர மற்றவர்கள் யாராவது இந்த ஆக்டின் விதிகளுக்கு மாறாக கீழே சொல்லியிருக்கிறபடி செய்தால் அவர்களை வாரண்டில்லாமல் பிடிக்கலாம்—

(a) இந்தியாவிலுள்ள யாதாமொரு சுதேசியைக் குடியேறும்படியாக உடன்படிக்கை அவனோடு செய்தல் அல்லது செய்ய எத்தனித்தல்.

(b) கூலியாவது வெகுமதியாவது பெற்றுக்கொண்டு அதன்காரணமாக இந்தியாவிலுள்ள ஒரு சுதேசியை குடியேறிப் போவதற்கர்க ஓரிடத்தைவிட்டு இடம் மாறத் தூண்டல் அல்லது தூண்ட யெத்தனித்தல், ஆட்களைச் சேர்க்கிற மேஸ்திரியாக மற்றப்படி பாவித்துக் கொள்ளல் அல்லது அமர்ந்திருத்தல்.

(c) கூலியாவது இனமாவது பெற்றுக்கொண்டதின் காரணமாக ஒருவனைக்குடியேறுகிறவனுக் ரிஜிஸ்டர் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடும் அப்படி ரிஜிஸ்டர் ஆனபிறகு கப்பல் ஏறவேண்டிய இடத்திலுள்ள டிப்போவுக்குப் போகும்வரையில் அவனை எவ்விடத்திலாகிலும் வரப்பெற்றல் அல்லது நிறுத்தி வைத்தல்.

அலுவல்.—ஆட்கள் சேர்க்கும் மேஸ்திரிகளினுல் செய்யப்பட்ட தவறுதல்களையும் கொடுமைகளையும் அவ்விடத்துக்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டுக்குத் தெரியப் படுத்துவதற்காக ஸ்டேஷனுபிசர்நோட்டீசுக்குக் கொண்டுவரவேண்டியது.

1878-ம் வருடத்து 1-வது அபினி ஆக்ட்.

குற்றங்கள் - பரிமுதலாகத்தக்க அபினி.—(1) சாதாரணமான இடங்களில் ஒரு தோலாவுக்கதிகமாயும் கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி எஜன்சிகளில் 6 தோலாவுக்கதிகமாயும் ஜில்லா கலெக்டரிடமிருந்து லைசென்சு அல்லது ராதாரியில்லாமல் வைத்திருத்தல, செய்தல், விற்றல், இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்தல்.

(2) லைசன்சுபெற்ற மருந்துவியாபாரி லைசன்சில் கண்டதிற்கதிகமாக ஏற்றுமதி இறக்குமதி செய்தல், அல்லது ஊர் ஊராய் அனுப்புதல்.

கான்ஸ்டேபிலின் அதிகாரமும் அலுவலும்.—மேலே கூறப்பட்ட அபினி முழுவதையும் கைப்பறறி குற்றவாளியை அரஸ்டு செய்து தாமதமன்னியில் அவைகளைச் சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுபீசரிடத்துக்குக் கொண்டு போகவேண்டியது.

1911-ம் ஷுத்திய 3-வது குற்றம் செய்யக்கூடிய கூட்டத்தாரைப்பற்றிய ஆக்ட்.

I. (i) ஜாமீன்பேரில் விடக்கூடாத குற்றங்களை அடிக்கடி செய்துகொணடிருக்கும் கெட்ட நடத்தைக்காரர்கள் குற்றம்செய்யக்கூடிய கூட்டத்தார்களென்று கவர்ன்மெண்டாரால் விளம்பரம் செய்யப்படலாம்.

(ii) கவர்ன்மெண்டார் அந்தக் குற்றமுள்ள கூட்டத்தாரில் ஒவ்வொரு நபரையும் ரிஜிஸ்டர் செய்யும்படி உத்திரவு செய்யலாம.

(iii) அவ்விதமாக ரிஜிஸ்டரான நபர்கள் ஒவ்வொருவரும் தன இருப்பிடத்தையும் இருப்பிடம் மாற்றுவதையும் தெரியபபடுத்தும்பொருட்டும் அல்லது குறிப்பிட்ட காலங்களில் ரிப்போர்ட் செய்யும்பொருட்டும் கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யலாம்.

(iv) அவர்களைக் குறிப்பிட்ட ஸ்தானத்துக்கப்பால் போகாமலிருக்கும்படி கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யலாம்.

II. 10-வது பி செக்ஷன்படி இருப்பிடத்தையும் இருப்பிடம் மாறுதலையும் தெரியப்படுத்தும்படி உத்திரவு செய்யப்பட்ட குற்றம் செய்யக்கூடிய கூட்டத்தார்களிலுள்ள

ஒவ்வொரு ரிஜிஸ்டர்செய்யப்பட்ட நபரும் ஷெ உத்திரவு பிரசுரம்செய்யப்பட்டதுமுதல் 24 மணி நேரத்துக்குள் தன்னுடைய நிலையான தங்குமிடத்தை அக் கிராம மணியகாரனிடமாவது வேறே எந்த கிராமத்திலாவது சொற்பகாலம் தங்கினால் அந்த ஊர் கிராமமணியக்காரனிடமாவது தெரியப்படுத்தவேண்டியது.

III. இவர்களில் எவனாவது ஒருவன் சொற்பகாலத்திற்காவது அல்லது நிலையாகவாவது தன் இருப்பிடத்தை மாற்றவேண்டுமென்று எண்ணமிருந்தாலும் அல்லது சூரிய அஸ்தமனத்திற்கும் சூரிய உதயத்திற்கும் மத்தியில தன் இருப்பிடத்தில் ஆப்ஸண்டாகவேண்டியிருந்தாலும் தன் இடத்தை விடுவதற்குமுன் 24 மணி நேரத்துக்குள அந்த கிராம முனிசீப்பிடத்தில் தன் எண்ணத்தை தெரியப்படுத்துவதுடன் அவனிடத்தில்—

(i) எந்தத் தேதியில் தான் புறப்படவேண்டுமென்பதையும்,

(ii) எந்தக் கிராமத்தில் யாருடைய வீட்டிற்குப் போகவேண்டுமென்பதையும்,

(iii) பின்னிட்டு நிலையாகவாவது. சொற்பகாலத்துக்காகவாவது எந்தக் கிராமத்தில் யாருடைய வீட்டில் தங்கப்போகிறான் என்பதையும்,

(iv) அவன் ஆப்சண்டாயிருக்கும்காலம் சொற்பகாலமாயிருந்தால் எவ்வளவு காலத்துக்கு ஆப்சண்டாயிருப்பான் என்பதையும் தெரியப்படுத்தவேண்டியது.

IV. அப்படிப்பட்டவன் நிலையாகவாவது சொற்பகாலத்திற்காகவாவது தங்கவேண்டுமென்று வந்தவுடனே

அந்த கிராம மணியகாரனிடத்தில் தான் இன்ன இடத்தில் தங்கியிருக்கிறேன் என்று தெரியப்படுத்தவேண்டியது.

V. மேலே கூறிய 2, 3, 4 பாராவில் கண்டபடி தன் இருப்பிட விஷயமாய்த் தெரிவித்துக்கொள்ளும் நபருக்கு அடியில் கண்டபடி சர்டிபிக்கேட் ஒன்று கொடுக்க வேண்டியது.

சர்டிபிகேட்.

ஊரில் *நிலைவாசியான
குற்றமுள்ள கூட்டத்தாரைச் சேர்ந்த ரிஜிஸ்டர்
செய்யப்பட்டவனாகிய இந்த இடத்தை
இந்த ஷூ ஸ்ரீ வ யில் விட்ட
இந்த கிராமம் / டவுனில் *வசிக்க எண்ணுகிறான்.
அல்லது தங்குவதற்கு இந்தக் கிராமத்திற்கு *வந்து சேர்ந்தான்
என்கிற நோட்டீசை இடமிருந்து பெற்றுக்கொண்டேன்.

தேதி

மணியகாரன்,

கிராமம்

* குறிப்பு.—மேலேசொல்லிய சர்ட்டிபிகேட்டில் வேண்டாத பதிவுகளை அடித்துவிடவும்.

VI. இந்தக் கூட்டத்தைச்சேர்ந்த நபரில் ஒருவன் தான்வசிக்கும் இடத்தைவிட்டு நிலையாகவாவது அல்லது சொற்பகாலத்துக்காகவாவது இடம் மாறப்போகிறான் என்று கிராமத்தலைவனுக்கு 3-வது பாராவில் கண்டபடி சமாசாரம் எட்டியவுடன் அத்தலைவன் உடனே அந்த நபர் எங்கேபோய்வசிக்கப்போகிறானோ அந்தக் கிராமத் தலைவனுக்கும் தன்னூர் ஸ்டேஷனுபிசருக்கும் அவன் புற

ப்படும் தேதியையும் விஷயத்தையும்பற்றித் தெரிவிக்க வேண்டும்.

VII. மதராஸ் சிட்டியிலும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டினல் ஜில்லா கெஜெட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற டவுன் அல்லது வேறு குறிப்பிட்ட ஸ்தலத்தில் கிராமத்தலைவன் செய்யவேண்டிய டியூட்டிகளை அந்த ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் யார் சரகத்தில் வசிக்கிருனே அவ்வூர் போலீஸ் ஸ்டேஷனுபீசர் அல்லது அவுட்போஸ்ட் ஆபீசர் செய்வார். அப்போது அந்த நபர்கள் கிராமத்தலைவனுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டிய விஷயங்களை மேல்கண்ட ஆபீசருக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

ஒருபோலீஸ் கான்ஸ்டேபிலின் அலுவல்.—(1) மேற்கூறியவிதமாக ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நபர் யாராவது யாதாமொரு கிராமத்திலாவது டவுன்முதலிய இடங்களிலாவது வேண்டிய சர்டிபிக்கேட் இல்லாமல் திரிந்துகொண்டிருக்கப்பார்த்தால் போலீஸ் கானஸ்டேபில் அவனைப்பிடித்து உடனே போலீஸ்ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகவேண்டும்.

(2) ஒரு கான்ஸ்டேபில் கிராமங்களுக்குப் போகும்போது ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நபர்கள் கிராமங்களில் ஆஜரிலிருக்கிருர்களா இல்லையாவென்று பார்த்துவந்து ஸ்டேஷனுபீசருக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும்.

குறிப்பு—இப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட நபர்களின் பெயர் அங்கங்கேயுள்ள ஸ்டேஷனுபீசராவது கிராமத்தலைவனவது வைத்திருக்கும் "கிரிமினல் டிரைப் ரிஜிஸ்டரில்" (Criminal Tribe Register) அகப்படும்.

IV-வது அத்தியாயம்.

மாமூல் அலுவல்கள்.

ட்டியிலிருக்கும்போது போலீசார் நடந்துகொள்ளவேண்டிய விதம்.—(1) ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனெதிரில் எவனாவது சட்டத்தைமீறி நடக்காதபட்சத்திலாவது சட்டத்தை மீறினதாக குற்றம் சாட்டப்படாதபட்சத்திலாவது அல்லது சட்டத்தை மீறுவான் என்று நம்புவதற்கு நியாயமான முகாந்திரமில்லாதபட்சத்திலாவது 'அவனை அதட்டிப்பேசுவதற்கும் அல்லது வேறெவ்விதமாகவும் அவனிடத்தில் பிரவேசிப்பதற்கும் மேற்படி உத்தியோகஸ்தனுக்கு யாதொரு பாத்தியமுமில்லை. ஆகையால் போலீஸ் உத்தியோகஸ்தன் ஜனங்களின்விஷயத்தில் பிரவேசிப்பதற்கு அவசியம் அதிகமாய் ஏற்படாது.

(2) தன்னுடைய வேலையினிமித்தம் அவசியமிருந்தாலொழிய ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன் தான் அலுவலிலிருக்கும்போது ஒருவனைக் கூப்பிடவாவது அல்லது எதிர்த்துப்பேசவாவது கூடாது. அப்படியே பேசவேண்டியசந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அதிக அடக்கமாயும்மரியாதையாயும் நடந்துகொள்ளவேண்டியது.

(3) ஒருவன் குற்றம்செய்ய எண்ணங்கொண்டிருப்பதாக அனுமானிப்பதற்கு நியாயம் இருக்கும் சமயத்தில் கூட அவனை நன்றாய் கவனித்துப்பார்த்துக்கொண்டு தன்னால் பார்க்கப்பட்டிருக்கிறானென்று அவன் தெரிந்துகொள்ளும்படியாகச்செய்தால் அதுவே போதுமானது.

இப்படிச் செய்கிறபட்சத்தில் ஒருவனும் குற்றம் செய்யத் துணியமாட்டான்.

ஆர்டர்லிகள்—ஆர்டர்லிகள் சாதாரணமாய்—

(i) மாஜிஸ்டிரேட்டுகளுக்கும்;

(ii) போலீஸ் டிபார்ட்மெண்டில் சப் இனிஸ்பெக்டர் அந்தஸ்துக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கும்;

(iii) போலீஸ் ஆஸ்பத்திரிகளுக்கும்;

கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாஜிஸ்டிரேட் ஆர்டர்லிகளின் அலுவல்

1. ஆஜர்.—கோர்ட்டில் கேசுகள் விசாரணையாய்க்கொண்டிருக்கும் சமயத்தில் ஆஜரிலிருந்து கோர்ட்டில் சப்தம், சச்சரவு நடவாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

2. ஒரு கான்ஸ்டேபில் ஆபீசின் சிப்பந்திகள் செய்ய வேண்டிய வேலைகளை செய்யவேண்டியதவசியமில்லை.

3. பிரயாணத்தில்.—மாஜிஸ்டிரேட்டுகளுடன் கூட பிரயாணம்போகும் ஆர்டர்லிகள் எப்போதும் துப்பாக்கி எடுத்துப்போகவேண்டும். அவர்களுடைய சாமான்களைப் பத்திரமாய் எஸ்கார்ட்டு செய்யவேண்டும்.

4. டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுகளின் ஆர்டர்லிகள்.—டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டுகளின் ஆர்டர்லிகள் ஆபீசு பியூன்கள் மற்ற வேலைக்காரர்களுடன் தாங்களும் முறைப்படி ஆபீசில் இரவில் படுத்துக்கொள்ளவேண்டும். என்றாலும் ஒருவாரத்தில் இரண்டு இரவுக்குமேல் எந்த ஆர்டர்லியும் ஆபீசில் படுக்கவேண்டிய அவசியமிருக்காது.

கேடிகள். (போ. ஆ. 445 வால்யூம் I.)

மேலேசொல்லியிருக்கும்விதமாக சிக்ஷையடைந்தவர்கள் கே. டி. (பிரசித்த குற்றவாளிகள்) என்று சொல்லப்படுவார்கள் :—

1. இ. பி. கோ. 12 அல்லது 17-வது அத்தியாயத்தின்படி உள்ள குற்றங்களைச்செய்து அதற்காக ஆயுசுபரியந்தம் தீவாந்தர சிக்ஷையடைந்து திரும்பிவந்தவன்.

2. வழக்கமாய் விஷம் இடுபவர்கள்.

3. இ. பி. கோ. 395 முதல் 402 செக்ஷன்வரையில் உள்ள குற்றங்களைச்செய்து ஒருதரம் தண்டனையடைந்தவன்.

4. இ. பி. கோ. 392 முதல் 394 செக்ஷன்படி இரண்டுதரம் தண்டனையடைந்தவன். அல்லது இந்த செக்ஷன்களின்படி தண்டனையடைந்து பின்னிட்டு இ. பி. கோ. 75 செக்ஷன்சேர்த்து தண்டனையடையக் கூடியவன்.

5. கன்னக்கேசில் இரண்டுதரம் தண்டனையடைந்தவன்.

6. களவுகேசில் 3 தரம் தண்டனையடைந்தவன்.

7. கி. பு. கோ. 109, 110 செக்ஷன்படி நல்லநடத்தை ஜாமீன்கேசில் ஒருதரம் தண்டனையடைந்தவன்.

சந்தேக நபர்கள். (போ. ஆ. நெ. 447.)

(1) இந்தியன் பினல்கோடின் எந்த செக்ஷன்படி யாவது ஒருதரம் தண்டனையடைந்து மறுபடியும் குற்றம் செய்யக்கூடியவர்களாகக் கருதப்படுபவர்கள்.

(2) தண்டனை யடையாமலிருந்தும் குற்றத்தொழிலை பூண்டவர்களாகக் கருதப்படுபவர்கள்.

சர்வைவலன்ஸ் ரிஜிஸ்டர்.

கேடிகள், சந்தேகநபர்கள், இவர்களில் அபாயகரமானவர்களையும் பேர்போன கெட்டநடத்தையுள்ளவர்களை

யும் கண்ணேக்கம் வைப்பதற்காக போலீஸ் ஸ்டேஷனி லுள்ள சர்வைலன்ஸ் ரிஜிஸ்டரில் எழுதிவைத்திருக்கப் படும்." அந்த ஸ்டேஷனைச்சேர்ந்துள்ள ஒவ்வொரு கான் ஸ்டேபிளுக்கும் அவர்களைப்பற்றி நன்ருய்த் தெரியவே ண்டும்.

கெட்ட நடத்தைக்காரர் விஷயமாய் கான்ஸ்டேபி
வின் அலுவல்.

1. தானே நேரில் அறிந்துகொள்ளுதல்.—கான்ஸ்டேபில் கள் தங்கள் ஸ்டேஷன் சரகத்திலுள்ள கெட்டநடத்தைக் கார்ர்கள் எல்லாரையும்பற்றி நன்ருய்த் தெரிந்திருக்க வேண்டும்.

2. அவர்கள் சினேகிதர்களும் விரோதிகளும்.—கான்ஸ்டே பில்கள் அவர்கள்கூட சகவாசம்செய்யப்பட்டவர்களேயும் அவர்கள் சினேகிதர்களேயும் விரோதிகளேயும் தெரிந்திரு க்கவேண்டும்.

3. விசாரணை.—கெட்டநடத்தைக்காரரைப்பற்றி வி சாரிக்கும்போது கீழ் கூறியவைகளேப்பற்றி கவனிக்க வேண்டும்.

(i) (a) அவர்கள் இருப்பும் அல்லது ஆஜர் இல்லாமை யும் ஜீவனமும்.—கேடி அல்லது சந்தேகநபர் கிராமத்தி லிருக்கிருஞ என்பதும் ;

(b) அவனுடைய ஜீவனம் அதாவது அவன் எதாகிலும் வேலேயில் அமர்ந்திருக்கிருஞ அப்படியாஞல் எங்கே; அவனுக்குக்கூலியென்ன அவன் ஆஜரில்லாமலிரு ந்தால் எங்கே எதற்காகப் போயிருக்கிருன் என்பதும் ;

(ii) **அவர்களுடைய தோழர்கள்.**—அவர் யாருடன் சக வாசம் செயகிறுர் என்றும் அவர்கள் யார், அவர்கள் ஜீவனம் என்ன என்பதும் ;

(iii) **அவனைப் பார்க்கவருபவர்கள்.**—யார் இவனைப்பா ர்க்க வருகிறுர்கள் என்பதும், பந்துக்களா அல்லது இதர மனுஷாளா என்பதும, என் வருகிறுர்களென்பதும்,

(iv) **அவன் போகக்கூடிய இடங்கள்.**—சாதாரணமாய் சொந்தக்காரியங்களுக்குப்போவதாயிருந்தால்கூட அவன் எங்கெந்த இடங்களுக்குப்போவது வழக்கம் என்பதும்,

(v) **ஆஜரில்லாமை.**—பகலிலாவது இராத்திரியிலா வது கிராமத்தில் ஆஜரில்லாமலிருக்கிறுனு, அப்படியா னல் எத்தனை நாள், இராத்திரி அல்லது மணிகள் சேர்ந்தாப்போல் ஆஜரில்லாமலிருந்தான் எனபதும் திரும்பிவந்தவுடன் ஆஜரில்லாமலிருந்ததற்கு காரணம் எனன சொல்லுகிறுன் என்பதும்,

(vi) **சந்தேகிக்கக்கூடியவிதமாய் ஆஜரிலில்லாமலிருப்ப தும் அதைப்பற்றி கவனிப்பதும்.**—கான்ஸ்டேபில் போய்ப் பார்க்கும்போது கெட்ட நடத்தைக்காரனுவது அல்லது சந்தேகநபராவது ஆஜரில்லாமலிருந்தாலும் குற்றம் செ ய்வதற்காக அவன் எங்கேயோ வெளியில் போயிருக்கிறு ன் என்று நம்புவதற்கு நியாயமான சந்தேகமிருந்தாலும் அவன் குற்றம் செய்தவுடன் திரும்பிவருவானுகையால் அந்தக் கான்ஸ்டேபில் தன் யுக்தபடி கொஞ்சநேரம் அங் கேயே காத்திருக்கலாம்-அப்படி இருக்கையில் திருடப்பட் டதென்று சந்தேகிக்கக்கூடிய சொத்துக்களுடன் அவன் வீட்டுக்குத் திரும்பிவந்தால் அவனை உடனே அரஸ்டுசெ ய்து போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவரவேண்டும்.

(vii) **சம்பாத்தியமும் செலவும்.**—அவனுக்கு சம்பாத்தியம் எவ்வளவு என்றும் எவ்வளவு செலவிடுகிறான் என்றும் அவன் வெளிப்படையாய் சம்பாதிப்பதற்குமேல் செலவிடுகிறானா என்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

(viii) **ஸ்திரீகளின் ஆபரணம்.**—இவர்களுடைய ஸ்திரீகள் ஏதாவது விலையுயர்ந்த நகைகள் வைத்திருக்கிறார்களா அல்லது அணிந்திருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

(ix) **சமீபத்தில் வசிப்பவர்களின் அபிப்பிராயம்.**—இவன் யோக்கியமான ஜீவனம் செய்கிறானா இல்லையா என்று அக்கம்பக்கத்தாரைக் கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டியது. அப்படிப்பட்டவர்கள் இவன் விரோதிகளாகவும் அல்லது சிநேகிதர்களாகவுமிருக்கலாம். ஆகையால் அவர்கள் சொல்வதை குருட்டுத்தனமாய் நம்பிவிடக்கூடாது.

குற்றவாளிகளையும் சந்தேக நபர்களையும் கண்ணோக்கம் வைத்தல்.

1. (a) ஒரு குற்றவாளி அல்லது சந்தேகநபர் பார்வைக்கு மிகவும் பெருந்தன்மையுடையவனாகவாவது அல்லது மிகவும் கீழ்ப்பட்டவனாகவாவது தென்படலாம்.

(b) நீ அவனை கண்ணோக்கம்வைப்பது அவனுக்குத் தெரியக்கூடாது. ஏனென்றால் அவனுக்குத் தெரியாதிருந்தால் எவ்வளவு சமாசாரம் கிடைக்குமோ அவ்வளவு சமாசாரம் அவனுக்குத் தெரிந்தால் கிடைக்காது.

2. **ஆகையால்,**—

(a) ஒரு நபரை உன்னுடைய பதிலி கான்ஸ்டேபி ளுக்கு ஒப்புவிக்கும்போதாவது அல்லது அவனிடத்திலி ருந்து ஒரு நபரை ஒப்புக்கொள்ளும்போதாவது மிகவும் ஆடம்பரம் செய்யாமல் நடந்துகொள்ளவேண்டியது. உன் விரலால் அந்த நபரை சுட்டிக்காண்பிக்கக்கூடாது.

(b) நீ ஒரு நபரை ஒப்புக்கொள்ளும்போது அவ னைப்பற்றிய விவரங்களை அவனைவிட்டு சற்று தூரம்போய் அவனுக்குத் தெரியாமல் உன்னுடைய நோட்டு புஸ்தகத் தில் எழுதிக்கொள்ளவேண்டும்.

(c) ஆனால் அப்படிச்செய்கையில் நீ யாரை கவ்னி க்கவேண்டுமோ அவன் இன்னானென்று சரியாய்த்தெரிந் துகொள். விசேஷமாய் அவன் முகத்தின் மேல்பாகத் திலுள்ள குறிகளை எழுதிக்கொள்ளவேண்டும். கீழ்ப்பாக ங்கள் துணி அல்லது போர்வைகளால் மறைக்கப்பட்டிரு க்குமாதலால் மேல்பாகங்களின் குறிகளை நன்றாய்த்தெரி ந்துகொண்டால் அவனைப் பிறகு கண்டுபிடிக்க பிசகிப் போகமாட்டாய்.

3. கீழ்க் கூறியவைகளைச் செய்யாதே:—

(a) நேரில் அந்த நபரை ஒன்றும் கேட்காதே. நீ யறியவேண்டிய விஷயங்களை அவனுடன் பிரயாணம்செ ய்கிறவன் மூலமாயாவது மற்றவர்கள மூலமாயாவது சா மர்த்தியமாக தெரிந்துகொள்ளவேண்டியது.

(b) அந்த நபர் எவ்விடம் போகிறான் என்று தெ ரிந்துகொள்ள ஸ்டேஷன்மாஸ்டர், டிக்கட்கொடுக்கிறவர் கள், டிக்கட் கலெக்டர் முதலிய ரயில்வே உத்தியோகஸ்தர் களையாவது வண்டிக்காரர்களையாவது பின்தொடர்ந்து போய் விசாரிக்காதே. அப்படி அவசியம் ஏற்பட்டால்

நீ மாத்திரம் வேறொருவருக்கும் தெரியாமல் மெதுவாய் அறிந்துகொள்ளப் பார்க்கவேண்டியது.

(c) எக்காரணத்தைக்கொண்டும் அந்த நபருடைய ஜோலிக்குப் போகாதே.

(d) அவன் ஜட்காவண்டியில்போனால் நீயும் அதே ஜட்காவண்டியில் போகாதே. வேறே ஜட்காவைத்துக் கொண்டு எவ்வளவு சீக்கிரத்தில் அவனைப் பின்தொடர்ந்து போகக்கூடுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தொடர்ந்து போ. பிறகு ஸ்டேஷனுக்குப்போய் ஸ்டேஷனுபீசருக்கு ரிப் போர்ட்செய்து வண்டிச்சத்தத்தை ஸ்டேஷனுபீசரிடம் கேட்டு வாங்கிக்கொள்ளலாம். நீ எறிப்போகும்பொரு ட்டு வேறு வண்டி கிடைக்காவிட்டால் அந்த நபர் போகி றவண்டியின் நெம்பரும் வண்டிக்காரனுடைய பெயரை யும் தெரிந்துகொள்.

(e) அவன் எந்த வீட்டிலாவது தங்கியிருந்தால் அந்த வீட்டின் திண்ணையிலாவது எதிர்வீட்டுத் திண்ணையிலா வது உட்காராதே. நீ மறைவாக இருந்துகொண்டு கண் ணோக்கம் வைத்துக்கொள்.

(f) நீ அவனை கண்ணோக்கம்வைத்திருக்கிறாய் என் று அவனுக்குத்தெரிந்து கோபப்படுத்தும்படி பலவிதமா கப்பேசினால் அதை ஒருபோதும் சட்டைபண்ணாதே. ஏனென்றால் உன்னைக்கோபப்படுத்த வேண்டுமென்பது தான் அவனுடைய முக்கிய கருத்து.

நீ உன்னையே அடக்கிக்கொள்வது மிகவும் முக்கியம். அவன் ஏதாகிலும் உன்னிடத்தில் பேசினால் மிகவும் விந யமாயும் கூடியவுரையில் மிகக்குறைவாயும் உத்திரவு சொல்லு.

4. பதிலி இடத்தில் அவனை ஒப்புவிக்கிறவரையில் அவன் எங்கே போகிறன் என்றும் என்னென்ன செய்கிறன் என்றும் கவனித்துப் பார்க்கவேண்டும் :

(i) நீ ரயில்வே டிராவலிங் கான்ஸ்டேபிலாயிருந்தால் அடுத்த ரயில்வே டிராவலிங் கான்ஸ்டேபிலிடத்திலும்,

(ii) டவுன் கான்ஸ்டேபிலாயிருந்தால் டவுன் பீட் கான்ஸ்டேபிலிடத்திலும், ஒப்புவிக்கவேண்டும்,

(iii) தாலுக்கா ஸ்டேஷன் கான்ஸ்டேபிலாயிருந்தால் உன்னுடைய ஸ்டேஷனுபீசருக்கு சொல்லியனுப்பியாவது அல்லது அந்த நபர் எந்த வீட்டில் மூட்டை முடிச்சுக்களை வைத்து தங்கியிருக்கிருனே அந்த வீட்டைக் குறித்துக்கொண்டாவது உடனே ஸ்டேஷனுக்குப்போய் ஸ்டேஷனுபீசரிடத்தில் ரிப்போர்ட் செய்தால் அவர் அந்த நபரை கண்ணேக்கம் வைக்கும்படியான தகுந்த ஏற்பாடுகள் செய்வார். நீ ரயில்வே டிராவலிங்கான்ஸ்டேபிலாயிருந்து லோகல்போலீஸ் கான்ஸ்டேபிலில்லாத ஸ்டேஷனில் அவன் இறங்கினுல் நீ அங்கே இறங்காமல் வண்டியிலேயே போய் பிறகு சமீபமாக சந்திக்கப்பட்ட லோக்கல் போலீஸ் கான்ஸ்டேபிலிடமும் உன்னுடைய ஸ்டேஷனுபீசருக்கும் தெரியப்படுத்தவேண்டியது. அவர் அதை அவ்விடத்து லோகல் போலீஸ் ஆபீசருக்குத் தெரியப்படுத்துவார்.

5. எல்லாவற்றிற்கும் மேலாக நீ அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்ருல் நீ கண்ணேக்கம் வைக்கிற வேலையை மிகவும் சாந்தமாகவும் ஆடம்பரமில்லாமலும்,

தடங்கல் இல்லாமலும் செய்யவேண்டும். அதிகமாய்ப் பேசாமல் கண்களையும் காதுகளையும் உபயோகப்படுத்தி உனக்குவேண்டிய சமாசாரங்களைத் தெரிந்துக்கொள்.

டவுன் ஸ்டேஷன்.

1. **டவுன் ஸ்டேஷனிலுள்ள மாமூல் டியூட்டிகள்.**—ஒவ்வொரு திங்கட்கிழமை மத்தியானமும் அப்போது டியூட்டியிலிருக்கப்பட்டவர்கள் தவிர ஸ்டேஷனிலுள்ள மற்ற எல்லாரும் ஸ்டேஷனுக்கு கிட் இன்ஸ்பெக்ஷனுக்கும் டிரிலுக்கும் படிப்புக்கும் சாயந்திரம் 5 மணிக்கு ஆஜராகவேண்டியது.

2. **ஆயுதங்களை சுத்திசெய்வதும் டிரிலும்.**—மற்ற நாட்களில் காலை 5 மணிமுதல் 11 மணிவரையில் டியூட்டியிலிருந்தவர்கள் சாயந்திரம் 5 மணிக்கு ஆயுதங்களை சுத்திசெய்வதற்கும் படிப்புக்கும் டிரிலுக்கும் ஸ்டேஷனுக்கு வரவேண்டியது.

3. **பெட்டிக் டியூட்டி.**—ஒவ்வொரு சனிக்கிழமையும் பெட்டிக் டியூட்டி செய்யப்படும்.

டவுன் பீட் டியூட்டி.

1. டியூட்டிக்கு இருக்கப்பட்ட கான்ஸ்டேபில்களை எட்கான்ஸ்டேபில்சார்ஜில் ஏ, பி, ஸி என்ற மூன்று சரிபாகமான செக்ஷன்களாகப்பிரிக்கப்படும்.

2. **சேக்ஷன்கள்.**—ஒவ்வொரு செக்ஷனும் அடியில் கண்டபடி வரிசையாக டியூட்டி செய்யவேண்டியது.

பகல்.
- (ஏ) A செக்ஷன்-காலை 5 மணிமுதல் 11 மணி வரையில்.
- (பி) B ,, காலை 11 மணிமுதல் மாலை 3 மணி வரையில்.
- (சி) C ,, மாலை 3 மணிமுதல் இரா 9 மணி வரையில்.

இரா.
- (ஏ) A செக்ஷன்—இரா 9 மணிமுதல் மருநாட் காலை 3 மணி வரையில்.
- (பி) B ,, இரா 11 மணிமுதல் மருநாட் காலை 5 மணி வரையில்.

மறுபடியும் மேலேகண்டமாதிரிதான் டியூட்டி செய்ய வேண்டியது.

3. **டியூட்டி நியமித்தல்.**—செக்ஷன்டியூட்டி செய்யாத மற்ற கான்ஸ்டேபில்களுக்கு அவர்கள் போகும்போது டியூட்டி நியமித்து அதை பிரதிதினம் காலை 6 மணிக்கும் செக்ஷன்டியூட்டி செய்கிறவர்களுக்கு அவர்கள் புறப்படும்போதும் டியூட்டி ரோஸ்டரில் பதியவேண்டியது.

4. **ஸ்டேஷனில் கூடுதல்.**—டியூட்டிக்கு வரப்பட்ட கான்ஸ்டேபில்கள் குறிப்பிட்ட நேரத்துக்குக் கால்மணிக்கு முந்தி, உத்திரவு வாங்கிக்கொள்வதற்கும் கேசுகள் முதலானவைகளைப்பற்றி தெரிந்துக்கொள்வதற்கும் ஸ்டேஷனுக்கு வரவேண்டியது.

5. **பீட்டுக்கு அனுப்புதல்.**—பிறகு அந்த செக்ஷன் எட் கான்ஸ்டேபில் ஒருவர் அவர்களை ஒன்ருய் டியூட்டி போஸ்டுக்கு மார்ச்சு செய்து போவார்.

6. **திரும்பி ஸ்டேஷனுக்கு வருதல்.**—டியூட்டி முடிந்தவுடனே கூடுமானமட்டில் அவர்களை ரிலீப்செய்து செக்ஷன் எட் கான்ஸ்டேபில் ஸ்டேஷனுக்குத் திரும்பி மார்ச்சு செய்து போகவேண்டியது.

7. டியூட்டி முடிந்தவுடன் ஸ்டேஷனில் ரிப்போர்ட்செய்தல்.—ஒவ்வொரு கான்ஸ்டேபிளும் டியூட்டிமுடிந்து திரும்பி வீட்டுக்குப் போகுமுன் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்து போகவேண்டும்.

8. பேட்டன்கள் பட்காக்கள் தடிகள்.—பகல் காலத்தில் கான்ஸ்டேபில்கள் பீட் பட்காவை கட்டிக்கொண்டு பேட்டனை போட்டுக்கொண்டிருக்கவேண்டும். இராக்களில் ஒரேமாதிரியாயுள்ள மூங்கில் அல்லது லட்டிகளை எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

9. மேலான உத்தியோகஸ்தர்கள் தனிக்கை செய்தல்.—மேலான உத்தியோகஸ்தர்கள் அதாவது எட் கான்ஸ்டேபில்கள், சார்ஜெண்டுகள், சப் இன்ஸ்பெக்டர்கள், சர்க்கில் இனிஸ்பெக்டர் முதலியவர்கள் பீட் செக் செய்வார்கள்.

10. பீட் புஸ்தகம்.—ஒவ்வொரு கான்ஸ்டேபிளும் பீட்டுக்குப் புறப்படுவதற்குமுன் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட பீட் புஸ்தகத்தை ஸ்டேஷனிலிருந்து வாங்கிக்கொண்டு அவர்கள் பீட்டிலிருக்கும்போது யாராவது செக் செய்ய வந்தால் அவர்கள் கையெழுத்துக்காக அந்த புஸ்தகத்தைக் கொடுக்கவேண்டியது.

பகல் காலத்தில் டவுன் பீட் கான்ஸ்டேபில் வேலை.—(1) தன்னுடைய பீட்டில் எல்லாவற்றையும் கண்ணினால் பார்த்துக்கொண்டும் காதினால் கேட்டுக்கொண்டும் சாவகாசமாய் உலாவித்திரிவது.

(2) சந்தேகிக்கக்கூடிய நபர்கள்.—சந்தேகத்துக்கிடமாய்க்காணப்படுகிற எல்லா மனிதர்களையும் மூட்டை முடிச்சு கொண்டுபோகும் மனிதர்களையும் கவனித்துப் பார்ப்பது.

(3) **சாராயக்கடைகளும் திருட்டுச்சொத்து வாங்குபவர்களும்.**—சாராயக்கடைகளின் பேரிலும் திருட்டுச்சொத்து வாங்குபவர்கள் வீடுகள்பேரிலும் கவனம் வைத்து அவைகளில் நுழைகிறவர்களை அடையாளம் பார்ப்பது.

(4) **நியூசன்ஸ்.**—நியூசன்ஸ் கேசுகள், இடைஞ்சல்கள் செய்வது, முனிசிபல் சட்டத்தை மீறி நடப்பது இவைகளை தடுப்பதுடன் நியூசன்ஸ் செய்பவர்களை சார்ஜ் செய்வது.

(5) **கூட்டம்.**—கூட்டங்களினால் தடங்கல்கள் நேரிட்டாலும் அமரிக்கைக்கு பங்கம நேரிடும்போலிருந்தாலும் அப்பேர்ப்பட்ட கூட்டங்களை கலைத்துவிடுவது.

(6) **விசேஷமான சங்கதிகள்.**—ஏதாவது விசேஷமிருந்தால் உடனே ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியது.

இராக்காலத்தில் டவுன் பீட் கான்ஸ்டேபில் வேலை.—(1) திருடர்களை கவனிக்கக்கூடிய விதமாய் ஜாக்கிரதையாய் உலாவித்திரிவது.

(2) **வீடுகளும் புறக்கடைகளும்.**—வீடுகளின் கதவுகளும் ஜன்னல்களும் தாளபோடப்பட்டிருக்கின்றனவா என்று பாரப்பது. காலி வீடுகளையும் புறக்கடைகளையும் முக்கியமாய் கவனிப்பதும்.

(3) **நேரந்துபோகும் வழிகளை மாற்றுவது.**—பீட் கான்ஸ்டேபில் வந்து போய்விட்டான் இனிமேல் பயமில்லையென்று நினைக்கிற திருடர்களைத்தந்திரமாய் பிடிக்கும்படிக்கு ஒரேவழியாய் ரோந்துபோகாமல் போனவழியை மாற்றுவதும் சென்ற இடத்துக்கே மறுபடிச் செல்வதும்.

(4) **விடியற்காலச் சமயத்தில் உஷாராயிருப்பது.**—திருடர்கள் திருட்டுச் சொத்துக்களை எடுத்துக்கொண்டு விடியற்கால சமயத்தில் திரும்புவார்களான தினுல் அந்தச் சமயத்தில் முக்கியமாய் உஷாராயிருப்பது.

(5) **கேடிகளும் சந்தேக நபர்களும்.**—கேடிகளும் சந்தேக நபர்களும் தங்கள் வீடுகளில் ஆஜரிலிருக்கிறார்களா இல்லையா என்று தணிக்கை செய்வது.

கிராம பீட்டுகள்.

கான்ஸ்டேபில்கள் தங்கள் ஸ்டேஷனுபீசர் குறிப்பான விஷயமாய் திட்டமாய் உத்திரவு செய்தாலல்லாமல் கிராமங்களுக்குப்போகக்கூடாது. ஆனால் சம்மன் ஜாரி முதலிய டியூட்டிகளிலிருநது திரும்பிவரும்வழியாய் கிராமங்களிருந்தால் அதைப் பார்த்து வரலாம்.

கான்ஸ்டேபில்கள் கிராம பீட்டுக்கு அனுப்பப்படவேண்டிய சந்தர்ப்பங்கள்.

1. தங்கள் கிராமங்களில் நடந்த குற்றங்களைப்பற்றி ரிபோர்ட் செய்யமாட்டார்களென்று நம்பக்கூடிய கிராம அதிகாரிகள் இருக்கும் கிராமங்களில் சமாசாரங்களறிந்து வருதல்.

2. கண்ணேக்கம் வைக்கவேண்டிய விசேஷமாய் அபாயகரமான குற்றவாளிகளும் கூட்டங்களும் கிராமங்களிலிருநதால் அவர்களைக் கவனித்தல்.

3. சத்திரம், சாவடிகள், வண்டிப்பேட்டைகள் ஜனங்கள் வழக்கமாய்க் கூடுமிடம் முதலியவைகளில் தங்குபவர்களிடமிருந்து சமாசாரங்கள் சேகரித்து வருதல்.

4. சில குறிப்பிட்டகிராமங்களில் கெட்ட நடத்தைக் காரர்கள் சமீபத்திலிருக்கிறார்களாவென்று தெரிந்து வருதல்.

5. ஏதாவது ஒரு காரியத்தைப்பற்றி திட்டமான புலம் தெரிந்துவருதல், சம்மன் ஜாரிசெய்தல்.

கிராமங்களுக்கு பீட்போகும் கான்ஸ்டேபிலின் அலுவல்கள்.

1. கிராம மாஜிஸ்டிரேட், கர்ணம், கிராமபோலீசார் முதலியவர்களைக்கண்டும், கிராமத்திலுள்ள முக்கியமான குடிகளுடன் புது கேசுகளையும் பழைய கேசுகளையும்பற்றி சம்பாஷித்தும் வரவேண்டும்.

2. சந்தேகப்பட்ட கிராமங்களும் கிராம மாஜிஸ்டிரேட்டுகளினல் குற்றங்கள் ரிப்போர்ட் செய்யப்படாமல் அடக்கிவைத்தலும்.—கிராம அதிகாரிகள் தங்கள் கிராமங்களில் நடந்த குற்றங்களை ரிப்போர்ட் செய்கிறதில்லையென்று நம்புவதற்குக்காரணம் உண்டானால் அந்தக் கிராமத்தில்போய் அவைகளைபபற்றின சமாசாரங்களையும் அதை அடக்கிவைத்தலையும அல்லது வேறுவிதமாய் பைசலானதையும் பற்றி சமாசாரம் தெரிந்துவரவேண்டும்.

3. கண்டுபிடிக்கப்படாமலிருக்கிற குற்றங்களின் புலம்.—கண்டுபிடிக்கப்படாமல் பாக்கியிலிருக்கிற குற்றங்களைப்பற்றி ஏதாவது தகவல்கள் தெரிந்துகொள்ளவும் அக்குற்றங்களைப்பற்றி கிராமத்தார் பொதுவாய் என்ன அபிப்பிராயப்படுகிறார்களென்றும் தெரிந்துகொள்ளவேண்டும்.

4. கூட்டங்கள்.—நாடோடிக் கூட்டங்கள் அந்த கிராமத்துக்குள் சென்றதா அல்லது அந்த கிராம எல்லைக்குள்

தங்கியிருக்கின்றனவாவென்றும் அப்படிப்பட்ட கூட்டத்தாரைப்பற்றிய எல்லா விவரங்களும் தெரிந்துவரவேண்டும்.

5. அன்னியர்கள்.—கிராமத்தில் அன்னியர்கள் யாராவது வந்திருந்தால் அவர்கள்யார், ஏன் வந்திருக்கிறார்கள், அவர்கள வந்து தங்கியிருக்கும் வீட்டிலுள்ளவர்கள் அவர்கள் பந்துக்களா அல்லது முன் பழக்கமுள்ள இஷ்டரா. அவர்கள் அப்படி அவனிடம் வந்திருப்பதில் ஏதாவது சந்தேகம் தோன்றுகிறதா என்கிற விபரங்களை அறியவேண்டும்.

குறிப்பு.—அன்னியர்களைப்பற்றி எழுத கிராம மாஜிஸ்டிரேட்டுகளிடத்தில் ஒரு ரிஜிஸ்டர் உண்டு. அதை பீட் கான்ஸ்டேபில்கள் பார்த்துவரவேண்டும்.

6. குற்றம்.—அன்னியர்கள் வந்து தங்கியிருந்த காலத்தில் ஏதாவது குற்றங்கள் கால்நடைத் திருட்டுகள், அல்பத்திருட்டுகள் நடந்திருக்கின்றனவாவென்று தெரிந்துகொள்ளவேண்டும்.

7. கேடிகளும் சந்தேக நபர்களும்.—கண்ணோக்கம் வைக்கப்பட்டிருக்கும் கேடிகள் சந்தேகநபர்கள கிராமங்களில் ஆஜரிலிருக்கிறார்களா இல்லையாவென்றும் அவர்கள் எவ்விதமாக ஜீவனம் செய்கிறார்கள் என்றும், இவர்களைப் பார்க்க இவர்கள் சிநேகிதர்களாவது சொந்தக்காரராவது வந்திருக்கிறார்களா வென்றும் அப்படிப்பார்க்கவந்தவர்கள் யார், எக்காரணத்துக்காக இவர்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்றும் விசாரிக்கவேண்டும்.

குறிப்பு.—கிராம மாஜிஸ்திரேட்டுகளிடம் கேடி ரிஜிஸ்டர் இருக்கும். கான்ஸ்டேபில்கள் அதைப்பார்த்துவரவேண்டும்.

8. **ஓட்டல்களும் கள்ளுக்கடைகளும்.**—ஓட்டல்கள், சத்திரங்கள், கள்ளுக்கடைகள், வண்டிப்பேட்டைகள், இவைகளையும் பார்த்து வருவதுடன் அங்கேவரப்பட்ட அன்னியர்களையும் கெட்டநடத்தைக்காரர்களையும் கவனித்துப் பார்த்தும் சுற்றுக் கிராமங்களிலும் ரோட்டுகளிலும் நடக்கப்பட்ட குற்றங்களைப்பற்றி தகவல்கள் அறிந்தும் வரவேண்டியது.

9. **கூட்டங்களும் பஞ்சாயத்துகளும் அமரிக்கைக்கு பங்கம் நேரிடுதலும்.**—ஏதாவது கூட்டங்களாவது பஞ்சாயத்துகளாவது வைக்கப்பட்டனவாவென்றும் அவைகளில் என்ன விஷயங்கள் பேசப்பட்டனவென்றும்,

(ii) பணம் வசூல் செய்யப்பட்டிருந்தால் எதற்காகவென்றும்,

(iii) கிராமங்களில் கட்சிகள் ஏற்பட்டிருந்தால் கடைசியாக இருகட்சிக்காரர்களாலும் என்ன ஆலோசிக்கப்பட்டனவென்றும்,

(iv) கலகாஸ்பதமான சந்தர்ப்பம் ஏதாவது ஏற்பட்டிருக்கின்றனவாவென்றும்,

தெரிந்துவரவேண்டும்.

10. **கள்ள நாணயங்கள்.**—கள்ளநாணயங்கள் ஏதாவது சமீபத்தில் வழங்கப்பட்டிருந்தால் யார் கொடுத்தது என்றும் அவன் என்ன சொல்லுகிறான் என்றும் தெரிந்துகொள்ளவேண்டியது.

11. **பீட்டிலிருந்து திரும்பிவந்ததும் சமாசாரம் தெரியப்படுத்தல்.**—(i) மேற்கூறியபடி கிடைத்த எல்லா சமாசாரத்தையும் நோட்டுப் புஸ்தகத்தில் குறித்து பீட்டிலிருந்து

திரும்பிவந்ததும் எல்லாவற்றையும் ஸ்டேஷனுபீசருக்கு ரிபோர்ட் செய்யவேண்டியது.

(ii) பீட் புஸ்தகமும் நோட் புஸ்தகமும்.—பீட்டுக்குப் புறப்படுவதற்கு முன் கான்ஸ்டேபில் தன்னுடைய நோட் புஸ்தகத்தையும் அந்த பீட்டைச்சேர்ந்த பீட் புஸ்தகத்தையும் ஸ்டேஷன் ரைட்டரிடத்திலிருந்து வாங்கிக்கொண்டு போகவேண்டியது. எந்த கிராமம் அல்லது கிராமங்களைப் பார்க்கிறுனே அக்கிராமஉத்தியோகஸ்தரிடமாவது வேறு பெருங் குடித்தனக்காரரிடமாவது பீட் புஸ்தகத்தில் கையெழுத்து பெற்றுவரவேண்டியது.

ரோட் பெட்ரேலைப்பற்றிய விதிகள்.

1. பலம்.—ஒவ்வொரு பெட்ரோலுக்கும் குறைந்தது இரண்டு கான்ஸ்டேபிலாவது அல்லது ஒரு கான்ஸ்டேபில் ஒரு தலையாரியுமாவது போகவேண்டும்.

2. ஸ்டேஷனை விடுதலும் திரும்பி வருவதும்.—பெட்ரேலுக்கு குறித்தநேரத்தில் புறப்பட்டுப்போய் குறித்தநேரத்தில் திரும்பிவரவேண்டும்.

3. ரோட்டின் நீளம்.—ரோட்டில் எவ்வளவு தூரம் பெட்ரேல் செய்யவேண்டுமென்று அவர்களுக்கு நன்ருய்த் தெரிவிக்கவேண்டும்.

4. லாந்தரும் ஆயுதங்களும்.— கான்ஸ்டேபில்களுக்கு லாந்தர், துப்பாக்கி, குண்டு தோட்டா இவைகள் கொடுக்கவேண்டும். அவைகளை அவர்கள் மறுநாட் காலையில் ஸ்டேஷனில் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

5. பெட்றேலும் சிரம பரிகாரமும்.—சிரம பரிகாரம் செய்துகொள்ள குறிப்பிட்ட நேரம்வரையில் ரோட்டில் ஜாக்கிரதையாய் பெட்ரோல் செய்யவேண்டும். அதற்காக ஏற்பட்ட இடத்தில்தான் அவர்கள் சிரம பரிகாரம் செய்துகொள்ளவேண்டும்.

6. பொறுப்பு.—அவர்கள் பெட்ரோல் செய்கிற ரஸ்தாவில் யாதொரு குற்றம் நடவாதபடி பார்த்துக்கொள்ள ஜவாப்தாரியாவார்கள்.

7. எதிர் பெட்றேல்காரர்களின் கையெழுத்து.—பக்கத்து ஸ்டேஷனிலிருந்து பெட்ரோல் வந்தால் அந்த கான்ஸ்டேபிலேச் சந்தித்து அவர்கள் புஸ்தகத்தில் கையெழுத்துச்செய்து தங்கள் புஸ்தகத்திலும் அவர்கள் கையெழுத்தை பெற்றுக்கொள்ளவேண்டும்.

8. டியூட்டி.—ராத்திரி பெட்ரோல்செய்த கான்ஸ்டேபிலுக்கு பகலில் டியூட்டி நியமிக்கக்கூடாது.

9. தபால்.—பெட்ரோல் செய்கிற கான்ஸ்டேபில் தபால் கொண்டுபோகக் கூடாது.

10. கெட்ட நடத்தைக்காரர்கள்.—பெட்ரோல் செய்கிற கான்ஸ்டேபில்கள் ரோட்டுக்குச் சமீபத்திலிருக்கிற கிராமங்களிலுள்ள கெட்ட நடவடிக்கைக்காரர்களே தனிக்கை செய்து வரவேண்டியது.

கார்டு.

(1) ஒவ்வொரு ஜில்லா எட்குவார்ட்டரி லிருக்கப்பட்ட உசூர் கஜாநுவுக்கும்.

(2) ஜில்லா செஷன் கோர்ட்டுக்கும்.

(3) ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டு ஆபீசுக்கும் சப் டிவிஷனல் போலீஸ் ஆபீசுகளும்.

(4) தாலூக்கா கஜானாவுக்கும் சப் ஜெயிலுக்கும் கார்டுகள் நியமிக்கப்படும்.

அலுவலைப்பற்றின விதிகள்.—கார்டிலிருக்கப்பட்ட ஒவ்வொரு கான்ஸ்டேபிலும் டியூட்டி செய்யவேண்டிய சரியான மணிகளையும் கார்டு விதிகளையும் குறித்த ஒரு அச்சுப்பாரம் அவர்கள் தெரிந்துகொள்வதற்காக ஒவ்வொரு கார்டின் அறையிலும் தொங்கவிட்டிருக்கும.

கார்டைப்பற்றிய பொதுவான விதிகள்.

1. அலுவல் நேரம்.—பகல் டியூட்டியானது காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரையிலும் இரா டியூட்டி மாலை 6 மணிமுதல் காலை 6 மணி வரையிலும்.

2. (i) டியூட்டி நியமித்தல்.—பிரதிதினம் காலை 6 மணிக்கு கார்டு ஆபிசரால் அடுத்த 24 மணி நேரத்துக்கு கார்டிலுள்ள ஒவ்வொரு கான்ஸ்டேபிலுக்கும டியூட்டி நியமிக்கப்படும். அதை கார்டு அறையிலிருக்கும் 113 நெ. பாரம் டியூட்டிரோஸ்டரிலும் பதியப்படும்.

(ii) ஆஜரில்லாமை அல்லது அசௌக்கியம். — டியூட்டிக்கு நியமிக்கப்பட்ட கான்ஸ்டேபில் தன்னுடைய முறை வரும் நேரத்தில் ஆஜரில்லாமலிருந்தாலும் சீக்காய்ப்போய்விட்டாலும் அவனுக்கு பதிலாக வேறொரு கான்ஸ்டேபிலை நியமித்து அவ்விஷயத்தை உடனே 113 நெ. பாரத்தில் பின்பக்கத்திலெழுதி அப்படி எழுதும் உத்தியோகஸ்தன் கையெழுத்து செய்யவேண்டியது.

3. **பாராவின் நேரம்.**—எல்லா கார்டிலும் சாதாரண மாய் மூன்றுமணிக்கொருதரம் பாரா மாற்றப்படும். உ சூர் கஜானுவில் மாத்திரம் இரண்டு மணிக்கொருதரம் மாற்றப்படும்.

4. **கார்டிலிருந்து ஆஜரில்லாமலிருத்தல்.**—பகல்காலத்தில் ஒவ்வொரு பாராக்காரனும் தன் பாரா முடிந்தவுடன் தான் எவ்வளவு நேரம் பாரா கொடுத்தானே அவ்வளவு நேரம் கார்டைவிட்டு போகலாம்.

திரும்பி வந்தவுடன் அலுவல்.—அவர்கள் திரும்பிவந்த வுடனே அங்கேயே காத்திருக்கவேண்டியது. அவ்விட த்திலிருந்து வெளியே போகாமல் அங்கேயே சொற்ப வேலைகளுக்கு அவர்களை உபயோகப்படுத்தலாம்.

5. **மாலை 6 மணிக்குப்பிறகு ஆஜர்.**—கஜானு சப்ஜெயி ல் பாராக்காரர்கள் எல்லாரும் மாலை 6 மணிக்குத் திரு ம்பி வரவேண்டியது. மாலை 6 மணிக்கு அதற்கு முன்னிரு ந்த பாராக்காரனை மாற்றினவுடன் கார்டாபீசரும் அந்தப் பாராக்காரனும் மாலை 3 மணிமுதல் 6 மணி வரையில் டியூட்டியிலிருந்த இதர கான்ஸ்டேபில்களும் மாலை 8 மணி வரையில் கார்டில் ஆஜரில்லாமலிருக்கலாம்.

6. **மாலை 8 மணிக்குப் பிறகு ஆஜர்.**—கார்டிலுள்ள எல் லாரும் இராத்திரி 8 மணிக்குப் பிறகு ஆஜரிலிருக்கவே ண்டும்.

தூங்குதல்.—டியூட்டியிலில்லாதவர்கள் கார்டு அறை யில் தங்கள் ஆயுதங்களுக்குப் பக்கத்தில் யூனிபாரத்து டன் தூங்கவேண்டும். அவர்கள் எச்சரிக்கை செய்யப் பட்டவுடனே டர்ன் அவுட்டாகத் தயாராயிருக்கவேண் டும்.

7. **கார்டு டர்ன் அவுட் செய்தல்.**—இரவில் விசிட்டிங் ரவுண்ட்ஸ் வருகிற எந்த போலீஸ் ஆபீசருக்கும் கார்ட் டர்ன் அவுட்டாகவேண்டியது.

8. **எந்த ஆபீசர்களுக்கு கார்டு டர்ன் அவுட் செய்யவேண்டியது.**—போலீஸ் கார்டு காலை 6 மணிமுதல் 8 மணிவரை யில் கீழே கூறப்பட்ட ஆபீசருக்கு டர்ன் அவுட் செய்து மரியாதையாக பிரசண்ட் ஆர்ம்ஸ் செய்யவேண்டும் :—

(1) ஜில்லா ஜட்ஜ்கள் ;

(2) 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் ;

(3) இனிஸ்பெக்டர் அந்தஸ்துக்கு மேல்பட்ட போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ;

(4) அவர்களுடைய சர்க்கில் இனிஸ்பெக்டர் ;

(5) மிலிட்டெரி ஸ்டேஷன்களில் கம்மாண்டிங் ஆபீசர் ;

(6) கண்டோன்மெண்ட் மாஜிஸ்டிரேட், கண்டோன்மெண்ட் கம்மாண்டிங் ஆபீசர்.

9. **கார்டு மாற்றுதல்.**—கார்டு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலையிலும் மாற்றப்படும்.

10. **கார்டு டியூட்டியில் அசட்டை.**—கார்டு டியூட்டியில் அசட்டையாயிருப்பவர்கள் கடினமாய் தண்டிக்கப்படுவார்கள். கார்டில் யாராவது லீவு பெற்றுக்கொள்ளாமல் ஆப்செண்டாயிருந்தாலும் அல்லது டியூட்டியிலிருந்த பாராக்காரன் அசட்டையாயிருந்தாலும் கார்டுஆபீசர் அச்சமாசாரத்தை உடனே பாரா புஸ்தகத்தில் எழுதி

தன் மேலான உத்தியோகஸ்தர்களுக்கு கிரமப்படி ரிப்போர்ட் செய்யவேண்டியது.

பாராக்காரன் அறிந்துகொள்ளவேண்டிய பொதுவான விதிகள்.

1. தன்பாராமுறையில் ஜாக்கிரதையுள்ளவனாயிருக்க வேண்டும்;

2. உடுப்பை (யூனிபாரம்) தரித்திருக்கவேண்டும்;

3. உட்கார்ந்துகொண்டாவது சோம்பத்தனமாய் உலாவிக்கொண்டாவது இருக்கக்கூடாது;

4. டியூட்டியிலிருக்கும்போது யாருடனும் பேசக்கூடாது;

5. எக்காரணத்தைக்கொண்டாவது தன் ஆயுதங்களை கைவிடக்கூடாது;

6. தன்னை பாரா டியூட்டியிலிருந்து மாற்றும்வரையில் தன் பாராவை விட்டுப்போகக்கூடாது.

ஆயுதம், குண்டு, வைத்திருத்தல்.

1. பகல்காலத்தில்—பாராக்காரன் பகல்காலத்தில் பயனட் வைத்திருக்கவேண்டும்.

2. இராக்காலத்தில்.—மாலை 6 மணிக்குப்பிறகு பயனட் பிக்ஸ்செய்த துப்பாக்கியை ஸ்லோப் ஆர்ம்ஸ்செய்து உலாவிக்கொண்டிருக்கவேண்டும். நின்றுகொண்டிருக்கும்போது கையில் ஸ்லோப்பிலாவது ஆர்டரிலாவது அல்லது ஸ்டாண்ட் அட் ஈசிலாவது வைத்திருக்கவேண்டும்.

3. **குண்டு முதலியவைகள்.**—பாராக்காரனிடத்தில் ஐந்து குண்டு தோட்டாக்கள் அவனுடைய டப்பாவில் வைத்திருக்கவேண்டும். மீதிகுண்டுகளை கார்டாபீசர் தன் பெட்டியில்போட்டு பூட்டிவைத்திருக்கவேண்டும்.

பாராக்கான்ஸ்டேபில் அலுவல்.

1. (i) பாராகொடுப்பதற்குமுன் பாரா கான்ஸ்டேபிலும் கார்டுஆபீசரும் கட்டடத்தைச்சுற்றிவந்து இரவில் லாந்தர் வெளிச்சமகொண்டு ஒவ்வொரு கதவு ஜன்னல தாழ்ப்பாள் பூட்டு சீல் இவைகளையும் கவனித்துப்பார்த்து அறையிலாவது லாக்காப்பிலாவது உள்ள கைதிகளையும் பார்க்கவேண்டியது.

(ii) **பாராபுஸ்தகத்தில் குறிப்பது.**—சரியாயிருந்தாலும் பிசகாயிருந்தாலும் பாராபுஸ்தகத்தில் குறித்து அதில் கையெழுத்துசெய்யவேண்டியது. பாராக்காரன் தான் ஒப்புக்கொண்ட கைதிகளையும் சொத்துக்களையும் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ள ஜவாப்தாரியாகிறான்.

(iii) பிரதிதடவையும் பாரா மாற்றும்போதும் மேற்கூறியபடியே செய்யவேண்டியது.

2. **பாராசமயத்தில் உலாவுதல்.**—கூடுமானமட்டில் கைதிகளுடையவாவது சொத்துக்களுடையவாவது எதிர்ப்பார்வையிலேயே உலாவவேண்டும்.

(1) **விசிட்டிங் ஆபீசர் முதலியவர்களை அட்காய்த்தல்**—சூரிய அஸ்தமனமானவுடனே யாராவது வந்தால் பாராக்காரன் " ஹால்ட் ஹூ கம்ஸ்தேர் " என்று உரக்கச் சொல்லவேண்டியது.

(2) சிநேகிதர்.—வந்தமனிதன் நின்று "பிரண்ட்" (சிநேகிதன்) என்று சொன்னால் பாராக்காரன் "பாஸ் பிரண்ட் ஆல் இஸ்வெல்" என்றுசொல்லி துப்பாக்கியை ஸ்லோப்பில் வைத்துக்கொண்டு நிற்கவேண்டியது.

(3) இதர மனிதர்கள்.—வந்தமனிதன் அன்னியனா யிருந்து அவன் எதிர்ப்பான் என்று நியாயமாய் நம்பக்கூடியதாயிருந்தால் பாராக்காரன் துப்பாக்கியை ஸ்லோப்பி லிருந்து சார்ஜுக்கு கொண்டுவந்து "கார்ட் டர்ன் அவுட்" என்று உரக்கக்கூப்பிடவேண்டியது.

(4) விசிட்டிங் ஆபீசர்.—வந்தமனிதன் விசிட்டிங் ஆபீசராயிருந்து, கேட்டவுடன் விசிட்டிங் ரவுண்ட்ஸ் என்று பதில்சொன்னால் பாராக்காரன் "கார்ட் டர்ன் அவுட்" என்று சொல்லவேண்டியது.

(5) கார்ட் டர்ன் அவுட் ஆகும்போது துப்பாக்கி யில் பயினட் பிக்ஸ் செய்து ஸ்லோப் ஆர்ம்ஸிலிருந்து "பால் இன்" (fall in) ஆகவேண்டியது. கார்ட் ஆபீசர் "பிரசண்ட் ஆர்ம்ஸ்" என்று சொல்லும்போது, கார்டும் பாராக்காரரும் "பிரசண்ட் ஆர்ம்ஸ்" செய்யவேண்டியது.

கஜானா கார்டில் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

1. ஆஜர்.—கார்டாபீசர் பிரதி சாயந்திரம் கஜானாவை மூடும்போதும் காலையில் திறக்கும்போதும் ஆஜரிலிருக்கவேண்டும்.

2. சீல்களைப் பரிசோதித்தல்.—கார்டாபீசர் பாராகாரனுடன் சீல்களைப் பரிசோதிக்கவேண்டியது.

3. கஜானு ஆபீசருடைய சொந்த சீல்.—கஜானு ஆபீசருடைய சொந்த சீலும் கஜானு வெளிக்கதவுக்கு சர்க்கார் சீலுடன் போடப்பட்டிருக்கும். அவருடைய உத்தரவு இல்லாமல் அந்த சீலை உடைக்கக்கூடாது.

4. கஜானு அறையின் பக்கத்தில் லாந்தர்கள்.—கஜானு கட்டடத்தின் பக்கத்தில் சாதாரண விளக்கையாவது நெருப்பையாவத் உபயோகிக்கக்கூடாது. நன்ருய் பந்தோபஸ்தான லாந்தர்தான் உபயோகிக்கப்படவேண்டும் அதையும் கஜானு அறைக்கு வெளிச்சம் தெரியும்படி எதிரில் வைக்கவேண்டும்.

சப்ஜெயில் கார்டைப்பற்றிய விதிகள்.

1. ஜவாப்தாரி.—சப்ஜெயில் அறைக்குள் இருக்கும்போதும் அல்லது வேலைக்காகவோ சாப்பாட்டுக்காகவோ கக்கூசுக்காகவோ, வெளியே கொண்டுபோகும்போதும் கைதிகள் தப்பித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்ள போலீஸ் கார்டு உத்தரவாதியாவர்ர்கள்.

2. சாப்பாடு முதலியவைகளுக்காக சப்ஜெயிலைவிட்டு வார்டர் ஆப்சண்டாயிருக்கும்போது சப்ஜெயில்சாவியை டியூட்டியிலிருக்கப்பட்ட கார்டாபீசர் வைத்துக்கொள்ள வேண்டும்.

3. சாவிகளை உபயோகப்படுத்துதல்.—அந்தச் சாவிகளை மிகவும் அவசியமானசமயம் தவிர மற்ற சமயங்களில் உபயோகப்படுத்தக்கூடாது. ஒவ்வொரு தடவையிலும் அந்த அவசியமான விஷயத்தை சப்ஜெயில் சூபரிண்டெண்டுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியது.

4. கைதிகள் உள்ளேபோதும்போதும் வெளியில்வரும்போதும் கார்டு எங்கேயிருப்பது.—கைதிகள் சப்ஜெயிலுக்குள்ளாவது, வெளியிலாவது போகும்பொழுது அவர்கள தங்களை எதிர்த்து மல்லாடினால் தங்கள் ஆயுதத்தை உபயோகிக்க சாவகாசமிருக்கும்படியான தூரத்தில் கார்டு நிற்கவேண்டியது.

5. வெளிமனிதர்கள்.—சப்ஜெயிலுக்கு உள்ளிருக்கும் கைதிகளோடு சப்ஜெயில் சூபரிண்டெண்டின் உத்தரவில்லாமல் வேறே எவரையும் பேசும்படிவிடக்கூடாது.

6. கைதியுடன் பேசுவதற்காக எவனாவது உத்தரவு பெற்றிருந்தாலும் அவனை சப்ஜெயில் அறைக்குள் விடக்கூடாது. பாராக்காரன் அவன் சமீபத்திலிருந்துகொண்டு அவன் கைதிக்கு எதுவும் கொடுக்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

7. புகையிலை முதலியவை.—எந்தக் காரணத்தைக்கொண்டாவது புகையிலையையாவது நெருப்புக்குச்சியையாவது அல்லது தப்பித்துக்கொள்ளுவதற்குச் சாதகமான வேறெந்த வஸ்துவையாவது சப்ஜெயில் அறைக்குள் விடக்கூடாது. கைதிகள் அவர்கள் உடுத்தியிருக்கும் உடை தவிர வேறெதுவும் வைத்திருக்கக்கூடாது.

சப்ஜெயிலிலிருந்து தப்பித்தல் அல்வது தப்பிக்க எத்தனித்தல்.—(1) கைதிகள் தப்பிக்க எத்தனித்தால் கார்டு கூடுமான எல்லாவிதத்திலும் தடுக்கவேண்டும்.

(2) கைதி தப்பித்துக்கொண்டு போய்விட்டால் கார்டாபீசர் கைதியை பின்தொடர்ந்து பிடிப்பதற்காக கார்டிலுள்ள பலாட்டியனும் சிறுவயதுள்ளவனுமான ஒன்று அல்லது இரண்டுபேரையனுப்பி அந்த சமாசாரத்தை

உடனே ஸ்டேஷனுபீசருக்கும் சப்ஜெயில் சூபரிண் டெண்டுக்கும் தெரிவிக்கவேண்டும்.

(3) கீழேகண்ட சந்தர்ப்பங்களில் தவிர ஏனைய சமயங்களில் கார்டு அவனை கொல்லவாவது சுடவாவது கூடாது. அவையாவன :—

(i) கார்டிலுள்ளவர்களுடைய உயிருக்கு அபாய முண்டாகும்படி எதிர்த்தால் சொந்தப்பாதுகாப்பின் நிமித்தம் ; அல்லது

(ii) மரணதண்டனையாவது ஆயுள்பரியந்தம் தீ வாந்திர தண்டனையாவது விதிக்கப்பட்ட கைதி தப்பித்து ஓடுவதை வேறெந்த விதத்திலும் தடுக்கக்கூடாத பட் சத்தில்.

எஸ்கார்ட்டைப்பற்றிய விதிகள்.

போலீஸ் கைதி.—போலீசாரால் அரஸ்டு செய்யப் பட்டு மாஜிஸ்டிரேட்டினிடம் கொண்டுபோகுமுன் போ லீஸ் பந்தோபஸ்திலிருப்பவனை போலீஸ் கைதியென்று சொல்லப்படும்.

மாஜிஸ்டிரேட் கைதி.—மாஜிஸ்டிரேட்டின் முன்பாக ஆஜர்ப்படுத்தி ரிமாண்டு செய்யப்பட்ட கைதிக்கு மாஜிஸ் டிரேட்டினுடைய கைதியென்று பெயர். அவனை அனேக மாய் சப்ஜெயிலில்தான் அடைத்துவைக்கப்படும்.

கைதிகளுக்கு கைவிலங்கு போடுவது.

1. கைதிகளுடைய நடத்தையினுலாவது அல்லது அவர்களுடைய குற்றத்தின் தன்மையினுலாவது தப்பித் துக்கொண்டு ஓடிப்போவார்கள் என்று தோன்றும்

பட்சத்தில் அவர்களுக்குமாத்திரந்தான் கைவிலங்கு போடலாம்.

குறிப்பு.—விசேஷமாய் தப்பித்துக்கொள்ள எத்தனிக்கக்கூடிய கைதிகள்—

(i) நீண்டகாலம் காவலிலிருக்கும் தண்டனையை யடையக் கூடியவர்களும் ஷை தண்டனையை யடைந்தவர்களும்.

(ii) கெட்டநடத்தைக்காரர் என்று ஏற்பட்டவர்கள், மூந்தி தண்டனை யடைந்தவர்கள்.

(iii) துணிந்தவும் அபாயகரமுமான கைதிகள்.

(iv) இதற்கு முன்னால் தப்பித்துக்கொண்ட அல்லது தப்பிக்க எத்தனித்த கைதிகள்.

2. ஜாமீன்பேரில் விடக்கூடிய குற்றம் சாட்டப்பட்டவர்கள்—ஜாமீன்பேரில் விடக்கூடிய குற்றம சாட்டப்பட்ட கைதிகளுக்கு ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் உத்தரவின்பேரில் முக்கியமான கேசுகளில்தவிர அவர்களுக்கு கைவிலங்கு போடக்கூடாது. அவ்விசேஷமான சந்தர்ப்பங்களைப் பற்றி அவர் ஸ்டேஷன் ஜெனரல் டயரியில் ரிப்போர்ட் செய்யவேண்டியது.

3. **தண்டனையடையாத ரிமாண்டிலிருக்கப்பட்ட கைதிகள்**—(i) போலீசார் வசத்திலுள்ள தண்டனையடையாத கைதிகளுக்கும், ரிமாண்டிலிருக்கப்பட்ட கைதிகளுக்கும் சந்தர்ப்பங்களுக்குத்தகுந்தபடி அவசியமாயிருந்தால் ஒழிய ஸ்டேஷன், ஜெயில், கோர்ட் இவைகளுக்குப்போகும் போதாவது அல்லது அங்கேயிருந்துவரும்போதாவது கைவிலங்கு போடக்கூடாது. மேற்கூறிய சந்தர்ப்பங்களாவன:—அவர்கள் செய்த குற்றத்தின் தன்மையினாலாவது அல்லது அவர்களுடைய நடத்தையினாலாவது

அவர்கள் எதிர்த்து மல்லாடுவார்கள் என்ருவது அல்லது தப்பித்துப்போக எத்தனப்படுவார்களென்ருவது அல்லது பிடிபடவேண்டியவனை பிடிக்கவொட்டாமல் தடுக்க முயற்சி செய்வார்களென்ருவது உண்டாகும் தோற்றங்கள்.

(ii) மாஜிஸ்டிரேட்டின் உத்தரவு அவசியம்.—சப் ஜெயில் அல்லது கோர்ட்டு எல்லேக்குள் கைதிக்குக் கைவிலங்கு போடுவதாயிருந்தால் மாஜிஸ்டிரேட்டாருடைய எழுத்துமூலமான உத்தரவை அடையவேண்டியது.

(iii) பெண் கைதிகளுக்கு கைவிலங்கு போடக்கூடாது.

(iv) தண்டனையடைந்த கைதிகள்.—தண்டனையடைந்த கைதிகளுக்கு அவர்கள் ரயில் மார்க்கமாய்ச் செல்லும்போதும் அல்லது வெகுதூரம் போகும்போதும் கைவிலங்கு போடவேண்டும். அபாயகரமான கைதிகளாயிருந்தால் சங்கிலியுமகூட உபயோகப்படுத்தலாம்.

எஸ்கார்ட்டைப்பற்றிய பொதுவிதிகள்.

1. ரோட் மார்க்கமாய் எஸ்கார்ட்காரர் ரிபோர்ட் செய்தல்.—ரோட்மார்க்கமாய் எஸ்கார்ட்போகிறவர்கள இரவில் தங்கினுலும் தங்காவிட்டாலும் மார்க்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் ரிப்போர்ட் செய்துகொள்ளவேண்டும்.

2. திரும்புதல்.—எஸ்கார்ட் கொணடுபோய் ஒப்புவித்தவுடன் தனித்தனியாய் வராமல் எல்லாரும் சேர்ந்தாப்போல் திரும்பவேண்டும்,

3. ஜில்லா அல்லது சப் டிவிஷன் எட்குவார்ட்டரில் ரிபோர்ட் செய்தல்.—ஜில்லா அல்லது சப் டிவிஷன் எட்குவார்ட்

டருக்கு கைதியை அல்லது கஜானவை எஸ்கார்ட்செய்து ஒப்புவித்த போலீசார் அவ்விடத்திலுள்ள சூபரிண்டெண்ட் அல்லது அசிஸ்டண்ட் சூபரிண்டெண்ட் ஆபீசில் ரிப்போர்ட் செய்துகொள்ளவேண்டும். தங்களுடைய பாஸ்போர்டில் மானேஜர் அல்லது எட்கிளார்க் அல்லது ரிஸர்வ் இன்ஸ்பெக்டரிடம் கையெழுத்து பெற்றுக்கொள்ளவேண்டியது.

4. சென்னபட்டணத்தில்.—பட்டணத்துக்கு எஸ்கார்ட்டு செய்து போகப்பட்ட போலீசார் போலீஸ் கமிஷனர் ஆபீசில் ரிப்போர்ட் செய்துகொள்ளவேண்டியது. அவர்கள் ஆயுதங்களையும், கிட்களையும் பூக்கடை போலீஸ் ஸ்டேஷனிலாவது, வாலாஜாரோட் போலீஸ் ஸ்டேஷனிலாவது வைக்கலாம்.

கைதிகளை ரோட் மார்க்கமாய்க் கொண்டுபோகும்போது
அநுசரிக்கவேண்டிய விதிகள்.

1. நடத்திக்கொண்டுபோதல்.—கைதிகளை 24 மணி நேரத்துக்குள் 15 மைலுக்கதிகமாய் நடத்திக்கொண்டு போகக்கூடாது.

2. ராத்திரி பிரயாணம்.—இரவில் ரோட் மார்க்கமாய் கைதிகளை கொண்டுபோகக்கூடாது.

3. திருட்டுச்சொத்து சுமத்தல்.—எஸ்கார்ட் செய்யும் போலீசாரை திருட்டுச்சொத்தைசுமக்கும்படி நிர்ப்பந்திக்கக்கூடாது. அவைகளைக் கைதிகளாவது அல்லது கூலியாட்களாவது கொண்டுபோகவேண்டும்.

4. இரவில் தங்குவதும் கைதிகளை காவலில் வைப்பதும்.—(i) இரவில் தங்கும்போது கைதிகளைக் கூடுமானல்

மார்க்கத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் அடைத்துவைக்கவேண்டும்.

(ii) அல்லது கிராமச்சாவடியில் அடைத்துவைத்து பத்திரமாய் காவல் காத்துக்கொள்ளவேண்டும்.

(iii) சொந்த வீடுகளில் அவர்களை ஒருபோதும் அடைத்துவைக்கக்கூடாது.

5. ஸ்டேஷன் லாக்கப்பில் அடைத்துவைக்கும்போது அதிகமான கார்டு.—போலீஸ் லாக்கப்பில் அடைத்துவைக்கும்போது அந்த ஸ்டேஷனுபீசர் வேண்டிய அதிகப்பாராக்காரர்களை நியமிக்கவேண்டும். ஆனால் கைதிகள் தப்பித்துக்கொள்ளாதபடி பார்த்துக்கொள்ளுவதற்கு எஸ்கார்ட்டுசெய்யும் போலீசார்தான் ஜவாப்தாரி.

6. கைதிகள் சீக்காய்போவது.—வழியில கைதிகள் சீக்காய்ப்போய்விட்டால் அவர்களை சமீபத்திலுள்ள ஆஸ்பத்திரிக்காவது டிஸ்பென்சரிக்காவது சிகிச்சைக்காக வண்டியில் கொண்டுபோகவேண்டும்.

குறிப்பு.—அதற்கு வண்டிவாடகையை தன் ஸ்டேஷனுபீசர் இடத்திலாவது அல்லது அந்த கேசுக்கு அதிகாரமுள்ள மாஜிஸ்டிரேட்டிடமாவது பெற்றுக்கொள்ளலாம். அதறகாக வண்டிக்காரனுடைய ரசீதையும் வண்டி வாடகைக்காக ஒரு பில்லையும் அவரிடத்தில் ஆஜர்செய்யவேண்டியது.

7. ஒரு கைதி சீக்கானல் செய்யவேண்டிய நடவடிக்கை.—அநேக கைதிகளை எஸ்கார்ட்டு செய்துகொண்டுபோகும்போது, அவர்களில் ஒரு கைதி வழியில் சீக்காய்ப்போய்விட்டால் சமீபத்திலிருக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷனில் அந்த ஸ்டேஷன் அவுஸ் ஆபீசர் வசத்தில் சிகிச்சைக்கு

ஏற்பாடுசெய்யும்பொருட்டு விட்டுவிடவேண்டியது. அந்தச்சமாசாரத்தை கைதியை அனுப்புவித்த ஆபீசருக்கும் கைதிகளைக் கொண்டுபோய் ஒப்புவிக்கவேண்டிய ஆபீசருக்கும் தெரியப்படுத்தவேண்டியது.

8. காலரா கண்டால் நடவடிக்கை.—எஸ்கார்ட்செய்து போகப்பட்ட போலீசாருக்காவது கைதிகளுக்காவது காலரா கண்டால் அந்த பார்ட்டிமுழுவதும் அங்கேயே தங்கி சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்காவது ஆஸ்பத்திரிக்காவது மருந்துக்கும் மேல்நடவடிக்கைக்கும் தெரியப்படுத்தவேண்டியது.

9. மரணமும் நடவடிக்கையும்.—கைதிகள் எஸ்கார்ட் செய்துபோகும்போது அவாகளில் யாராவது ஸ்டேஷனில் இறந்துபோய்விட்டால் அந்தப் போலீசார் வசத்திலும், ரஸ்தாவிலாவது அல்லது கிராமத்திலாவது இறந்துபோய்விட்டால் சமீபத்திலுள்ள கிராம மாஜிஸ்டிரேட் வசத்திலும் அந்தப் பிரேதத்தை விட்டுவிடவேண்டியது. எஸ்கார்ட்டு கொண்டுபோகப்பட்ட தலைமை உத்தியோகஸ்தன் விசாரணைக்காக சமீபத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டியது.

10. மாஜிஸ்டிரேட்டினுடைய கைதியாயிருந்தால் எஸ்கார்ட் செய்யும் போலீசார் மாஜிஸ்டிரேட்டிடமிருந்து,—

(i) மாஜிஸ்டிரேட் கைதிகளுக்கு ஒரு நமூனு.—எந்த கைதிகளை எஸ்கார்ட் செய்துபோகவேண்டுமோ அந்த கைதிகளின் தொகையும் அவர்கள் சம்பந்தப்பட்ட குற்றத்தின் தன்மையும் அடங்கிய ஒரு நமூனு கொண்டு

போகவேண்டியது. அது இல்லாவிட்டால் எங்கே கொண்டுபோகிறுேே அந்த இடத்தில் அந்த கைதிகளைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள்.

(ii) செலவுத்தொகை.—கைதிகளுக்குச் சாப்பாடு வகையராவுக்குவேண்டிய தொகையும் அல்லது அவர்கள் எத்தனை நாள் ஆப்சண்டாயிருக்கவேண்டுமோ அத்தனை நாட்களுக்கு கைதிகளுக்குச் சாப்பாட்டுக்குவேண்டிய போதுமான சாமான்கள் கொண்டுபோகவேண்டியது.

குறிப்பு.—செலவுக்கு பணம் பெற்றுப்போகும் போலீசார் செல்வழித்த பணத்துக்கு கணக்குத் தயார்செய்து திரும்பிவந்தவுடன் அதையும் மிச்சப்பணத்தையும் மாஜிஸ்திரேட்டினிடம் கொடுத்துவிடவேண்டியது.

கைதியை அஜாக்கிரதையினுல் தப்பித்துப்போகவிட்டால் தண்டனை (இ. பி. கோ. 223 செ.)—மாஜிஸ்டிரேட்டு முன்பாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதின்பேரில் கான்ஸ்டேபில் 2 வருஷம் வெறுங்காவலுக்காவது அபராதத்திற்காவது அல்லது இருவித தண்டனைக்குமாவது உள்ளாவான். மேலும் வேலையிலிருந்து அவன் நீக்கிவிடப்படுவான்.

கைதிகளை ரெயில்மார்க்கமாய் கொண்டுபோவது.

1. எஸ்கார்ட்டின் பலம்.—1 முதல் 4 கைதிகளுக்கு 2 கான்ஸ்டேபில்கள்.

5, 6 கைதிகளுக்கு 3 கான்ஸ்டேபில்கள்,

7 முதல் 10 கைதிகளுக்கு 1 எட்கான்ஸடேபிலும் 4 கான்ஸ்டேபில்களும்.

2. ரேயில்வே வாண்டு.—எஸ்கார்ட்டு அனுப்பும் உத்தியோகஸ்தர் எஸ்கார்ட் செய்கிற போலீசாருக்கும்

கைதிகளுக்கும் போவதற்கும் எஸ்கார்ட்டு திரும்பி வருவதற்கும் ரெயில்வேவாரண்டு கொடுப்பார்கள். அதை எஸ்கார்டு செய்யும் போலீஸ் உத்தியோகஸ்தர் ரெயில்வே ஸ்டேஷனில் புக்கிங் கிளார்க்கிடம் கொடுத்து அதற்குப்பதிலாக டிக்கட் பெற்றுக்கொள்ள வேண்டியது.

3. இடம் ரிசர்வ் செய்வது.—கைதிகளும் போலீசாரும் சேர்ந்து 4 பேர் அல்லது அதற்கு மேற்பட்டால் ரயில் வண்டியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிக்கம் பார்ட் மெண்டுகள் ரிசர்வ் செய்யவேண்டியது. 3 பேர் அல்லது அதற்குக் குறைந்திருந்தால் தனிக் கம்பார்ட் மெண்டு வேண்டியதில்லை. ஆனால்,—

(i) மிலிட்டேரி கைதியாயிருந்தாலும்,

(ii) பைத்தியக்காரனாயிருந்தாலும்,

(iii) அபாயகரமான கைதியாயிருந்தாலும்

3 பேருக்குக் குறைந்திருந்தாலும்கூட தனிக்கம்பார்ட் மெண்டில்தான் கொண்டுபோகவேண்டும்.

4. ரயில்வேவாரண்டில் கேட்கப்பட்டுள்ள தனிக் கம்பார்ட்மெண்டுகளை ரயில்வே உத்தியோகஸ்தர்கள் ரிசர்வ் செய்திராவிட்டால் எஸ்கார்ட் செய்யப்பட்ட தலைமை உத்தியோகஸ்தன் வாரண்டில் "பார் ரெயில்வே" (For Railway) என்னும் தலைப்பின் கீழும் "பார் சூபரிண்டெண்டு" (For Superintendent) என்னும் தலைப்புள்ள 4-வது கலத்தில் அச்சங்கதியைக் குறிக்க வேண்டியது.

5. மெயில் டிரேயின்.—ரயில்வேவாரண்டில் தனியாய் கண்டிருந்தாலொழிய எஸ்கார்டுகள் மெயில்டிரெயினில் கைதிகளைக் கொண்டுபோகக்கூடாது.

6. டிரேயினில் எஸ்கார்ட்டு செய்யவேண்டிய விதம்.—கைதிகளை கம்பார்ட்மெண்டில் ஜன்னலண்டையாவது கதவண்டையாவது உட்காரவைக்கக்கூடாது.

7. எஸ்கார்ட் செய்யும் போலீசார் ஒவ்வொரு கதவண்டையிலும் உட்கார்ந்துகொண்டும் கைதிகளை தங்களுக்கு மத்தியில் வைத்துக்கொண்டும் போகவேண்டும். ஆயுதங்களை தங்கள் சமீபத்தில் பத்திரமாய் வைத்திருக்கவேண்டும்.

8. கைதிகளை டிரேயினிலிருந்து வெளியே கொண்டுவருதல்.—கைதிகளில் எவனாவது மலஜலோபாதைக்காக வெளியே போகவேண்டுமென்று சொன்னால் எஸ்கார்ட் செய்யும் கான்ஸ்டேபில்களில் ஒருவன் அவனை வண்டி அதிகநேரம் நிற்கக்கூடிய பெரிய ஸ்டேஷன்களிலாவது தண்ணீருக்காக நிற்கும் ஸ்டேஷன்களிலாவது வெளியே (பிளாட்பாரத்திலுள்ள கக்கூஸ்) கொண்டுபோகலாம். அப்படிப்பட்ட சமயங்களில் வேண்டுமானால் கை விலங்கும் சங்கிலியும் போடலாம்.

ரோட்டுமார்க்கமாய் கஜானா எஸ்கார்ட்.

1. எஸ்கார்ட்டின் பலம்.—2,000 ரூபாய்க்கு மேல்படாத தொகைக்கு சாதாரணமாய் 1 எட் கான்ஸ்டேபிலும் 2 கான்ஸ்டேபில்களும், லக்ஷம் ரூபாய்க்கு 2 எட் கான்ஸ்டேபில்களும் 12 கான்ஸ்டேபில்களும், லக்ஷத்துக்கு மேற்

பட்ட தொகைகளுக்கு மேலான உத்தியோகஸ்தர்களில் சார்ஜெண்டாவது சப்இன்ஸ்பெக்டராவது அல்லது இன்ஸ்பெக்டராவது அந்த எஸ்கார்ட்டின் தலைமை உத்தியோகஸ்தராயிருக்கவேண்டும்.

2. இரவில் எஸ்கார்ட் செய்தல்.—ஜனங்கள் சாதாரணமாய் போக்குவரத்தான ரோட்டுகளில் கஜானு எஸ்கார்ட்டு இரவில் செய்யலாம். ஆனல் பொழுது சாய்ந்தவுடன் கஜானு இறக்கவாவது ஏற்றவாவது செய்யலாகாது.

3. சர்க்கார் கஜானு எடுத்துப்போகும் வண்டிகளுக்கு டோல்கேட்டுகளில் சுங்கம் கொடுக்கத்தான் வேண்டும்.

4. கஜானு கொண்டுபோகும் வண்டிகள்.—எஸ்கார்ட்டு கண்பார்வையிலேயே இருக்கும்படி கஜானு கொண்டு போகும் வண்டிகள் ஒன்றுக்கொன்று எவ்வளவு சமீபமாயிருக்கலாமோ அவ்வளவு சமீபமாயிருக்கவேண்டும். எஸ்கார்ட் கான்ஸ்டேபில்கள் வண்டிகளுக்கு இரண்டு பக்கத்திலும் பின்பக்கத்திலும் போகவேண்டும். எஸ்கார்ட் ஆபீசர் வண்டிக்குப் பின்னல் இருக்கவேண்டியது.

5. வண்டி ஓட்டுகிறவர்கள்.—கஜானுவண்டி ஓட்டிக் கொண்டுபோகிறவர்களை வழியில் பிரயாணம் செய்யும் மற்றவர்களுடன் பேசிக்கொண்டுபோகும்படி விடக்கூடாது.

6. ஆயுதங்கள்.—துப்பாக்கிகளில் பயனட்டை பிக்ஸ் செய்து எடுத்துப்போகவேண்டும்.

7. எஸ்கார்ட் நிற்கும்படி நேரிட்டால் துப்பாக்கிகளை "பயில் ஆர்ம்ஸில்" நிறுத்தி அவர்களில் ஒருவரை பாரா கொடுக்கும்படி நியமிக்கவேண்டும்.

ரெயில்மார்க்கமாய் கஜானு எஸ்கார்ட்.

1. **எஸ்கார்ட் பலம்.**—கஜானு வண்டி ஒவ்வொன்றும் சாதாரணமாய் 2 கான்ஸ்டேபில்கள், ஒரு ஆபீசர் இவர்களுடைய சார்ஜிலிருக்கவேண்டும்.

2. **எஸ்கார்ட் உட்காரவேண்டிய விதம்.**—கஜானு எந்த வண்டியில் எடுத்துப்போகப்படுகிறதோ அந்த வண்டிக் கருகாமையில் உள்ள 3-வது கிளாஸ் வண்டியின் கடைசி கம்பார்ட்மெண்டில் எஸ்கார்ட்டுகள்போகவேண்டும்.

3. **கஜானு பத்திரப்படுத்தல்.**—கஜானுவை முழு கார்டின் முன்பாக வண்டியில் வைத்து உடனே வண்டியை இரு பக்கத்திலும் பூட்டிவிடவேண்டும். ரயில்வே கம்பெனியார்கள் போட்டிருக்கும் பூட்டைத்தவிர வண்டியின் ஒவ்வொரு கதவுகளையும் பூட்ட எஸ்கார்ட்டுகளிடத்தில் வேறொரு நல்ல பூட்டு கொடுக்கப்படும். அதன் சாவிகளை எஸ்கார்ட்டின் தலைமை ஆபீசர் வைத்திருக்கவேண்டும்.

